304

# காவேரி

சர்வஜித்து
சித்திரை



பூச்சிகள் நாசினியாகிய

# இது




அசல் DDT தயாரிப்பாகும்; பூச்சிகளை ஒழிக்கும் DDT தயாரிப்புகளை முதன் முதலில் உபயோகத்திற்குக் கொண்டு வந்தவரான ஜே. ஆர். கேய்கி என்பவரளித்துள்ள தயாரிப்பு முறைப்படி தயாரிக்கப்பட்டது. இது வீடுகளில் ஈக்கள், எறும்புகள், கரப்பன் பூச்சிகள், கொசுக்கள், விளக்குப் பூச்சிகள், வெள்ளைப்பாச்சா இவைகளின் தொல்லையை ஒழிப்பதற்குறியதாகும். 10-சத விகிதம் DDT கலந்துள்ள நியோஸிட் இப்பொழுது பவுடர் ஓத்தி சகிதம் 2-அவுன்ஸ் டப்பிகளிலும், ½-பவுண்டு டின்களிலும், 1-பவுண்டு டின்களிலும் கிடைக்கும். ஆஸ்பத்திரி, பாடசாலை முதலிய ஸ்தாபனங்களுக்கு 28-பவுண்டு டின்களிலும் கிடைக்கும்.

## DDT Geigy DDT

நியோஸிட் முற்றிலும் பலனளிக்க வேண்டுமானல் வீட்டின் அறைகள் எல்லாவற்றிலும், முக்கியமாக சமையலறை உக்கிராணங்களிலும் அதை விடாமல் தூவி வரவேண்டும்; இலேசாகத் தூவினல் போதும். பவுடரை தூவி 3 அல்லது 4 தினங்களாவது அப்படியே போட்டிருக்க வேண்டும். தவறுதலாகத் தூத்து தள்ளப்பட்டுவிட்டால் மீண்டும் தூவ வேண்டும். உடனே பலனளிக்கவில்லையே யென்று அவசரப்படவேண்டாம். நியோஸிட் மெதுவாகத்தான் வேலைசெய்யும். ஆனல் பூச்சிகளை அது ஸ்திரமாக ஒழித்துவிடும். சில தினங்களில் அதன்பலன் தெரிந்துவிடும்.

# நியோஸிட்டை

## சரியானபடி உபயோகியுங்கள்!

கேய்கி இன்ஸெக்டிஸைட்ஸ் லிமிட்டெட் — Geigy — நெவில் ஹவுஸ், நிக்கல் ரோடு பல்லார்டு எஸ்டேட், பம்பாய்

D.J.K. 5314 TM

விநியோகஸ்தர்கள்-மைசூர் ஸ்டேட் & ஸீடெட் டிஸ்டிரிக்ட்களுக்கு

M/s முஹம்மது ரஹீம் கலீலி, 99-B உஸ்மான்கான் ரோடு, பெங்களூர் ஸிடி.

தென்னிந்தியாவிற்கு

M/s அடிஸன் & கோ லிமிடெட், மவுண்ட் ரோடு, மதராஸ்

ஏப்ரல் 12உ ரிலீஸ்

# கடகம்

தமிழ் நாடு டாக்கீஸ்....



டைரக்ஷன்
ஆசார்யா
Studio ... MODERN

லெக்ஷ்மி டாக்கீஸ்—குடியாத்தம்
கிரேளன் டாக்கீஸ்—வேலூர்
நியூ ஸினிமா — திருப்பாபுலியூர்
டைமண்ட் ஸினிமா—கும்பகோணம்

Producer... K. P. VARADACHARI

'47 ஏப்ரல் 14உ முதல்
கெயிட்டி டாக்கீஸ்—மதராஸ்

ஸ்திரீகளின்
ஆரோக்கியத்திற்கு



பண்டிட் டி. கோபாலாச்சார்லுவின்
# அருணா
கர்ப்பாசயரோக நிவாரணி



ஸ்திரீகளின் தேக சுகத்திற்கு அவசியமான சிறந்த டானிக். முறைப்படி தவருமல் உபயோகித்தால் ஆரோக்கியத்தை விருத்தி செய்து வாழ்க்கையை நன்கு ரஸிக்கச் செய்யும்.

ஆயுர்வேதாஸ்ரமம் லிட்.
தி-நகர் . . . . மதராஸ்.

EASTERNS 376.






மற்ற மருந்துகளால் குணம் படுத்த முடியாதென அபிப் பிராயப்பட்ட பல்லாயிரக் கணக்கான குழந்தைகள் இவ்வாயுர்வேத மருந்தினால் காப் பாற்றப்பட்டிருக்கின்றனர்.

ஹம்மிஸ்
# லிவர் க்யூர்

[illegible]
எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும் [illegible]
[illegible] வெங்கட்ரமணய்யா & சன்ஸ்.
1/1, [illegible] ரோட், [illegible], மதுரை.
[illegible]

லிவர்க்யூர் பிராஞ்ச் ஆபீஸ்
பெரியதெரு
கும்பகோணம்.

LIVER CURE Branch Office
Parekh Mansion
Sandhurst Road, (West)
BOMBAY 4.

மார்க்கெட்டுகளில் பிரசித்திபெற்றது




குணம், மணம், ருசி இவைகளில் இணையற்றது

**வி. எச். ஆர். பெருங்காயம்**தான்

**வர்ஜீவன்தாஸ் ஹிர்ஜி & Co.,**

194, கோவிந்தப்பநாயகன் தெரு, — ஜி. டி. மதராஸ்.



## BITA CAFFIN

**பிடாகாபின்**

(தலைவலி மாத்திரைகள்)




தலைவலி, பல்வலி, கால்களிலும் மூட்டுகளிலும் வலி, சூதகத்தின் போதுள்ள வலி முதலிய சகல வலிகளையும் நீக்கும். தூக்கமின்மை, மலேரியாசுரம் இவைகளையும் கண்டிக்கும். இருதயத்துக்கோ, குடலுக்கோ எவ்வித தீங்கும் செய்யாது.

எல்லா வியாபாரிகளிடமும் கிடைக்கும்

மூன்று மாத்திரைகள் கொண்ட பாக்கெட் அணு 1

## BITA LAX

**பிடாலாக்ஸ்**

(இனிப்பான சாக்லெட் சுகபேதி)




இலேசாகவும், சுகமாகவும், மலச்சிக்கலை போக்க வல்ல குணமுள்ளது.

எல்லா மருந்து வியாபாரிகளிடமும் கிடைக்கும்

*Stockist:—*

**M/s DADHA & Co., P. T. Madras**

Manufactured by:—

**BOMBAY TABLET MANUFACTURING COMPANY,**

Post Box 2092, 176, Zaveri Bazaar, BOMBAY 2


FAS-348
இன்றியமையாதது
Compass
மாலுமியின் இன்றியமையாத
துணைவன் திசைகாட்டும் கருவி.
நவநாகரீக நங்கையர்
களின் சௌந்தரியத்திற்
கும் மேனி அழகிற்கும்
இன்றியமையாத துணை
எது? அதுதான் மலபார்
லிம்டா சோப்
MALABAR
LIMDA
LIMDA
மலபார்
லிம்டா சோப்
வெஜிடபில் சோப் ஒர்க்ஸ்
கள்ளிக்கோட்டை
புரோப்ரைடர்ஸ்: சேட். N.P.&Co. கள்ளிக்கோட்டை..பம்பாய். .சென்னை

# K. மாலதி



நடிக்கும்

# ராஜகுமாரி



ஏப்ரல்
11ஆ முதல்.




நக்ஷத்திரங்கள்
K மாலதி K. தவமணி தேவி
M.S. பாக்கியம் · T.S. பாலையா ·
M.G. ராமச்சந்திரன் · M.R. சுவாமிநாதன்
M N நம்பியார் · புளிமூட்டை
M E மாதவன் முதலியோர்

டைரக்ஷன் A.S.A சாமி, B.A (HONS.)
பாட்டு: நாராயண கவி.

P.S.M.C. W.A.Menon

ஜூபிடர் பிக்சர்ஸ் சர்க்யூட், மதராஸ் - திருப்பூர்


டிரேட் மார்க்கை
கவனியுங்கள்!
ஒவ்வொரு
வீட்டிலும்
உட்வார்ட்ஸ்
க்ரைப் வாட்டர்
இருக்கவேண்டும்
WOODWARD'S
GRIPE WATER
keeps baby well
1-WW.112-111
W. WOODWARD LTD. LONDON ENGLAND
Agent:—T. T. KRISHNAMACHARI & Co
12A Lingha Chetty Street
G. T. MADRAS.



லோத்ரா

கர்ப்பசய ரோக நிவாரணி

லோத்ரா பல்லாண்டுகளாக இந்திய ஸ்திரீகளுக்கு விசுவாசத்துடன் சேவைபுரிந்து நம்பிக்கையுள்ள கர்ப்பாசய ரோக நிவாரணி என்று புகழையும் ஸ்தாபித்துக் கொண்டுள்ளது.

லோத்ரா கவர்ச்சி மிக்க ஆரோக்கியத்தையும் சக்தியையும் அளிக்கிறது.

CASTECHE 378

ஒரிஸ்ஸா, நைஜாம் சமஸ்தானம், ஆந்திர ஜில்லாக்கள், தமிழ் நாட்டுக்கு

ஏஜண்டுகள்:-

**சீதாராமா ஜெனரல் ஸ்டோர்ஸ்,**

பெர்ஹாம்பூர், செகந்திராபாத், பெஜவாடா, மதுரை.

# பொருளடக்கம்

சர்வஜித்து மலர் 6 | சித்திரை இதழ் 9


| | |
|---|---|
| புத்தாண்டு | 9 |
| கதம்பம் | 11 |
| ஆசிய[illegible] மகாநாடு | 12 |
| ராகுலன்<br>கௌரீ | 18 |
| அருணாவின் புரட்சி வாழ்க்கை<br>யோகி சுத்தானந்த பாரதியார் | 25 |
| "நயத்தக்க நாகரிகம் வேண்டுபவர்"<br>வே. சாரநாதன் | 30 |
| சித்ரா<br>கே. சுந்தரம்மாள் | 33 |
| மல்லிகை மொட்டு<br>ஜி. எஸ். மணி | 42 |
| "தெலுகு விருடு"<br>டாக்டர் வே. ராகவன் | 48 |
| "குப்பையில் மாணிக்கம்"<br>டி. சேஷாத்திரி | 51 |
| மமதா<br>ஜயசங்கர் பிரஸாத் | 57 |
| அடிமைத் தளை<br>து. ராஜகோபால் | 60 |
| தெம்பு<br>வை. சுப்ரமண்யன் | 63 |
| புத்தக விமர்சனம் | 68 |
| தாரா பாய்<br>ராஜம் ராமமூர்த்தி | 70 |
| அனுதாபம் யாருக்கு?<br>மானஸீகன் | 77 |


குறிப்பு:—காவேரியில் வெளியாகும் கட்டுரைகளிலுள்ள பெயர்கள் கற்பனைப் பெயர்கள். அவைகளில் அடங்கிய அபிப்பிராயங்களும் அவற்றை எழுதியவர்களுடையனவே, அவைகளுக்குப் பத்திரிகாசிரியர் பொறுப்பாளியல்ல.




★ ★

**உண்மையான நீம் ஆயில் சோப் இதுதான்**

சருமத்தைப் பாதுகாக்க அவசியமென்று நிபுணர்கள் கருதும் நீம் எண்ணெயினின்றும் தயாரிக்கப்படுவது **மார்கோ** ஒன்றுதான்.

தினசரி **மார்கோ** உபயோகித்து உங்கள் மேனியை பாதுகாருங்கள்.

# மார்கோ சோப்

## டாய்லட் & மெடிஸினல்

**கல்கத்தா கெமிகல்**

CALCUTTA CHEMICAL



**தந்தி:-டைமண்ட்** **போன் No:-54**

# பணத்தைச் சேமித்து வைப்பதற்கு ஒரு திட்டம்

அதை, மக்கள் வைரம், பவுன் நகைகளாகவும், வெள்ளிப் பாத்திரங்களாகவும் செய்துவைத்துக் கொள்ளுவதுதான் சிறந்ததும் எக்காலத்திலும் அழிவில்லாததும் ஆகும். அத்திட்டத்தை நம் பிக்கை, நாணயம், குறித்த டயம் இவற்றுடன் மனத்திருப்தியோடு பெறவும்

**கல்யாண விசேஷங்களுக்கான நகைகளும் பாத்திரங்களும் ரெடி ஸ்டாக்கிலிருந்து பெற்றுக்கொள்ளவும் சிறந்த இடம்,**



## A. R. விஸ்வநாத செட்டியார்

(Son of A. R. ராஜகோபால செட்டியார்)

ஜுவல்லர்

"ரெங்க விலாஸ்" 100 பெரியதெரு

**கும்பகோணம்**

# காவேரி

| சர்வஜித்து மலர் 6 | "ஒசன்றிடுவீ ரெட்டுத்திக்கும்—கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்—" பாரதியார் | சித்திரை இதழ் 9 |
|---|---|---|

## புத்தாண்டு

புத்தாண்டு பிறந்து விட்டது. இந்திய சரித்திரத்திலேயே இது குறிப்பிடத்தக்க ஆண்டாக அமையலாம் என்று எதிர்பார்க்க இடமிருக்கிறது. புதிய வைசிராய் லார்ட் மவுண்ட்பேடன் கட்சித் தலைவர்களுடன் கலந்து இந்தியா சுதந்திர நாடாக அமைய வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யத் தொடங்கியுள்ளார். இவ்வருடத்தில் அரசியல் நிர்ணயசபையும் தன் வேலையைச் செய்து பூர்த்தியான ஒரு திட்டத்தை வகுத்துக் கொடுக்கலாம் என்றும் எதிர்பார்க்க இடமிருக்கிறது.

மக்கள் வாழ்விலும் இவ்வாண்டு மங்களகரமாகவே நடந்து செல்லும் என்று எதிர்பார்க்கலாம். துணிப் பஞ்சமும், உணவுப் பஞ்சமும் இதன் இறுதிக்குள் பறந்து விடும் என்று கூறுகிறார்கள்.

சென்னை மாகாணத்திலும் புதிய மந்திரிசபை அமைந்து விட்டது. பல அறிவாளிகள் நிறைந்த சபை. பிரகாசம் மந்திரி சபையை முறியடித்துப் பதவிக்கு வந்துள்ள சபை. அதைவிடப் பன்மடங்கு திறமையாகப் பொது நலனைக் காத்து மக்கள் சுகித்து வாழ உதவ வேண்டும் என்று கங்கணம் கட்டிக் கொண்டு வந்துள்ள சபை யாகையால், இத்துறையில் இச்சபையினர்கள் தீவிர முயற்சியை மேற்கொள்வார்கள் என்பது திண்ணம்.

இம்மாகாணத்தில் ஜனநாயக முறையில் ஏற்பட்ட ராஜாஜி மந்திரிசபையும் சரி, அதற்குப் பிறகு வந்த பிரகாசம் சபையும் சரி, பிரதமருடைய திறமையைப் பொறுத்து நடந்தவை. ராஜாஜி சபையிலும், பிரகாசம் சபையிலும், மற்ற மந்திரிகளின் ஒத்துழைப்பு இருப்பினும், அவர்களுக்குப் பிராதானியம் இருந்ததாகத் தெரியவில்லை. அப் பிரதமர்கள் மற்ற மந்திரிகளைத் தங்களுடைய பிரகாசத்தினாலோ பிடிவாதத்தினாலோ மறைத்து விட்டார்கள்.

ஆனால் இன்று அமைந்துள்ள சபையில் மந்திரிகள் தங்கள் தங்கள் திறமையினால் பிரகாசிக்கப் போதிய வசதியிருக்கிறது. இப்போதுள்ள பிரதமரைப் பிரகாசிக்கச் செய்வது மற்ற மந்திரிகளின் ஊக்கத்தையும் உழைப்பையும் பொறுத்திருக்கிறது. ராஜாஜியும், பிரகாசமும் மற்ற மந்திரிகளை ஆட்டி வைத்தார்கள். இப்பொழுது அத்தகைய பயமில்லை. எல்லா மந்திரிகளும் ஒத்துழைத்தால் மந்திரி சபைக்கு நல்ல பெயர் வரலாம். இத்தகைய சந்தர்ப்பம் வாய்ப்பது அரிது. எனவே இம் மந்திரிசபையினர் தங்களுடைய உழைப்பினாலும், ஐக்கியத்தினாலும் நன்மை செய்வார்கள் என்று எதிர்பார்க்கிறோம். இம் மந்திரி சபையில் பெரிய மேதைகளில்லை. பொது மக்கள் இது சாதிக்கும் காரியங்களைக் கொண்டுதான் இதை ஆதரிப்பார்கள். எனவே பொது ஜனங்களைக் கலந்து காரியங்களைத் துரிதமாகவும், திடசித்தத்துடனும் நடத்தினால் இம் மந்திரிசபை வெற்றி பெறுவது நிச்சயம்.

19808

# வேலை நிறுத்தம்

மக்கள் ஆட்சி மாகாணங்களில் ஏற்பட்ட உடனடியாக எங்கு பார்த்தாலும் வேலை நிறுத்தங்கள். பொதுஜனங்கள் அவதிப்படுகிறார்கள். கல்லடிக்கு இரையாகிறார்கள். எங்கும் தொழிலாளர் எழுச்சி; அதிகச் சம்பளவேண்டுகோள்; வேலை நிறுத்தம்; போலீஸ் தடியடி; துப்பாக்கிப் பிரயோகம்: இவை சகஜமாகி விட்டன. இவற்றிற்கு அடிப்படையான காரணங்கள் என்ன?

தொழிலாளர் எழுச்சி என்று கூறுவது முழு உண்மையாகாது; விலைவாசிகளின் உயர்வு என்பதும் முற்றிலும் பொருந்தாது. இவற்றிற்கெல்லாம் அடிப்படையான காரணம் சில தொழிற்சாலைகளில் வரும் அமிதலாபம். இதைப் பார்த்து, தொழிலாளிகள் போனஸ் அதிகம் கொடுக்க வேண்டுமென்று வாதாடுகிறார்கள். இதில் நியாயமிருக்கிறது என்று ஒத்துக் கொள்ள வேண்டியதே. ஆனால் பொதுஜனங்களுக்காக ஏற்பட்டிருக்கும் கவர்மெண்டார் செய்ய வேண்டியது என்ன? சமரசம் செய்கிறோம் என்று கூறி நான்கு மாத போனஸை ஐந்தாக்குவதினாலோ மூன்றை நான்காக்குவதினாலோ நிரந்தர நன்மை ஏற்பட்டுவிடாது. அமிதலாபம் ஏற்படும்படி செய்வது கவர்மெண்டாரின் கட்டுப்பாட்டு முறை என்பதை நாம் மறக்கலாகாது. இது பொது மக்களிடமிருந்து பறிக்கப்படும் பணம். எனவே அமித லாபத்தைக் குறைக்க உடனே வழி செய்ய வேண்டும். இந்த அமிதலாபம் பொது மக்களிடமிருந்து கொள்ளையடிக்கப்படும்பணம். அதைப் பகிர்ந்துகொள்வதில் தொழிலாளிகளுக்கும் முதலாளிகளுக்கும் சச்சரவு ஏற்படுகிறது.

கவர்மெண்டார் இதில் தலையிட்டு, சமரச ஏற்பாடுசெய்து பங்குபிரித்துக்கொடுப்பது வெட்கக் கேடான செய்கை. உண்மையில் அவர்கள் செய்யவேண்டியது இவ்வளவு லாபம் சேராமலிருக்கும்படி துணி விலையைக் கட்டுப்படுத்தி மக்களைச் சுரண்டாமலிருக்கும் படி செய்யவேண்டும். இதைச் செய்யாமல் சுரண்டிய பணத்தைப் பங்கு பிரிப்பதில் இவர்கள் ஞாயம் தீர்க்க முற்பட்டால், அது ஒரு நாளும் தீராது.

இது ஒரு புறமிருக்க, இந்த வேலை நிறுத்தங்களினால் பொது நலனே மறந்துவிடுகிறது. ரயில்வே தொழிலாளிகளை எடுத்துக் கொள்ளுங்கள். அனேகமாய் எல்லா ரயில்வேக்களும் கவர்மெண்ட் ரயில்வேக்களாக மாறிவிட்டன. எனவே அதில் வரும் வருவாய் பொதுமக்களைச் சார்ந்ததே. அப்படியிருக்கையில், அதில் அமித லாபம் வந்தால் அதில் பெருவாரியான தொகையைத் தொழிலாளர் நன்மைக்கே செலவழித்து விடவேண்டும் என்ற கிளர்ச்சி எவ்வகையில் பொருந்தும் என்று யோசித்துப் பாருங்கள். பெருவாரியான பங்கு பொது மக்களின் நலத்திற்கென்று ஒதுக்கப்பட வேண்டும். ஸ்தலஸ்தாபனங்களில் என்ன நடக்கின்றன? வருவாயில் முக்கால் பங்கிற்கு மேல் சம்பளப் பட்டுவாடாவுக்கென்று செலவாகி விடுகின்றன. பொதுஜன நலத்திற்குச் செய்யவேண்டிய காரியங்களுக்குப் பணம்போதவில்லை. மக்கள் தங்கள் சுகாதாரத்தையும் பொது நலனையும் காக்க வேண்டி வரி கொடுக்கிறார்கள். ஆனால் சிப்பந்திகள் சம்பளத்துக்குத்தான் அது உதவுகிறது. இன்னும் கிளர்ச்சி நடந்துகொண்டேதானிருக்கிறது.

இதோடு மட்டுமல்ல. எங்கேயாவது ஓர் ஆலையில் வேலை நிறுத்தம் என்றால் ரோட்டில் நடமாடும் ஜனங்களுக்கு ஆபத்து, கல்லடி, மண்டை உடைப்பு, பிழைப்புக்காக வேலைக்குச் செல்ல வசதி இல்லாமல் செய்து விடுகிறார்கள், அனுதாப வேலை நிறுத்தம் என்று சொல்லிக் கொண்டு. எனவே வேலை நிறுத்தத்தினால் எப்பொழுதும் பொதுமக்கள் பாதிக்கப்படுவதும், தாக்கப்படுவதும் சகஜமாகிவிட்டன. இதற்கு முற்றுப்புள்ளி வைப்பது அவசியம்.

தொழிலாளர்கள் வாழ்க்கைத் திறன் உயர வேண்டுமென்பதில் அபிப்பிராய பேதமிருக்க இடமில்லை. அவர்களுக்குக் கிடைக்கும் ஊதியம் போதவில்லை என்று

(13-ஆம் பக்கம் பார்க்க.)

8 MAY 1941
M. DRAS

# கதம்பம்

## விவாக ரத்து!

மிஸ்டர் ஸ்டர்லிங் அவர்களுக்கும் ஸ்ரீமதி ரூபாய் அவர்களுக்கு மிருந்த தாம்பத்தியத் தொடர்பு இந்தமாதம் 8உ யுடன் முறிந்து விட்டது. இனி ரூபாய் அம்மாள் ஒரு கன்னிப்பெண்! சுதந்திரக்கன்னி! சர்வ தேச நாணயச் செலாவணி மார்க்கெட்டில் இனி அம்மாளுக்கு அதிக மதிப்பும் செல்வாக்கும் ஏற்படுவது திண்ணம்!

1931.ஆம் வருஷத்துக்கு முன் ரூபாய் தங்கத்துடன் இணைக்கப்பட்டிருந்தது. ரூபாய்க்கு மதிப்பிருந்தது. ரூபாயைத் தன்னுடன் இணைத்துச் சேர்த்துக் கொண்டால் நன்றாக இலாபமடையலாம் என்ற சுயநல நோக்கங் கொண்டு ஸ்டர்லிங் என்றவறட்சைத் திட்டமிட்டான்; பலாத்காரத்தை உபயோகித்து ரூபாய் அம்மாளை விடாப்பிடியாய்க் கட்டிக் கொண்டு விட்டான்; அம்மாளின் பிறந்த வீட்டிலிருந்து தங்கமாகச் சூறையாடினான்; சாமான்களாக அடித்துக் கொண்டு போனான்; அகப்பட்டதை யெல்லாம் சுருட்டிக் கொண்டான்; கேட்டால் கணக்கில் எழுதி வைத்திருப்பதாகப் பித்தலாட்டம் பேசினான். அம்மாளின் மதிப்பு அய்யாவின் மதிப்பைப் பொறுத்ததாகிவிட்டது! ஸ்டர்லிங் என்ற சீமை நாணயத்துடன் இந்திய நாணய ரூபாய் இணைக்கப் பட்டது பெரும் தவறு என்பதாகப் பொருளாதார நிபுணர்கள் ஒரு மனதாகத் தீர்மானித்து, அந்த இணைப்பை அகற்ற முயற்சிகள், கிளர்ச்சிகள் எல்லாம் செய்தும் பலன் காண முடியவில்லை. எதற்கும் காலானுகூலம் வேண்டு மல்லவா? வந்துவிட்டது நல்லகாலம்.

ஸ்டர்லிங் நாணயத்திற்கும் ரூபாய்க்கு மிருந்த பலவந்தத் தொடர்பு முறிக்கப் பட்டதால் விசேஷ மென்ன? சர்வதேசபண மார்க்கெட்டில் ஸ்டர்லிங்கின் மதிப்புக்கு ஏற்றத் தாழ்வு ஏற்பட்டபோது ரூபாயின் மதிப்பிலும் மாறுதல் ஏற்பட்டு நமக்குப் பல சங்கடங்கள் ஏற்பட்டன. ஒருநாட்டு நாணயத்துடன் இணைக்கப்பட்டு அதன் மதிப்பும் மாறாமல் மற்றத் தேசத்து நாணயங்களாகச் சுலபமாக மாற்றப்படும் வரை இந்த இணைப்பினால் வசதிக் குறைவில்லை. ஆனால் யுத்த காலங்களில் அல்லது இதர நெருக்கடி காலங்களில் ஸ்டர்லிங் நாணயத்தை இதர தேசத்து நாணயங்களாக மாற்றச் சுலபமாய் முடியவில்லை. தவிர நாணயத்தின் மதிப்பு உலகமார்க்கெட்டின் நிலவரத்தைப்பொறுத்து இருக்கவேண்டும். ஆனால் ரிசர்வ்பாங்கி சட்ட விதிகளின்படி ஸ்டர்லிங் நாணயத்தை ஒரு குறிப்பிட்ட விலைக்கே நாம் வாங்கவேண்டும். மற்ற நாடுகள் ஸ்டர்லிங்கின் மதிப்பைக் குறைவாக மதிப்பிட்டாலும் இந்தியா மட்டும் காலமாறுதல் மதிப்பைப் புறக்கணித்து ஒரு ஸ்திரமதிப்புக் கொடுக்க வேண்டும். அது மட்டுமல்ல, நாம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் ரிசர்வ்பாங்கி இந்த ஸ்டர்லிங் நாணயத்தை அளவின்றி வாங்கிக் குவித்து விடலாம்! வெளி மார்க்கெட்டுகளில் நல்ல இலாபத்துடன் விலை போகக்கூடிய இந்தியப் பொருள்களை நாம் சீமைக்கு அனுப்பி விட்டு, கோடிக்கணக்கான ஸ்டர்லிங்குகள் நமக்கு வரவேண்டியதாக ஏட்டில் எழுதிக் காண்பிக்கப் பெற்றோம்!

பிரிட்டனைத் தவிர இதர நாடுகளிலிருந்து நமக்குத்தேவையான சாமான்களைத் தருவித்துக் கொள்வதென்றால் பிரும்மப்பிரயத்தனப் படவேண்டும்.

ஆகவே ஸ்டர்லிங் நாணயத்தின் இணைப்பிலிருந்து ரூபாய் விடுபட்டது நமது நாட்டின் நல்ல காலம். கைத்தொழில்கள், வியாபாரம் முதலியன செழித்துவளர்வதற்கு நல்ல அறிகுறி.

இந்த நல்ல காரியத்தை அதிவிரைவில் முடித்த இந்திய அரசாங்க நிதி மெம்பர் லியாகத் அலிகான் அவர்களுக்கு இந்திய மக்களின் நன்றி உரித்தாகும். இனி சர்வதேச நாணயச் செலாவணி நிதியில் அங்கம் பெற்றுள்ள எல்லா நாடுகளின் நாணயங்களோடும் இந்திய ரூபாய்க்கு இணைப்பும், தொடர்பும் ஏற்படும். நம் நாணயத்தின் மதிப்பும் பெருகும், நாட்டின் அந்தஸ்தும் உயரும்.

# ஆசியா மஹாநாடு



மஹாநாடு கூடும் புராண குவில்லா (பழைய கோட்டை)

"ஆசியா கண்டம் ஒரு பெரிய சுரங்கம். அதைச் சுரண்ட வெள்ளையர்களுக்கே பிரத்தியேக உரிமை. அங்குள்ள மக்களுக்கு இவ்வுரிமை கிடையாது. வெள்ளையர்களின் அடிமைகளாகவும் கூலியாட்களாகவுமே அவர்கள் வாழவேண்டும்" என்ற நியதியைச் சென்ற மஹாயுத்தம் தகர்த்தெறிந்து விட்டது. வெள்ளையன் ஆசியா முழுவதிலுமிருந்தே வெளியேறும் காலம் கிட்டிவிட்டது. ஹென்றி வாலஸ் கூறியபடி இனி உலகம் பாதி அடிமையாகவும் பாதி சுதந்திரமாகவும் இருக்க முடியாது.

உலக மக்களில் பாதிக்கு மேற்பட்டவர்கள் ஆசியாவில் வசிக்கிறார்கள். அவர்கள் விழிப்படைந்து விட்டார்கள். இதற்கு அறிகுறியாக டில்லியில் ஆசியா நாடுகளின் பிரதிநிதிகள் ஒன்று கூடி, ஆசியா நாடுகளின் கூட்டுறவை ஸ்திரப்படுத்த ஒரு ஸ்தாபனம் வகுத்தார்கள். உலக சரித்திரத்திலேயே இப்போதுதான் முதல் முதலாக ஆசிய நாடுகள் ஒன்றுகூடுவது. சுமார் முந்நூறு பிரதிநிதிகள் வந்திருந்தனர். ஜப்பான் தேசப் பிரதிநிதிகள் மட்டும் வரவில்லை. காரணம் எல்லோரும் அறிந்ததே. அம் மஹாநாட்டில் நடந்த நிகழ்ச்சிகளைப் பார்க்குங்கால் இனி ஆசிய மக்களுக்குச் சரித்திரத்தில் ஒரு மகத்தான இடமுண்டு என்று தெளிவாகும். இம் மஹாநாட்டின் வெற்றிக்கு முக்கிய காரண புருஷர் பண்டித ஜவாஹர்லால். மஹாத்மா காந்தி அடிகள் மஹாநாட்டில் விஜயம் செய்து "ஒரே உலகம்" ஸ்தாபிதம் செய்வதில் ஆசியா முனைய வேண்டுமென்றும், உலகில் சமாதானம் நிலவச் செய்வதில் கவனம் செலுத்த வேண்டும்" என்றும் கேட்டுக் கொண்டார்.

இம் மஹாநாடு வெள்ளை ஏகாதிபத்தியங்களை ஒரு கலக்குக் கலக்கி

யிருக்கும் என்பதில் ஐயமில்லை. இம் மஹாநாடு ஏகாதிபத்தியங்களுக்குச் சாவுமணி அடித்துவிட்டது என்பதை அவர்கள் உணராமலிருக்க முடியாது.

ஆசியா மக்கள் அனைவரும் ஒன்று சேரவேண்டும்; ஒருவர் மற்றவருக்குள்ள பண்பு, கலை, நாகரிகம் இவைகளைப் பகிர்ந்து கொள்ள வேண்டும்; இவர்களிடையே ஐக்கிய மனோபாவம் ஏற்பட வேண்டும் என்பதே மஹாநாட்டின் நோக்கம். இதை ஆக்க நமது தலைவர்கள் பாடுபட்டுக் கொண்டிருக்கையில் நம் நாட்டில் நாம் காண்பவை என்ன? கட்சிப் பிரதிகட்சிகள், ஜாதிப் பூசல்கள், மதச் சண்டைகள், நாட்டுப் பிரிவினைக் கிளர்ச்சி, பாஷை வேற்றுமையினால் புதிய ஜாதிகள் சிருஷ்டி— ஆந்திரர், தமிழர், கேரள தேசத்தார். மதத்தின் பேரால் கொலை, கொள்ளை, கொளுத்தல் — இவைகள் வடநாட்டில் சகஜமாகி விட்டன. தென்னாட்டில் பாஷையின் காரணமாகப் பிளவுகள் அதிகரித்துக் கொண்டே வருகின்றன. இதைக் காணும் பொழுது ஆசியா மஹாநாடு அர்த்தமற்றதாகக் கூடப்படுகிறது.

என்ன நிற மத பாஷை வேற்றுமைகள் இருப்பினும் ஆசியமக்கள் அனைவரும் ஒன்று என்பதை ஆசியா முழுதும் ஏற்கத் தயாராயிருக்கையில், இந்தியாவில் மட்டும் நாம் இன்னும் இவ்வேற்றுமைகளைப் பெரிதாக்கி இந்தியர்கள் அனைவரும் ஒரே இனம் என்பதை மறந்து நடந்துவருவது விந்தையிலும் விந்தையாகத்தானிருக்கிறது.

சமீபத்தில் கூடிய ஆசியா மஹாநாட்டிலிருந்தாவது நாம் இப் படிப்பினையைக் கற்போமாக!

---

(10-ஆம் பக்கம் தொடர்ச்சி.)

கிளர்ச்சிசெய்து அதைப் பெற அவர்களுக்கு உரிமையுண்டு. ஆனால் இக் கிளர்ச்சி பொதுமக்களைப் பாதிக்கும் வகையில் இருக்கக்கூடாது என்பதுதான் நாம் கூறுவது. ஓர் ஆலையில் வேலை செய்யும் பத்தாயிரம் தொழிலாளர்கள் சுகித்து வாழ வேண்டுமென்பதற்காக மற்ற ஏழை மக்கள், ஒரு ரூபாய் கொடுத்து வாங்கி வந்த துணிக்கு இரண்டு ரூபாய் கொடுக்க வேண்டுமென்று ஏற்பட்டால் இது அடாது என்று பொது மக்கள் கூறுவதில் என்ன தவறு? ரயில்வே தொழிலாளர்கள் வசதியுடன் வாழவேண்டுமென்பது யாரும் விரும்ப வேண்டியதே. அதற்காக மற்ற ஏழைப்பிரயாணிகள் அனைவரும் அதிக ரயில் கட்டணம் தர நேர்ந்தால், இது அடாது என்று கிளர்ச்சி செய்ய அவர்களுக்கு உரிமையுண்டு. பகிங்காம் மில் தொழிலாளிகளைப் போல் எத்தனை உழைப்பாளிகள் நம் நாட்டில் சம்பாதிக்கிறார்கள்? இவர்கள் சம்பாதிப்பதில் ஆறில் ஒரு பங்கு கூட இல்லாமல் தவிக்கும் தொழிலாளிகள் கணக்கற்றவர்கள். ஆலைத் தொழிலாளிகளும், அவர்கள் முதலாளியும் சுகித்துவாழ, ஏன் கிராமத் தொழிலாளி ஒவ்வொருவனும் தான் கட்டும் துணிக்கு அதிக விலை கொடுக்கவேண்டும்? ரயிலிலும் அதிகக் கட்டணம் செலுத்த நேரிடுவதினால் கவர்மெண்டாரின் வருவாய் அதிகரித்து அதன் மூலம் பொதுமக்களுக்கு ஆஸ்பத்திரிகளும் படிப்பு வசதிகளும், ஏழை எளியோருக்கு வேண்டிய சாதனங்களும் அதிகரிக்காவிடில், இவர்கள் ஏன் தங்கள் அற்ப சொற்ப ஊதியத்திலிருந்து அதிகம் செலுத்த வேண்டும்?

இதற்கெல்லாம் அடிப்படை சில தொழில்களில் அமித லாபம், சிலவற்றில் சொற்ப லாபம். வேலை நிறுத்தம் ஒழிய வேண்டுமாயின் அமிதலாபம் ஒழிய வேண்டும். அப்பொழுதுதான் விலைவாசிகள் குறையும். இதைச் செப்பனிட முயலுவதுதான் கவர்மெண்டார் செய்ய வேண்டிய முதற்காரியமாகும். ஒரு சில தொழில்களில் அதிக லாபமும், மற்றத் தொழில்களில் சொற்ப லாபமுமிருந்தால் வேலை நிறுத்தங்கள் நடந்து கொண்டே தானிருக்கும். தொழிலாளிகள் பெறும் ஊதியம் கிட்டத் தட்டச் சமமாக அமையும் வரை போட்டி போட்டுக் கொண்டு வேலை நிறுத்தத் திற்குமேல் வேலை நிறுத்தங்கள் நிகழ்ந்து கொண்டுதானிருக்கும். புதிய மந்திரி சபை இத்துறையில் தங்கள் கவனத்தைச் செலுத்த முற்படுவார்களாக!



மஹாநாட்டின் தோற்றம்



எகிப்து & பாலஸ்தீனம்—இத்தேசத்துப் பிரதிநிதிகள்



ஆப்கன் பிரதிநிதிகள் நேருவின் சொற்பொழிவை கேட்டுக்கொண்டிருக்கின்றனர்



ஈரானியதேசத்து ராணி ஸஸீயிஸ் பருஷ் மஹாநாட்டில் கலந்துகொள்ள வந்துள்ளார். சரோஜினி தேவியுடன் காட்சி அளிக்கிருர்

மஹாநாட்டிற்கு இந்தியப்பிரதிநிதிகள் செல்லுகின்றனர்





தென்ஆப்ரிகா பிரதிநிதிகளான டாக்டர் ஜி. எம். நாயகர், டாக்டர் வி. எம். டாடூ



சென்னை புதிய மந்திரிசபைப் பிரதமர் ஸ்ரீ ஓமாந்தூர் ராமசாமி ரெட்டியார் சிறந்த தேசபக்தர். தியாகி. ஆனால், இப்பெரும் பதவியை நடத்த இவருக்கு ஆர்வமிருப்பினும், அதற்குப் போதிய ஞானமோ, அனுபவமோ இருப்பதாகத் தெரியவில்லை. பள்ளிப் பயிற்சி இவருக்கு அதிகம் இல்லை என்பது பகிரங்கம். அதற்குச் சமமாக நுண்ணறிவு இவரிடம் இருப்பின் அது போதும் என்றால் இச்சக்தியும் இவரிடம் உள்ளதாக எவரும் கூறியதில்லை. உலக சரித்திரத்திலேயே எந்நாட்டிலும் இவருக்கு ஒப்பான அறிவு படைத்தவரை இதுவரை ஒரு பெரிய மாகாணத்துக்குப் பொறுப்பாளியாகத் தேர்ந்தெடுத்ததில்லை. இதுதான் ஜனநாயகம் என்றால், விதண்டாவாத ஜனநாயகம் என்றுதான் இதை அழைக்க முடியும் (Democracy with a vengeance)

'ஸ்ரீமான் ரெட்டியார் பொதுஜன நலனை விட்டுக்கொடுக்க மாட்டார், அதில் கண்ணும் கருத்துமாக இருப்பார்' என்று கூறுகிறார்கள். இவர் மஹாத்மா காந்தியின் உண்மையான சீடர் என்றும் கூறுகிறார்கள். ஆனால் எப்படி மாகாத்மா தம் சக்தியை அறிந்து அரசியல் நிர்வாகத்தில் நேரடியாகப் பதவி ஏற்கவில்லையோ, எப்படி அதற்கு ஏற்பத் திறமை வாய்ந்த ஜவாஹர்லாலைப் பொறுக்கி எடுத்தாரோ, அப்படியே இவர் கட்சித் தலைமைப் பதவியுடன் இருந்திருப்பாரேயாயின் நலமாயிருந்திருக்கும்.

மற்ற மந்திரிகளின் ஒத்துழைப்பினால் இவர் ஆட்சி வெற்றிகரமாக நடக்கக்கூடும் என்று கூறப்படுகிறது. இது உண்மை என்று ஒப்புக்கொண்டாலும், இம்மந்திரிசபையின் வெற்றி இவருடைய வெற்றியாகாது என்பது திண்ணம். இதைப் பொம்மை ஆட்சி என்றுதான் ஜனங்கள் கருதுவார்கள்.

அரசியல் ஆட்சிமுறையில் உலகிலே எங்குமே நடைபெறாத ஒரு ஆராய்ச்சி சென்னை மாகாணத்தில் நடக்கிறது என்பது திண்ணம். இதன் முடிவை உலகம் ஆவலுடன் எதிர்பார்க்கிறது.

# ராகுலன்

கௌரி

காலை நேரம். அரண்மனைப் பூங்காவில் இளங்காற்றுடன் பூங்கொடிகள் மனோகரமாய் அசைந்து கொண்டிருந்தன. 'கல, கல' வென்று பறவை இனங்கள் சுறுசுறுப்பாகத் தங்கள் வேலையில் ஈடு பட்டிருந்தன. குழந்தை ராகுலன் வில் வித்தை பயிலும் வேளை இதுதான். வில்லையும் அம்புகளையும் அவன் கையில் கொடுத்துவிட்டுக் காஞ்சனை பூச்செடிகளின் பக்கம் வந்தாள். சிறிது தூரம் வருவதற்குள் ராகுலன் அவளை அழைத்தான்.

"இதோ பார் மரத்தில், இப்பொழுது ஒரேஅடியில் அதைத் தள்ளப் போகிறேன்" என்றான் அம்பைத் தொடுத்துக்கொண்டே.

அழகிய வெண்புறு ஒன்று அலகினால் சிறகைச் சரிப்படுத்திக் கொண்டு உட்கார்ந்திருந்தது.

"அடாடா! மகாபாபம்! இவ்வளவு அழகிய பறவையைக் கொல்லுவதில் எவ்வளவு உற்சாகம் உனக்கு! ஜீவனைக் கொல்லலாமா?" என்றாள் காஞ்சனை அவன் வில்லைப் பிடித்துக் கொண்டே.

"ஆனால் வில் வித்தையை எவ்விதம் நன்றாகப் பயிலுவது என்று நினைத்துக் கொண்டிருக்கிறாய்?"

"இதோ, அதற்காகத்தானே இவ்வளவு உருவங்களை நிறுத்தி இருக்கிறது, எதை வேண்டு மானாலும் சிதைத்துத் தள்ளேன். ஒன்றுமறியாத ஜீவன்களை வேட்டையாடலாமா?"

"பிறகு வேட்டை யாடும் பொழுது மாத்திரம்?"

"அப்பொழுது பார்த்துக் கொள்ளலாம்; காட்டு விலங்குகளைத்தானே அடித்துக் கொல்லுவார்கள்? இப்படி எல்லாம் பூங்காவிலா வேட்டை யாடுவார்கள்?"

"சொன்னால் மட்டும் மூக்கிற்குமேல் கோபம் வந்து விடுகிறது காஞ்சனை. பாபமும் புண்ணியமும் நம்முடைய சமய சந்தர்ப்பத்துக்கு ஏற்றது என்கிறாயா? ஆனால், ஒரு சமயம் செய்யலாம், ஒரு சமயம் கூடாது. பொருத்தமாகப் பேசுகிறாயா நீ? முயல்களையும், மான்களையும் அடித்துக் கொல்லுகிறார்களே? இவைகளையும் காட்டு விலங்குகள் என்கிறாயா?"

"ஏதாவது கூறினால் பிடித்துக்கொண்டு விடுவாய் ராகுலா. உன்னைப் போன்றவர்களா இவைகளை எல்லாம் வேட்டையாடுவார்கள்? இவற்றைக் கொண்டு வயிறுவளர்ப்பவர்கள் செய்வார்கள். நீங்கள்எல்லாம் பெரிய காட்டிற்குச்சென்று துஷ்ட மிருகங்களை வேட்டையாட வேண்டும்" என்று காஞ்சனை இன்னும் முடிப்பதற்குள்,

"பேஷ்! அவைகள் மட்டும் ஜீவன் அல்லவா? பாபமென்கிறாய், புண்ணியமென்கிறாய்; எங்கேயோ காட்டில் வசிக்கும் அவைகளைத் தேடித் துரத்திக்கொண்டு போய் அடித்துக் கொல்லுவது பாபம் என்று உன் புத்திக்குப் படவில்லையாக்கும். ரொம்ப நியாயம்!" என்று சிரித்தான் ராகுலன்.

"உனக்குப் பதில் சொல்ல என்னால் முடியாது ராகுல். இப்படியெல்லாம் பேசக் கூடாது என்று அம்மா எவ்வளவு தடவை சொல்லியிருக்கிறார்கள்? நேரமாகி விடும். அதை எல்லாம் போட்டுவிட்டு இப்படி வா" என்று கூறிக்கொண்டே அவனையும் அழைத்துக்கொண்டு சென்று பளிங்கு மேடையில் உட்கார்ந்து கொண்டாள். முகத்தில் இருந்த வியர்வைத் துளிகளைத் துடைத்து விட்டு ராகுலனின் தலை மயிரைச் சரிப்படுத்திக் கொண்டே,

"ஞாபக மிருக்கிறதா எல்லாம்? உன்னை எங்கு அழைத்துச் செல்வதற்கும் பயமாய் இருக்கிறது. இன்று எங்களுடன் வந்தாயானால் வாயை மூடிக்கொண்டிருக்க வேண்டும். என்ன?"

"அப்படியே உத்தரவு" என்றான் ராகுலன் குறும்பாக. "போகிறது ஒரு கதை சொல்லு பார்க்கலாம்" என்றான்.

"என்ன கதை வேண்டும். சொல்லு சொல்கிறேன்"

"சொல்லேன். உனக்குத்தான் முடியாமல் ஒரு கதைசொல்லத்தெரியுமே"

"பார்த்தாயா, மறுபடி ஆரம்பித்து விட்டாய். அதற்குத்தானே நான் மாட்

டேன் என்கிறது" என்று சற்றுக் கடுமையாகச் சொன்னாள் காஞ்சனை.

ராகுலன் அவள் முகத்தைத் தடவிச் சாந்தப் படுத்த முயன்றான்.

"கோபித்துக் கொள்ளாதே காஞ்சனை; எதாவது ஒரே ஒரு சிறிய கதை" என்றான்.

குறுக்குக் கேள்வி கேட்காமல் கேட்கிறாயா?"

"உம்.........."

"அந்தப் புறாவை அடிக்கிறேன் என்கிறாயே. ஒரு சமயத்தில் என்ன நடந்தது தெரியுமா?" ராகுலன் கவனமாய் முன்னால் காஞ்சனை கூறப்போவதைக் கவனித்துக் கொண்டிருந்தான்.

"ஒரு பெரியவர் தியானத்தில் ஆழ்ந்திருந்தார். திடீரென்று அதை ஒரு நிகழ்ச்சி தடைசெய்தது. வெண் புறா ஒன்று அவர் மடியில் பொத்தென்று வந்து விழுந்தது"

"ஏன் அவர் மடியில் வந்து விழவேண்டும்?" என்றான் ராகுலன்.

"பார்த்தாயா! ஆரம்பித்து விட்டாயே உன் வேலைக்கு. முடியக்கூறுகிறேன். பிறகு எனக்கு நீ பதில் கூறவேண்டும்" என்று மேலே தொடங்கினாள்.

புறாவின் உடலில் அம்பு தைத்துக் காயம் பட்டிருந்தது. பெரியவர் உடனே எழுந்து அதன் உடலில் தைத்திருந்த அம்பை எடுத்துப் புறாவை மயக்கத்திலிருந்து தெளிய வைத்துச் சிகிச்சை செய்து பார்த்தார். போன உயிர் மீண்டும் வந்தது போல் புறா கண்ணைத் திறந்து பார்க்கவும் அவருக்குப் பேரானந்தம் உண்டாயிற்று. அதைத் தம் மடியில் வைத்துக்கொண்டு களைப்பாற்றி ஆச்ரயம் கொடுத்தார். சிறிது நேரத்துக்குள் ஒரு வேடன் பதைக்கப் பதைக்க அவர் எதிரில் வந்து நின்றான். தூரத்திலிருந்தே எல்லாவற்றையும் பார்த்துக்கொண்டிருந்த அவன் "அப்புறா என்னுடையது. அதைக் கொடுத்துவிடுங்கள்" என்றான்.

பெரியவர் சஞ்சலமடைந்தார், உயிருக்கு மன்றாடிப் பிழைத்து எழுந்த புறாவை எவ்விதம் அவனிடம் கொடுப்பது என்று நினைத்தாரோ வேறு என்ன நினைத்தாரோ என்று சொல்லுவதற்குள், "அவன் தேடி வந்து அடித்த பறவை அவனுக்குத்தான் உரியது. கொடுத்து விட்டாரா பெரியவர்?" என்றான் ராகுலன்.



"அவ்விதம் எப்படிக் கூற முடியும்? பெரியவர் கூறியதைகேள்: 'ஓய் வேடனே! பொதுவான ஓர் இடத்தில் நீ ஒன்றை உரிமை கொண்டாட முடியாது. உனக்குப் பாத்தியமில்லாத ஒரு பிராணனை ஹிம்சை செய்ய உனக்கு எவ்வளவு பாத்தியம் உண்டோ, என்னை அணுகி வந்த ஒன்றைக் காப்பாற்ற எனக்கும் அதே உரிமை உண்டு. பேசாமல் போய்விடு' என்றார்.

வேடன் விடவில்லை. அவனுக்கு ஒரு கால் இல்லை. "ஸ்வாமி! நான் நொண்டி. மிகவும் சிரமப்பட்டு இதைச் சம்பாதித்தேன். இதுதான் என்னுடைய இன்றைய ஜீவனம். நீங்கள் கொடுக்காவிடில் இன்று நானும் என் குடும்பத்தாரும் உபவாசம் செய்ய வேண்டியதுதான். தயவு செய்யுங்கள்" என்றான்.

ராகுலனால் பேசாமல் கேட்டுக்கொண்டிருக்க முடியவில்லை, "ஏன்? அவனுக்கு அதற்காக வேண்டிய பொருளோ எதுவோ கொடுத்து அனுப்பி விட்டால்" என்றான் ஆவலுடன்.

"அவ்வளவு செய்யாமல் இருந்திருப்பாரா ராகுல்? அவசரப்படுகிறாயே? இதற்கு நீடல்லவா பதில் கூறவேண்டும். வேடனுக்கும் பெரியவருக்கும் நீண்ட நேரம் சம்வாதம் நடந்தது. சாது வேடனுக்கு வேண்டிய பொருளை அளித்தார். அவன் 'முடியாது புருவே வேண்டும்,' என்றான்.

"ஏன்? அவனுக்கு வேண்டியது பொருள் தானே?"

"அவனுடைய வாதத்தைக்கேள் ராகுல். 'கடுகளவு பொன்னாக இருந்தாலும் பொருளாக இருந்தாலும் யாசகம் வாங்கி உண்பதை விடப் பிராணத்தியாகம் செய்து கொள்ளலாம். எங்கள் மூதாதையரிலிருந்து நாங்கள் ஒருவரிடம் கைநீட்ட மாட்டோம் சுவாமி. எனக்கு எட்டியபொருள் எனக்குப் போதும். நொண்டியாகிய என்னைத் துன்புறுத்துவது தங்களைப் போன்ற பெரியவர்களுக்கு அழகல்ல. கொடுத்து விடுங்கள் பறவையை. உங்கள் திரவியம் ஓர் அணுவும் எனக்கு வேண்டாம். நீங்கள் கொடுக்கா விட்டால் நான் செல்கிறேன். ஆனால் இதன் பொருட்டு இன்று என் மனைவியும் ஐந்து குழந்தைகளும் உபவாசம் இருக்கநேரும். இது தருமமா?' என்றான்."

சாது மடியில் இருந்த பக்ஷியைப் பார்த்தார். இவருடைய மடியில் பயமின்றிப்



வெளியேறிய வைசிராய்
வேவல் தம்பதிகள்



புதிதாய் வந்துள்ள மவுண்ட் பேடன்
தம்பதிகள்

பதுங்கியிருப்பினும் எதிரில் நின்றவேடனைக் கண்டு குடல் நடுங்குவது அவருக்கு நன்கு புலப்பட்டது. தம்மேல் வஸ்திரத்தால் புருவை அணைத்து மூடிவைத்துக் கொண்டார். அவர் மனமும் சஞ்சலமடைய ஆரம்பித்தது. பதை பதைக்கும் ஓர் உயிரை அவனிடம் ஒப்படைப்பது என்பதை அவரால் நினைக்கவும் முடியவில்லை. எதிரில் நின்ற வேடனின் நிலையை அவரால் எப்படி உணராமல் இருக்க முடியும்? அவனை எந்த விதத்தில் தேற்றுவதென்று விளங்கவில்லை. பொன் நாணயங்கள் வைத்த தட்டுஒன்று அவர் முன் அப்படியே இருந்தது. சாது யோசனையில் ஆழ்ந்தார். "ராகுல், இப்பொழுது நீகூறு பார்ப்போம். எது நியாயம்? நீயாக இருந்தால் என்ன செய்திருப்பாய் யோசித்துப்பார்?" என்றாள் காஞ்சனை.

சிந்தனையில் ஆழ்ந்திருந்த ராகுலன் அவள் முகத்தைப் பார்த்தான். என்ன விடை கொடுப்பது என்பது அவனுக்கும் தோன்றவில்லை.

"என்ன விழிக்கிறாய்? ஒன்றும் தோன்றவில்லையா?" என்றாள் காஞ்சனை.

"அந்தச் சாதுயார் காஞ்சனா?" என்றான் ராகுலன் பணிவுடன்.

"நேரமாகி விட்டது. யசோதரா தேவி காத்துக் கொண்டிருப்பார். சென்று அவரையே கேட்கலாம் வா" என்று ராகுலனை அழைத்துக் கொண்டு அரண்மனை அந்தப்புரத்தை அடைந்தாள் காஞ்சனை.

ராகுலனுக்கு அப்பொழுது வயது பதினான்கு. கௌதம புத்தருடைய புதல்வன் என்ற பெயருக்கு உரிய தோற்றத்தையும் கம்பீரத்தையும் பெற்றிருந்தான். தோள் வலிமையிலோ மன வலிமையிலோ தந்தைக்குக் குறைந்தவனாகத் தோன்றவில்லை. சந்திர பிம்பம் போன்ற அவன் முகமும் அமிருதம் போன்ற அவனுடைய மொழிகளும்தான் தேவி யசோதரைக்குப் பலத்தைக் கொடுத்தன. பால் போன்ற அவன் முகத்தில் என்றும் தெளிவும் பிரகாசமும்வீசிக்கொண்டிருக்கும். அன்று பூங்காவிலிருந்து உள்ளே நுழையும்போதே அவன் மனதில் ஏதோ கலக்கம் என்பதை யசோதரா அறிந்து கொண்டுவிட்டாள். அந்தப்புரத்தில் நுழைந்ததுமே "என்ன யோசனை ராகுல்? முகம் காட்டுகிறதே?" என்றாள் அன்புடன் மகனைத் தடவியபடி.

"எல்லாம் இந்தக் காஞ்சனையுடைய வேலைதான். ஏதோ கேட்டாள். யோசனை செய்கிறேன்" என்றான் அவன்.

"அந்தவெண்புருவின் கதை இருக்கிறது பாருங்கள் அதைச் சொன்னேன். அவனாக இருந்தால் என்ன செய்திருப்பான் என்று கேட்டேன். வேறு ஒன்றுமில்லை" என்று சிரித்தாள் காஞ்சனை.

"என்ன பதில் கூறினான்?" என்றாள் யசோதரா தேவி ஆவலுடன்.

"நீங்களே கேளுங்கள் தேவி; இன்னும் விளங்க வில்லை போலிருக்கிறது" என்று ராகுலனைப் பார்த்தாள் காஞ்சனை.

"அந்தச் சாது யார்?" என்றான் ராகுலன். யசோதரையின் முகவாட்டம் அவன் உள்ளத்தில் ஏதோ வேதனையைக் கிளப்பியது.

"உன் அருமைத் தந்தைதான் ராகுல்" என்றாள் அவள் ஒரு பெருமூச்சுடன்.

ராகுலனுடைய பெரு மூச்சும் அத்துடன் கலந்தது. அவ்விடத்தைவிட்டு அகன்றான்.

* * *

கௌதமர் ஊரைவிட்டுச் சென்றது முதல் கபிலவாஸ்துவில் இம்மாதிரி மகிழ்ச்சியை ஒருவரும் கண்டதே கிடையாது. அன்று ஊரில் எங்கு பார்த்தாலும் மகிழ்ச்சி வெள்ளம் பொங்கிக்கொண்டிருந்தது. எங்கும் தோரணங்கள், மாவிலை, உயரத்தில் பறக்கும் கொடிமரங்கள். ஜனங்கள் குதூகலத்துடன் இங்கும்அங்கும் ஓடிப் பேசிக்கொண்டிருந்தனர். முகத்திலும் மகிழ்ச்சி. தேர்திருநாளுக்குக் கிளம்புவார்போல் புதிய வஸ்திரங்கள் அணிந்து குழந்தைகுட்டிகளுடன் கூட்டம் கூட்டமாகப் போய்க்கொண்டிருந்தனர். அரண்மனை எங்கும் பேச்சும் பிரார்த்தனையுமாய் இருந்தது.

இளவரசன் ராகுலன் தன் அறையில் உலாவிக் கொண்டிருந்தான். ஊரெங்கும் மகிழ்ச்சி பொங்கியும் அவன் மனதில் மட்டும் நிம்மதி இருக்கவில்லை அப்போது.

"தேவி உன்னை அழைக்கிறார்கள்" என்றாள் காஞ்சனை வந்து.

"எதற்கு?

"எதற்கென்று கூறவில்லை" என்று சொல்லிவிட்டுக் காஞ்சனை போய்விட்டாள்.

கௌதமபுத்தர் கபிலவாஸ்துவிற்குச் சமீபத்தில் சிறிய கிராம மொன்றில் வந்து தங்கப் போவதாகச் செய்தி வந்தது. அரசுரிமை பெற்ற அம்மகானைத் தங்கள் ஊருக்கு அழைத்துக் கொண்டு வரவேண்டு

மென்ற குதூகலம் ஊரெங்கும் நிரம்பி இருந்தது. அவர் வரும்பொழுதே தரிசிக்க வேண்டுமென்று ஜனங்கள் திரள் திரளாகச் சென்று கொண்டிருந்தனர். அவர் அரண்மனைக்கே வரப்போவதாக ஒரு வீண் ஆசையால், அப்படி எங்கும் அலங்கரிக்கப் பட்டிருந்தது. ராகுலன் மனதிலும் எதோ ஒரு சஞ்சலம். சீக்கிரமே யாசோதரையின் அந்தப்புரத்தை அடைந்தான்.

"ராகுல், என்ன செய்து கொண்டிருந்தாய்?" என்ருள் தேவி.

"ஒன்றுமில்லை அம்மா. நம் மந்திரி கூறிய ஒரு விஷயத்தைப் பற்றி யோசித்துக் கொண்டிருந்தேன். கொஞ்சம் நேரமாகி விட்டது"

"அப்படிச் சிந்தனை செய்யும் படியான விஷயம் என்ன குழந்தாய்? ஒருவரும் என்னிடம் கூறவில்லையே?"

"சொல்லித்தான் நீ என்ன செய்ய முடியும்? ஒரு திருடனல்லவா இவ்வளவு பேரையும் ஆட்டி வைக்கிருன்! ஆச்சரியமாய் இருக்கிறது."

"திருடனு? என்ன விந்தை ராகுல்? நம் நாட்டில் கூடவா இப்படிக் களவும் திருடனும்?"

"ஹூம்......எல்லாம் பிரமைதான். நம் நாடு மட்டில் என்ன? சுவர்க்கமா அம்மா?

"என்ன தைரியம் தெரியுமா அவனுக்கு? நம் வீரன் ஒருவனுலும் அல்லவா அவனைப் பிடிக்க முடியவில்லை."

"ஹூம்......" என்று பெருமூச்சு விட்டுக் கொண்டாள் யசோதரை.

"எல்லை முழுதும் காவல் வைத்துப் பார்த்தாய் விட்டதா?" என்று கேட்டுக் கொண்டே ராகுலனைத் தன் அருகில் உட்காரவைத்துக் கொண்டாள் ராணி.

"ஒன்றும் பிரயோஜனமில்லை. எவ்வளவோ காவல் போட்டாகிவிட்டது. எவ்வளவோ தந்திரம் செய்தாகிவிட்டது. அவன் யார் என்று தெரிந்தும் அவனைப் பிடிக்க முடியாமல் இருப்பதல்லவா வெட்கக் கேடாக இருக்கிறது." என்ருன் ராகுலன் கவலையோடு.

"நம் மந்திரிகள் என்ன சொல்லுகிருர்கள்?"

"என்ன சொல்லுவது? விழிக்கிருர்கள். அவர்களால் ஆனதை எல்லாம் பார்த்து விட்டார்கள். நானே நேரில் போகலாம் என்று தீர்மானம் செய்து கொண்டிருக்கிறேன். ஒரு மனிதன் இவ்வளவு பெயரை ஆட்டி வைப்பதென்ருல்?"

"நீ போகப் போகிருயா? இவ்வளவு சூரருக்கும் பிடிபடாதவன் உனக்குப் பிடிபட்டு விடுவானு ராகுல்?" என்று ஆச்சரியத்துடன் அவனை நோக்கினுள் யசோதரை.

"இதில் என்னம்மா ஆச்சரியம்? நானே புறப்பட எல்லாம் சித்தம் செய்யச் சொல்லி இருக்கிறேன்" என்ருன் ராகுலன்.

"குழந்தாய்........." என்று மேலே எதோ சொல்ல எண்ணியவள் போல் நிறுத்திக் கொண்டாள் யசோதரை. ராகுலன் எழுந்தான்.

யசோதரையும் எழுந்து சாளரத்தின் அருகே சென்ருள். அவளுடைய இரு கரங்களும் ராகுலனை இறுகப் பற்றிக்கொண்டிருந்தன.

அவனுடைய முகம் வாடி இருப்பதைப் பார்த்து, "ராகுல், உன்னை அழைத்தது எதற்குத் தெரியுமா? அதற்குள் கிளம்பி விட்டாயே?" என்ருள்.

"விஷயம்?"

யசோதரா தேவியின் தாமரை இதழ் போன்ற கண்களில் கண்ணீர் பொங்கி எழுந்தது. "ஒன்றும் தெரியாதவன் போல் கேட்கிருயே குழந்தாய். உன் அருமைத் தந்தை நம் நாட்டிற்கு வரப்போகிருர் அல்லவா கண்மணி?"

"தெரியும் அம்மா"

"அதற்கு வேண்டியது என்ன செய்தாய், அப்பா?"

"அவருக்கு வேண்டிய சவுகரியங்களை பார்த்துக் கொள்ளும்படி நம் ஆட்களை அனுப்பி இருக்கிறேன். மந்திரி முதலியோரும் புறப்படத் தயாராக இருக்கின்றனர்"

"ராகுல்"

"என்ன அம்மா"

"உன் அருமைத் தந்தையைக் காண வேண்டுமென்ற ஆவல் உனக்கு இல்லையா கண்ணே?"

"இல்லை"

யசோதரா ராகுலனை அணைத்துப் பிடித்துக் கொண்டாள். அவள் உள்ளத்தில் துக்கம் பொங்கியது. "தியாகியாகியவர் நமதுசமீபத்தில் வரும்போதுகூட அவரைத் தரிசனம் செய்ய வேண்டுமென்று தோன்றவில்லையா ராகுல்?" என்ருள் தழுதழுத்த குரலில்.

ராகுலனின் முகத்தில் இரத்தம்குழம்பியது. தாயின் பரிதாப நிலையை அவனுல் பார்க்க முடியவில்லை.

"ஏன் வருத்தப்படுகிறாய் அம்மா? உனக்குத்தான் பயித்தியம்" என்றான்.

"இது பயித்தியமா குழந்தாய்? நாடெங்கும் போற்றும் உத்தம புருஷனை நீயே நேரில் சென்று உபசரிப்பதல்லவா உன் கடமை?"

"இல்லை அம்மா!"

"ராகுல்!........."

"ஏன் அம்மா?"

"உனக்கு எதாவது புத்தி மாறாட்டம் ஏற்பட்டிருக்கிறதா கண்ணே? என் அருமை ராகுலனா இப்படிப் பேசுகிறாய்?"

"எனக்கு ஒன்றுமில்லை அம்மா. உனக்குத்தான் அஞ்ஞானம்."

"அஞ்ஞானமா குழந்தாய்? இவ்வளவு சமீபம் வரும் அவரை நாமே சென்று உபசரிக்க வேண்டியது நமது கடமையல்லவா?"

"இல்லை" என்று வெறுப்புடன் தாயை நோக்கினான் ராகுலன்.

ராகுலனைக் கண்ணீரால் நனைத்தாள் யசோதராதேவி; அவனைத் தழுவிக்கொண்டு விசித்தாள்; விம்மி அழுதாள்.

"ராகுல், நீ போகத்தான் வேண்டும், நான் சொல்வதையும் மறுப்பாயா? குழந்தாய், உன் அருமைத் தந்தை என்னை விட்டுச் சென்றது முதல் நானும் எல்லாவற்றையும் துறந்து விட்டேன். உலகத்தில் பாக்யமில்லாதவள் நான்தான். இன்னும் அவரைச் சந்திக்கும் பாக்யம் எனக்குக் கிட்டவில்லை" என்று அவளால் மேலே பேச முடியவில்லை. விசித்துக் கொண்டே, "நான் இன்று அவரைப் பார்த்துத்தான் ஆகவேண்டும். இனி



இந்தியாவின் தூதர் அஸப்ஆலி அமெரிக்காவில் அமெரிக்க காங்கிரஸ் கென்னத்துடன் சம்பாஷித்துக் கொண்டிருக்கிறார்



சமீபத்தில் லாகூர் சென்ற பொழுது பண்டித நேரு ஜஸ்டிஸ் ராம்லாலுடைய மகளான மிஸ் தீன ராம்லாலை அணைத்துக் கொள்கிறார்

நீ சொல்வதைக் கேட்க மாட்டேன். என்னுடன் நீயும் வந்துதான் ஆகவேண்டும்'' என்றாள்.

''முடியவே முடியாது அம்மா! நீயும் போகக்கூடாது. இது இளவரசன் என் ஆக்ஞை''

சிறு குழந்தையைப்போல் 'கோ' வென்று அழுது விட்டாள் தேவி.

இருவரிடையே சிறிதுநேரம் மௌனம் நிலவியது. கண்ணைத் துடைத்துக்கொண்டு ராணி,

''உன் நெஞ்சம் கல்லா ராகுல்?'' என்றாள் ஆத்திரத்துடன்.

ராகுலனின் கண்களில் கோபாக்கினி வீசியது. தாயின் அணைப்பிலிருந்து விடுவித்துக் கொண்டான்.

''என் நெஞ்சம் கல்லல்ல! அவர் நெஞ்சம் தான் கல்'' என்றான் கோபத்தோடு.

''ஆ.........'' என்று அலண்டு விட்டாள் யசோதராதேவி.

ராகுலனின் கண்களில் மட மட வென்று கண்ணீர் பொங்கியது.

''அறியாப் பருவத்திலே, தூங்கும் பொழுது என்னை விட்டுப்போனார்! வருஷங்கள் எவ்வளவு ஆகின்றன அம்மா?''

தேவி பேசவில்லை.

''ஒரு நாள் அவர்வந்து என்னை ''ராகுலா'' என்று அருமையுடன் அழைக்கப் போகிறார் என்று எவ்வளவு கனவுகள் கண்டேன் தெரியுமா? அம்மா! நம்மைப் பற்றிய கவலை அவருக்கு இருந்தால் இவ்வளவு வருஷங்கள் இப்படி இருப்பாரா? அவ்வளவு கல்லா அவர் நெஞ்சம்? ஒரு நாள் நான் அவரை அப்பா என்று அழைத்ததில்லையே!'' என்று கூறும்பொழுது ராகுலனின் துக்கம் கரைகடந்து விட்டது.

குழந்தையைக் கட்டித்தழுவினாள் யசோதரை. இவ்வளவு வருஷங்களாக அவன் கண்ணில் காட்டாமல் மறைத்து வைத்திருந்த அவள் துயரம் மடைதிறந்துவிட்டாற் போல்ஆறாகப்பெருகியது. ராகுலனை மார்பில் சாய்த்துக் கொண்டாள். இருவராலும் வெகுநேரம் வரையில் ஒன்றும் பேசமுடியவில்லை. சிறிது நேரம் கழித்துத் துக்கம் பொங்கப் பொங்க,

''உன்னை வைத்துக்கொண்டு எவ்வளவு சிரமப்பட்டிருப்பேன், தெரியுமா ராகுல்?''

''அது தந்தைக்குத் தெரியாமலா போய் விட்டது, அம்மா?'' எனறான் ராகுலன் வியாகுலத்துடன்.

''எல்லாவற்றையும் துறந்த ஞானிக்கு இதெல்லாமா ஞாபகம் குழந்தாய்? நாம் தான் அஞ்ஞானிகள். அவரை நாம் எதிர் பார்ப்பது சாத்தியமா அப்பா?''

''அம்மா, ஞானத்திற்கும் அஞ்ஞானத்திற்கும் ஒன்றுக்கொன்று எவ்வளவு சம்பந்தமிருக்கிறதென்பதை நீ அறியவில்லை. அஞ்ஞானிகளின் அந்தகாரத்தைப் போக்குவது ஞானிகளின் முதல் கடமை. தந்தை இதை உணராதவரா நீயே சொல்லு?''

''எப்படிச் சொல்ல முடியும் ராகுல்?''

''இதைத் தவறினால் கடமையைத் தவறியவரென்று சொல்லாதா அம்மா உலகம்?''

யசோதரா தேவி சிந்தனையில் ஆழ்ந்தாள்.

''ராகுலன்! சித்தார்த்தரின் தவப் புதல்வன்! அவருக்குப் புதல்வன் என்பது வீணாகி விடுமா?'' கவலை தோய்ந்த முகத்துடன ராகுலனைப் பார்த்தாள். ராகுலனும் யசோதரா தேவியும் கனவிலிருந்து விழித்தவர்கள் போல் திடுக்கிட்டு எழுந்தார்கள்.

காஞ்சனை மூச்சுத்திணற ஓடி வந்தாள். ராகுலன் துள்ளி எழுந்தான். புத்த தேவரின் கருணையை என்னவென்று கூறுவது?

சாந்தம் நிலவப் புன்னகையுடன் யசோதரா தேவியின் அந்தபுரத்தின் வாயிலில் நின்றார்.

''ராகுலா'' என்ற அவருடைய அன்பு நிறைந்த அழைப்பு ராகுலனின் உள்ளத்தையே பிளந்து விடுவது போல் பாய்ந்தது. கண்ணும் கண்ணீருமாய் அவர் பாதத்தில் விழுந்தான்.

கௌதமபுத்தரின் மெதுவான கைகள் அவன் கண்ணீரைத் துடைத்தன. யசோதரா தேவியின்பால் பாய்ந்த பார்வை தேவியே அவருள் ஐக்கியமாகி விட்டாள்.

''ராகுல்'' என்றார் கௌதமர்.

அவன் மெய் சிலிர்த்தது. துக்கம் பொங்க ''அப்பா!'' என்றான்.

''இதோ பார். இவர் யார் தெரியுமா? மகா ஞானி. நாட்டில் திருடன் என்று எல்லோரும் தேடினீர்களே அவர்'' என்றார் புத்தர் புன்னகையுடன்.

ராகுலனுக்கும் யசோதரா தேவிக்கும் பிரமை தெளியவில்லை. தெளியும் பொழுது புத்தரை அங்கே காணவில்லை.

''அம்மா! தந்தை எங்கே?'' என்றான் ராகுலன் நெஞ்சடைக்க.

''அவர் கடமை தீர்ந்து விட்டது ராகுல்'' என்று அவனை அணைத்துக் கொண்டு விசித்தாள் யசோதரை!

# அருணாவின் புரட்சி வாழ்க்கை

யோகி சுத்தானந்த பாரதியார்

சுதந்தரதாகம் ஓர் எரிமலை; அது பொறுமையாகத் தொடங்கும்; அச்சிலும் மேடையிலும் விரிடும்; காரிய வேகம் அதிகமானால் கனல் கக்கி அடிமைத்தனத்தைத் தகர்த்தெறியும். நாட்டை நாடு, மனிதனை மனிதன் அடக்கியாளும் அகம்பாவ வெறியுள்ள மட்டும், சுதந்தரக் கனல் அணையாது. அது நீறு பூத்த நெருப்பைப் போலிருந்து, காலாக்னியாகக் கிளம்புவதுண்டு. 1857-ம் ஆண்டு நானா லக்ஷ்மீபாய் தலைமையில் அப்படிக் கிளம்பி, வட நாட்டை அதல குதலப் படுத்தியது. 1942-ல் இந்தியர் உள்ளத்தில் கொதித்துக் கொண்டிருந்த சுதந்தர வேகம் குபீரென்று கொழுந்தேறிக் குமுறியெழுந்தது. இந்தியாவுக்கு வெளியே சுபாஷ், இந்தியாவுக்குள்ளே அருணா, ஆகிய இருவரும் இந்தச் சுதந்தரக் கனல் வடிவங்களாக விளங்கினார்கள். ராணி லக்ஷ்மீபாய்க்குப் பின்பு எழுந்த புரட்சி வீரை அருணா அஸ பாலியே.

சென்ற 1942 ஆகஸ்டு மாதம் நவ இந்தியா சரித்திரத்தில் புதிய சகாப்தம் தொடங்கியது. ஐரோப்பியப் போர் குமுறிக் கனல் கக்கி, கப்பல்களையும் விமானங்களையும் நகர்களையும் தவிடு பொடியாக்குகிறது. ஐரோப்பா முழுதும் ஹிட்லரின் பயங்கரம் பரவியது. ஜப்பானியர் பர்மாவை வென்று இந்தியக் கடற்கரைகளிலும் குண்டு போட்டனர். இதுதான் சமயம் விடுதலைக்கு என்று தீவிர வாதிகள் கர்ஜித்தெழுந்தனர். சுபாஷ்போஸின் சுதந்தரப்படை அந்தமான் தீவுகளில் கொடி நாட்டி, ஆட்சி புரிந்தது. சுபாஷ் சிங்கம், டில்லியை நோக்கிப் பாய்ந்து கொண்டிருந்தது. இனி இந்தியாவைக் கட்டி ஆள முடியாது, மேற்கிலும் கிழக்கிலும் நமக்கும் அபாயம் என்று ஜான்புல் உணர்ந்து கொண்டான். உடனே சமாதானம் பண்ணக் கிரிப்ஸ் வந்தார். ஒரு புதிய சுதந்திரத் திட்டம் கொண்டு வந்தார். அது சர்ச்சில் மூளையும் சேர்ந்து வகுத்த திட்டம் — இந்தியாவை மூன்றாகப் பிரித்து, மறுபடியும் யூனியன் ஜாக்கிற்கு இடங்கொடுக்கும் தந்திரத் திட்டம். அதை மஹாத்மாஜி செல்லாக்காசு என்று ஒதுக்கித் தள்ளினார். கிரிப்ஸ் கைப்பெட்டியைத் தூக்கிக் கொண்டு வந்தவழியே பறந்து சென்றார். அதன் பிறகு இந்தியா ஆண்மையுடன் எழுந்தது. "ஐரோப்பியப் போரில் பங்கு கொள்ளோம்; அது இந்தியாமேல் சுமத்தப்பட்டது; இந்தியர் இனி அன்னியருக்கு அடிமை செய்யோம். அன்னியர் வெளியேறுக! எங்கள் நாட்டை நாங்கள் ஆள்வோம்" என்று காங்கிரஸ் கர்ஜித்தெழுந்தது. பம்பாயில் தலைவர் கூடினர். "இந்தியாவை விட்டுப்போ (Quit India)" என்ற தீர்மானத்தை நிறைவேற்றினர்.

அந்தக் கூட்டத்திற்கு அஸஃபாலியும் அருணாவும் சென்றிருந்தனர். அஸஃபாலி மஹாத்மா நேரு வாசகங்களைக் கேட்டு உணர்ச்சி பொங்கிக் கொண்டிருந்தார். காங்கிரஸ் தலைவர் அனைவருமே போர்க்களத்தில் எதிரிகளின் குண்டை எதிர்பார்த்த வீரர்போலத் தயாராக நின்றனர். அருணா மட்டும் எவ்விதமான பரபரப்புமில்லாமல், வசந்தப் பறவைபோல் அழகான ஆடையணிகளும், அணிகளை மிஞ்சிய புன்னகையழகும் குலுங்க, வெளியே ஒயில்நடைபோட்டு உலாவிக் கொண்டே நண்பருடன் நகைச்சுவை ததும்பப் பேசித் திரிந்தாள். திடீரென்று அஸஃபாலி வந்தார். "அருணா, வெளியேற்றத் தீர்மானம் (Quit India Resolution) நிறைவேறிவிட்டது. ஒன்று வெள்ளையன் வெளியேற வேண்டும், அல்லது விடுதலைக்காக நாம் உயிர்விடவேண்டும். இரண்டே உறுதி. இதோ போர் தொடங்கிவிட்டது. விடுதலைச் சிங்கங்களைக் கட்டப் பிரிட்டிஷ் விலங்குகள் வந்து கொண்டிருக்கின்றன" என்றார் கணவர். அருணா, புன்னகை மின்னும் அருணா, ஆத்திரக் கனலானாள். "நமக்கா, நமது நாட்டில், நமக்கா விலங்கு? விலங்கை அறுத்தெறியும் ஒரு

கனல் என்னுள் உதித்துவிட்டது. வெளியேறு வெள்ளையா—இதுவே என் மந்திரம். நமது நாடு நம்மதானாலே எனக்கு நிம்மதி. அதுகாறும் புயலும் போராட்டமுமே" என்று எழுந்தாள்.

9—8—42 இந்திய சரித்திரத்தின் பொன்னாள். அன்று பாரத சக்தியே காளியுருக்கொண்டெழுந்து அடிமைக் கோட்டையைத் தகர்த்தெறிந்தது. ஆயுதமில்லாத இந்தியருக்கு எங்கிருந்தோ புதிய சக்தி வந்துவிட்டது.

அன்று காங்கிரஸ் தலைவர்களெல்லாம் அகாகான் அரண்மனையிற் சிறையுண்டனர்—இந்தியாவே சிறைப் புகுந்தது. நமது நாட்டில் நம்மை அன்னியர் சிறையிட்டுச் சுயேச்சாதிகாரம் செய்வதா என்ற ஆத்திரம் இந்தியர் உள்ளத்தைக் குபீரென்று பற்றியது. காந்தி, நேரு, ராஜன்பாபு முதலிய தலைவர்களுடன், அஸஃபாலியும் சிறைப் புகுந்தார். அருணா அனலானாள். காங்கிரஸ் கமிட்டி கூடிய கோவாலா மைதானத்தில் பம்பாய் முழுதும் கடல்போலக் கூடிக் கொந்தளித்தது; வீராவேசப் பேச்சுக்கள் வீறிட்டன. போலீஸ் புலிகள் தடியடி, கண்ணீர்ப் புகை எல்லாம் பிரயோகித்து, முடிவில் துப்பாக்கிகளால் கூட்டத்தைச் சுட்டது. இரத்தம் ஒழுக ஒழுக, வீரமும் வெள்ளமாகப் பெருகியது. அந்தக் காட்சியைக் கண்டு அருணாவும் வீராங்கனையானாள். அன்னியக் கொடுமையை அழித்தே தீருவோம்! புரட்சியோ புரட்சி என்று வீறிட்டுக் கிளம்பினாள். 9—8—42 முதல் 26—1—45 வரையில் அருணா மறைமுகமாயிருந்து புரட்சி நடத்தினாள். அவளைக் கண்டுபிடித்து ஒழிக்க ஒற்றரும் போலீஸும் பரபரப்புடன் முயன்றும் பலனில்லை.

அருணாவுக்குச் சிறை பயமில்லை. அவள் தன் கணவருடன் பலமுறை சிறை சென்றவள்.

1930-ல் உப்பு சத்தியாகிரகத்தில் சேர்ந்து சிறைசென்றாள்; 1932-ல் மறு


# நான்கோ பிரிண்ட் இங்கி

•

இந்தியா, சென்னை, பீஹார், மைசூர், திருவாங்கூர் சர்க்கார்களாலும், சென்னையிலும், வெளியூர்களிலும் உள்ள பிரிண்டர்களாலும் மிகவும் உபயோகிக்கப்படுகிறது.

•

அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதவும் :

## S. நாராயணன் & கம்பெனி,

1. கிண்டி ரோடு, அடையாறு, சென்னை.

படியும் கிளர்ச்சி செய்து சிறை காத்தாள், 1940-ல் ஒருதரம் சிறையில் அடைபட்டு விடுதலையானுள். 1942-ல் அவள் செய்த புரட்சிதான் மிகப்பெரிது—ஆச்சரியமானது. சிறைக்கதவுகள் அவளுக்காகத் திறந்திருந்தன; அருணு சிறையை ஏமாற்றி விட்டாள். அவள் பேசும் பேச்சு சர்க்காருக்கு உடம்பெரிச்சலை உண்டாக்கி விட்டது. 1857 திரும்பிவிட்டது. 1930-ஆம் ஆண்டிலேயே அருணு நெஞ்சில் ராணி லக்ஷ்மிபாய் குடிகொண்டாள். அப்போதே அவள் 1857-புரட்சியைப்பற்றிச் சண்டமாருதமாகப் பேசினுள். சர்க்கார் அவளைப் பொறுப்பற்ற பேச்சி என்று நன்னடக்கை ஜாமீன் கேட்டது. பிறகு ஓராண்டு சிறையிட்டது. சிறையில் அருணு உள்ளம் புரட்சிக் கனலானது. தன் உரிமைக்கு எதிர் செய்யும் யாரையும் அவள் எதிர்த்துப் போராடினுள். சர்க்கார் அவளை அபாயமானவள் என்று தீர்மானித்தது. காந்தி இர்வின் ஒப்பந்தம் நடந்தபிறகுகூட இந்த அபாயக்கனலைப் பிரிடிஷார் சிறையிலேயே வைத்திருந்தனர். அருணு ஒரு புரட்சியை அங்கேயே ஜோடித்தாள். தன்னுடன் சிறைகாத்த பெண்களைத் தூண்டி விட்டாள். அவர்களுக்கு விடுதலை நாள் வந்தது. போலீஸ்காரர் "போகலாம் வெளியே" என்ருர்கள். பெண்கள் "இன்குலாப் ஜிந்தாபாத்-அருணு வுடனே தான்செல்வோம். இன்றேல் இங்கேதான் இருப்போம்" என்று உட்கார்ந்து விட்டனர்.

காலை ஆறுமணிமுதல் இரவு எட்டு வரையில் பெண்களின் சத்தியாகிரகமும் புரட்சிப் பாட்டும் நடந்தன. முடிவில் மஹாத்மாவும் டாக்டர் அன்ஸாரியும் தந்தியடித்த பிறகு பெண்கள் வெளியேறச் சம்மதித்தனர். அருணு மட்டும் சிறையில் தனித்திருந்தாள். ஆனுல் அருணுவுக்குப் பரிந்து இலட்சங் குரல்கள் எழுந்தன. லாகூர் முழுதும் கிளர்ந்தெழுந்து ஊர்வலம் நடத்தி அருணுவின் விடுதலையை வேண்டியது. சர்க்கார் திகைத்துப் போனது; அருணுவை உடனே விடுதலை செய்தது. புரட்சி வாழ்க என்ற கோஷத்துடனே அருணு வெளியே வந்தாள். பதினுயிரம் குரல்கள் அருணுவுக்கு ஜே போட்டுப் புரட்சி வாழ்க என்று கர்ஜித்தன. கான் அப்துல்கஃபர்கானே மாலைபோட்டு அருணுவை உருக்கமாக வரவேற்ருர். அருணு அப்போதே வீராவேசமாகப் பேசினுள். "பிரிட்டிஷ்சர்க்கார் என்னைப் பெண்-சிறையில் அடைத்து வைத்தது; ஆண்மையுடன் வெளிவந்தேன். சிறைக்குக்கூட இந்த அரசாங்கம் ஆண் பெண் வேற்றுமை கற்பிக்கிறது. பெண் சிறையாவது—ஆண்சிறையாவது? நாடே சிறையிலிருக்கிறது. அடிமைச் சிறையைத் தகர்த்தெறிவோம், ஆண் பெண் அனைவரும் வாருங்கள்" என்று வீறிட்டாள்.

1932-ல் சர்க்கார் அவளுக்கு ரூ 200 அபராதம் போட்டு டில்லிச்சிறையில் அவளை அடைத்தது. அருணு அபராதம் தர மறுத்துவிட்டாள். சர்வவல்லமையுள்ள சர்க்கார் அருணுவின் துணி மணிகளை ஏலம்போட்டு அபராதத்தை எடுத்துக்கொண்டது. டில்லிச்சிறையில் தேசபக்தர்களைக் கொடுமை செய்தனர். அருணு அதைப் பலமாகக் கண்டித்து, உண்ணுவிரதம் இருந்தாள். ஊரேகொதித்தெழுந்தது. கண்டனக்கூட்டங்களும் பத்திரிகைக் கிளர்ச்சிகளும் சண்டவேகத்தில் நடந்தன. சர்க்காரும் அருணுவின் விருப்பத்தை நிறைவேற்றினர். தேசபக்தர்களுக்கு வேண்டிய சௌகரியங்களை அளித்தனர். ஆனுல் அருணுவை ஒரு நாள் திடீரென்று அம்பாலாவுக்குக் கொண்டு போய்த் தனிச்சிறையில் வைத்தனர். காரணம் அவள் புரட்சிப்புயல்! கொடுமையைக் குமைக்கும் சுதந்திரக் கனல் என்பதேயாம். சுபாஷ்போஸுக்கு எவ்வளவு காவல் இருந்ததோ அவ்வளவு அருணுவுக்கும் இருந்தது.

அருணு அம்பாலா சிறையிலிருந்து வெளி வந்தபிறகு மேடைப் பேச்சைச் சுருக்கிவிட்டாள். ஏராளமான அரசியல் நூல்களை, முதன்மையாக ரஷ்ய நூல்களைப் படித்தாள். அவளுக்குச் சமதர்மக் கொள்கையே பிடித்திருந்தது. ஜயப்ரசாத நாராயண், பட்டவர்த்தன், லோகியா, படேல், ஜவஹர்லால் முதலிய ஸோஷலிஸ்டுகளையே அவள் விரும்பினுள். ஜயப்ரசாதுடன் அவள் அரசியல் உள்ளம் ஒன்றுபட்டது. "இந்தியா விடுதலை பெற்றுத் தலைநிமிர வேண்டு

மானல், ஜாதிமத வேறுபாடுகளேயின்றி எல்லாரும் ஓர் குலமாக ஒன்றி வாழ வேண்டும். இந்தியர் அனைவரும் ஒரே சமுதாயமாகச் சேர்ந்து போராடி அடிமைச் சிறையை உடைத்தெறிந்து சுதந்திர முரசு கொட்டவேண்டும். இந்தியா இந்தியரின் பொதுவுரிமையாக வேண்டும்" என்ற சமத்துவவுணர்ச்சியுடன் ஒரு புரட்சி செய்ய அவள் தன்னைத் தயாரித்துக்கொண்டேயிருந்தாள்.

1942 அவளுடைய வீராவேசத்திற்கு அரிய சந்தர்ப்பம் அளித்தது.

இந்தியா புதிய ஆக்ரோஷத்துடன் எழுந்து அன்னிய பந்தத்தைச் சம்மட்டியால் உடைத்தெறியத்தலைப்பட்டது. தந்திகள் அறுந்தன, தண்டவாளங்கள் பெயர்ந்தன, அடிமைச் சேரிகள் அடிசாய்ந்தன. சிகப்புத் தலைப்பாகைக்கு அஞ்சுவாரில்லை. எல்லாரும் சட்டத்தை மிஞ்சினர். அன்னிய ஆட்சியே தீப்பிடித் தெரிந்தது! அந்தப் புரட்சியை அடக்க ஆகாச குண்டு கூடப் போடவேண்டி யிருந்தது.

இப்புரட்சிக்குச் சிறைகூடப் போதவில்லை. சில வீரர் சிறைச் சுவரையும் ஏறிக் குதித்துத் தப்பி இரகசியப் புரட்சி செய்தனர். ஜயப்ரசாத நாராயணன் அவ்வாறு சிறை தப்பி, காடு மேடெல்லாம் ஓடித்திரிந்து, பட்டாணி போல் வேடம் போட்டுப் புரட்சியைத் தீவிரப் படுத்தி, பர்மா எல்லைக்குச் சென்று, சுபாஷ் போஸைக்கூடச் சந்தித்து வந்தார். என்ன ஆச்சரியம்! படீல் என்பவர் சதாராவில் தனியரசே நடத்தினர்.

அவர் பெயரே போலீசுக்குச் சிம்ம சொப்பனம்! எல்லா வற்றையும் மிஞ்சியது அருணுவின் வீரம். அருணு சிறைப் படவில்லை; நூறு ஒற்றர் அவளைத் தேடினர்; ஆள் அகப்படவில்லை.

அவள் தலை மறைவா யிருந்தே புரட்சிக் கனலைத் தூண்டி நடத்தி இந்தியாவுக்கு இன்னும் வாள் வலியும் தோள் வலியும் உண்டு என்பதைக் காட்டினள்.

அருணு ஊர் ஊராகச் சென்ருள். வாலிபர் வீரத்தைக் கிளப்பினள். ஊருக்கு ஒரு வேடம் போட்டாள். இன்று பம்பாயில் வெள்ளுடை தரித்துப் புரட்சி வேகத்தைத் தூண்டுவாள் — ஒற்றரும் போலீஸாரும் துரத்தி வருவார்கள். நாளையே அலகாபாதில் செவ்வுடை தரித்து வேலை செய்வாள். சிகப்புப் புடவையை ஒற்றர் குறி வைப்பார். மறுநாள் லாகூரில் பச்சைப் புடவை யணிந்து தொண்டு செய்வாள். ஒரு நாள் கிறிஸ்து மடத்துக் கன்னிபோல் உடை யணிவாள்; மறு நாள் லாடச்சி, இன்னெரு நாள் அசல் வெள்ளைக்காரி, மற்றெரு நாள் மராட்டிச்சி, வேறெருநாள் வங்கச்சிபோல் உடையணிந்து பலவிதமாகத் தோன்றுவாள்.

அவளைக் கண்டுபிடித்துத் தருவோருக்கு, சர்க்கார் ரூ. 5000 இனும் என்று விளம்பரம் செய்தது. எந்த இந்தியனும் அப்படித் துரோகம் செய்யவில்லை. இந்தியாவிலுள்ள ஒவ்வொரு நகரிலும் ஒற்றர் வலைபோட்டு அலசிப் பார்த்தும் ஏமாந்தனர். அருணு முன் ஜாக்கிரதையுடன் இருந்து ஒற்றர் கண்ணில் பொடி தூவினள். அருணுவே ஒரு நாள் சொன்னலொழிய அவள் வீரச்செயல்களை வேறுயாரும் அறியமுடியாது. மேலும் அவைகளைச்சொல்ல இன்னும் காலம் வரவில்லை. அவள் சகாக்கள் பலர் இன்னும் தலைமறைவாகவே இருக்கிருர்கள். அவர்களுடைய புரட்சி முழக்கமும் கேட்கிறது.

இங்கே மாதிரிக்காக இரண்டு செயல்களைச் சொல்லுகிறேன்:

அருணு ஒரு நாள் ஒரு மலைக்காட்டில் மறைந்திருந்தாள். தோழர்கள் அங்குமிங்கும் புரட்சி செய்துவந்து "அருணு! உடனே வேறிடம் செல்; ஒற்றர் வருகின்றனர்" என்றனர். அன்று நல்ல மழை; சுற்றிலும் பத்து மைலுக்கு ஒற்றர் வலை விரித்திருந்தார்கள். அருணு சிறிது யோசித்துக் கொண்டிருந்தபோது, திடீரென்று ஒரு துரோகி தோன்றி மெல்லப் பேச்சுக்கொடுத்து, அருணுவுடன் நானும் புரட்சி செய்யவிரும்புகிறேன் என்று தொடங்கினன்.

"அருணு எங்கோ லாகூரில் இருப்பதாகக் கேள்வி" என்று ஆளைமடக்கி

அனுப்பிவிட்டு, உடனே ஒரு வெள்ளைக்காரி வேடம்பூண்டு வெளிக்கிளம்பினாள். ரயிலில் ஒரு பத்திரிகை வாங்கிப் படித்தாள். அதில் ஒரு வெள்ளைக்காரக் குடும்பத்திற்கு ஒரு வெள்ளைக்காரப் பெண் வேண்டும் என்று எழுதியிருந்தது. அருணா உடனே அந்தக் குடும்பத்தில் ஒருத்தியாகச் சேர்ந்து அசல் வெள்ளைச்சி மாதிரி நடித்துத் தப்பினாள். அவளைப் பிடிக்க வந்த ஒற்றர் அனைவரும் ஏமாந்து போனார்கள்.

மற்றொரு தடவை அருணா வயிற்றுக் கடுப்பினால் மிகவும் வருந்தினாள். தோழர் அவளை ஒரு நண்பர் வீட்டில் கொண்டு விட்டனர். அங்கே ஒரு மாஜிஸ்திரேட்டே வந்து விட்டான். அதுவும் அருணாவுக்குத் தெரிந்தவன். அருணா தைரியமாக அவனுடன் பேசி, அவன் நெஞ்சில் கைவைத்து "நீ உன் தேசத்திற்குத் துரோகம் செய்யாதே" என்றாள்-ஆள் பேசாது போனான்.

அக்காலமே அருணாவின் தாயார் இறந்தாள். அருணா போகமுடியாமல் தவித்தாள்,

"இந்தியத்தாயில் எனது தாயும் கலந்து போனாள்" என்றாள்.

அருணாவின் புரட்சிக் கூட்டம் ரேடியோகூட வைத்து வேலை செய்தது. அதற்கென இரகசியப் பத்திரிகையும் இருந்தது.

இப்படியெல்லாம் பெரிய வீரச்செயல்களைச் செய்தாள் அருணா.

அவள் செயல்களைச் சுதந்திர இந்தியா அவசியம் எழுதும். அப்போது உலகமே இப்பெண்மணியைக் கண்டு வியக்கும்.

கிலிபிடித்த
அலிகள் போலக்
கெஞ்சும் காலம் போனதே
புலியைப் போல
உரிமை காக்கப்
போர் புரியு நாளிதே!


# MEHTA'S SPECIALITIES

*Well-known for their efficacy and Medicinal values*

1 **SUNDARI ELIXIR**
For all kinds of female irregularities in menses and a great uterine tonic.

2 **PHOSPHORUS OIL**
A great pain relieving oil ever prepared in annals of medicine.

3 **MASTANA PILLS**
Unique in the field, combining both Allopathic & Ayurvedic systems, curing general debility, Rheumatic pains, Hay fever & what not.

4 **DRAKHYASAVA WITH GOLD & MAKARDHWAJA**
A great Blood Purifier & digestive & Potential Tonic.

*Stocked by all important Chemists & Druggists of South India*

**K. S. MEHTA & CO.**
**250, China Bazaar, MADRAS.**

# "நயத்தக்க நாகரிகம் வேண்டுபவர்"

வே. சாரநாதன்

செந்தமிழ் வேதம் என்று புகழ்பெற்ற திருக்குறளின் அடிப்படையான உபதேசத்தினுல் ஒரு மனிதன் நாகரிகப் பண்புள்ளவனுகிருன் என்பதை நம் நாட்டுப் பிரமுகர்கள் நன்கறிந்தவர்கள். ஐசுவரியந் தேடுவதிலேயே ஆயுளைக் கழித்தவரும், படிப்பு வழிகளிலேயே வாழ்க்கைப் பயணைத் தேடியவரும் "இனிமை"—நயமாக நடத்தல்—என்ற கடமையைக் கைப்பிடித்து வந்திருக்கின்றனர். இந்த நற்குணத்தைப் புகட்டி வந்த வண்ணமாகவே பாரத நாட்டின் விந்தையான சரித்திரம் விளங்குகிறது.

தந்தை யினிதுறத் தானர சாட்சியும்
தையலர் தம் முறவும்-இனி
இந்த உலகில் விரும்புகிலே னென்ற
தெம்மனை செய்த வுள்ளம்

என்று கவி பாரதியார் பாடியிருப்பது லௌகிக நடவடிக்கைக ளெல்லாவற்றிலும் நம் நாட்டினர் காட்டிய "இனிமை"யைக் குறிக்கின்றது.

சிறப்பாகத் தமிழ்நாடு இத்தகைய நாகரிகத்தை ஒவ்வொரு வாழ்க்கைப் பயிற்சியிலும் அமைத்து விட்டிருப்பதை நம் எளிய மக்களிடத்திலேயே காணலாம். தென்னட்டுக் குடியானவர்களும், வணிகர்களும், சொற்ப செல்வமுள்ளவர்களும், பிறருடன் கண்ணேட்டம் என்ற அரசரிலக்கணத்தை யனுசரித்து வாழ்கிருர்கள். "கண்ணேட்டத் துள்ளது உலகியல்" என்ற நம்பிக்கை நம்மிடம் குடி கொண்டிருக்கிறது. நம்முடைய சரித்திர நாட்க ளெல்லாம் அவ்விதமே வாழ்ந்தோம். மேற்கத்திய நாகரிகத்தின் அம்சங்களான போட்டி, திண்ணக்கம் (ஊக்கம்) முதலியவை தற்காலத்தில்நம்மில் படித்தவர்களுக்குச் சகஜமா யிருக்கலாம். இப்பொழுது படித்தவர்களின் போட்டிக் கட்சிகள் இந்தியாவையே சித்திரவதை செய்கின்றன. ஆனுலும் பழைய வாசனை எங்கே போகும்? பணிவு, இனிமை என்பவை பிரதானம் என்ற உள்ளூறிய கொள்கை இருக்கின்றது

உத்தமரிடத்தில் இனிமையும் மெய்ம்மையும் ஒருங்கே வளரவேண்டும்; அவ்விதமே அநியாயங்களைக் கண்டு சினங் கொள்ளுதலும் வேண்டும். இனிமைக்கும் தர்மஆக்கிரகத்திற்கும் பொருந்தாதோ என்னவோ? மெய்ம்மையும் மிகக் கடினமான பயிற்சி. தர்மபுத்திரருக்கே ஒரு பொய் சொல்ல வேண்டும் நிலை ஏற்பட்டதல்லவா? அவதார புருடர்களுள் இராமனே மெய்ம்மையும் இனிமையும் வியக்கத்தக்க நிலையில் ஒருங்கே அமைந்தவன். "எப்பொழுதும் பிறருக்குப் பிரியமான வார்த்தையைச் சொல்; அப்பிரியமான வார்த்தையில் உண்மை யிருந்தாலும் அதைச் சொல்லாதே" என்ற பழைய கட்டளை இன்றும் கூறப்படுகிறது. நம் ஜாதியாரின் நயமான பேச்சானது சற்றுப் பொய்யுடன் கலந்தது என்று அந்நிய நாட்டினர் கூறியு மிருக்கிருர்கள்.

உலகில் நாம் நன்கு பழகியவரிடத்தில் கண்ணேட்டம் காட்ட வேண்டும் என்ற பழக்கம் தொன்று தொட்டு வந்ததாகும். எதையும் பொறுக்க வேண்டும்.

"பெயக்கண்டு நஞ்சுண் டமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர்"

என்பது திருவள்ளுவரின் தெய்வத்தன்மை பூண்ட உபதேசம். இது மகான்களுக்குரிய நடத்தை. நம் நண்பரிடத்திலுள்ள நற்குணங்களுக்குத் தகுந்தவாறு நாம் பரிவுகாட்டுகிறோம். நம் முன்னேர்கள் பரிவு அளவு கடந்தது. ஆனுல், உலகியல் இக் கண்ணேட்டத்திலுள்ளது என்ருர்கள்; அதெப்படி? "பொறு, பொறுத்துப்போ" என்றே நம் பெரியோர்கள் சொல்வார்கள். நாகரிகப் பண்பு இதுவே. ரோமாபுரியின் சக்கரவர்த்தி யாகிய மார்க்கஸ் ஆரீலியஸ் என்ற லௌகிக தர்ம ஞானி இதையே அடிக்கடி எடுத்துக் கூறுகிருர்: "தெய்வங்கள் என்ன செய்கின்றன! அக்கிரமமாய் மனிதர் நடப்பதை பொறுக்கத்தான் வேண்டியிருக்கிறது. எவ்வளவு பேர்கள் கெட்டவர்கள்; அவர்


லக்ஸ் டாய்லட்
சோப்பினுல்
கண்ணும்பா
தினந்தோறும்
அழகுபடுத்திக்கொள்ளும்
முறை இதுவே
LUX
TOILET SOAP
சினிமா
நட்சத்திரங்கள்
விரும்பும்
அழகையளிக்கும்
சோப்
லக்ஸ்
டாய்லட் சோப்பின்
நுரையை தாராளமாக
சருமத்தின்மேல்
தடவுகிறேன்..
சுத்தமான,
குளிர்ந்த ஜலத்தில்
கழுவுகிறேன்..
பின்பு, உலர்ந்த
மிருதுவான
துண்டினுல்
முகத்தை
துடைக்கிறேன்
கண்ணும்பாவிற்கு, அவருடைய அருமையான சருமத்தை குளுமையாகவும், அப்பழுக்கற்றதாகவும் செய்துகொள்ள ஒழுங்கான பாதுகாப்பு அவசியம் என்பது தெரியும். நீங்களும் உங்கள் சருமத்தை சீர்படுத்துவதில் சிரத்தையெடுத்துக் கொள்ளுகிறீர்களா? இந்த சுலபமான அழகுபடுத்திக் கொள்ளும் முறையை 30 நாட்கள் கையாளுங்கள். இவ்வெண்மையான, சிறந்த சோப்பின் குளிர்ந்த பரிமளத்தை நீங்கள் விரும்புவீர்கள். மேலும், இதன் தாராளமாயுண்டாகும் நுரை உங்கள் சருமத்தை சுத்தமாக்கி பளபளப்பை யளிக்கும். உங்கள் சருமத்திற்கு அதற்கு வேண்டிய பாதுகாப்பை யளியுங்கள். உண்மையான அழகையளிக்கும் லக்ஸ் டாய்லட் சோப்பைப் பயன்படுத்துங்கள்.
LTS. 152-23-40 TM
LEVER BROTHERS (INDIA) LIMITED

களைத் தெய்வங்கள் பாதுகாக்கவும் செய்கின்றன. நீ.—இதோ மரணம் உனக்கு. என்னவோ கெட்டவனைப் பொறுக்க முடிய வில்லை என்கிறாயே? நீயும் அவர்களில் ஒருவனாயிற்றே? பொய்யர்களுக்கும் அநீதிக்காரர்களுக்கும் நீ நல்லது நினைக்கவேண்டும். பொறு. எல்லாவற்றையும் மறந்து விடும் நிலையாகிய சாவு உண்டு. அந்நிலையில் அக்கேடுகளும் உன்னை மறந்துவிடும். எல்லாவஸ்துக்களும், உன்னை மறந்துவிடும். அகங்காரத்தை விடு'' ''கர்வமற்று, சாதுகுணம் பெற்று, சுத்தமாய், சிந்தனையுள்ளவனாய், படாடோபமற்று, நீதியை நேசித்து, தெய்வங்களை வழிபட்டு, பக்ஷமாய், பிரியனாய், தகுதியுள்ள காரியங்களிற் சிந்தையுள்ளவனாய் வாழ்வதற்கு உன்னையே சர்வதா ஸ்திரப்படுத்திக்கொள்'' என்று ஆரீலியஸ் போதிக்கிறார். ஆதிகாலத்துத் தமிழ்ப் பெரியார்களின் தெள்ளிய மனப்பான்மை இதைவிட ஒரு ரகம் மேலானது என்று தோன்றுகிறது. அவர்களிடம் பொது வன்பு ஒன்று உண்டு. ''நெஞ்சகத்தின் ஈரமுடைமை'' என்று அதைக் கூறினார்கள். ஆரீலியஸ் சொல்வது ''நான் நற்குணமுள்ளவனாயிருக்க வேண்டும். தங்கம் மரகதம், பட்டு இவை எப்படிக்கெடும். யார் எனக்கு என்ன சொன்னாலும், செய்தாலும், நான் மரகதமாகவேயிருப்பேன்.'' இத் தனிக் கருவம் பெற்ற ஞானிக்கும், தமிழ்ப் பேரருள் நாயகனாகிய வள்ளுவருக்கும் எவ்வளவு வித்யாசம்?

அறிவினா னாகுவ துண்டோ பிறிதினோய்
தந்நோய்போற் போற்றாக் கடை.

அழகுத் தெய்வத்தின் செயல் மலரினும் உரமுள்ளதன்று என்று ஷேக்ஸ்பியர் கூறுகிறார். கடவுளை வழிபடுவதாலும், கலைப் பயிற்சியில் உண்டாகும் பேராற்றலாலும், சுத்தமான மெய்யடக்கத்தாலும், கொஞ்சம் கொஞ்சமாய் அழகுத்தெய்வத்தின் செயல் போன்ற நல்லறிவைக் கைப்பற்றலாம். ஆங்கிலக் கவிகள் இயற்கையழகுபெற்ற நிலவளம், நீர்வளம், முதலியவை ஒரு மனிதனை இனியனாகச் செய்கின்றன என்று கூறுவதுண்டு. ஆனால் கொடிய இயல்பினர் இயற்கையழகைப் பருகியே வளர்வதுமுண்டு. நம்முடைய வாழ்நாட்களின் வலியதசையில் இவ்வருட் செல்வத்தைப் பெருவிட்டால், மூப்பு மூடும்போது நாமதைப் பெற்றுவிடமாட்டோம். ஒரு சிலர் இச் சித்தியைப் பிறப்பிலே மூலதனமாகப் பெற்று, உலக ஆர்ப்பாட்டத்தின் கூரிய பற்களால் வதைக்கப்பட்டாலும், பக்குவம் சிதறாமல் தங்கள் நிகரற்ற பெருமையைக் காப்பாற்றிக் கொள்கிறார்கள்.

இவ்விதம் தூய சித்தத்திற் பெருகும் இனிமையிலிருந்து விலகிய மற்றொரு இனிமை மனிதரின் சமூக உணர்ச்சிகளிலும் செயல்களிலும் தோன்றுவதுண்டு. அது செல்வாக்கின் நற்பயன்; நால்தோய்ந்த சிந்தையின் நற்பயன். உலகியலுக்கு அந்நாகரிகப் பண்பும் இன்றியமையாதது. கொள்கைகளை வற்புறுத்தும் கொடுமை அரசியல் குழப்பங்கள் எழும்பிய இந்நாட்களில் மனிதருக்கு மிகவும் சகஜமாயிருக்கிறது. கொள்கை மாறுபாட்டினால் ஒருவருக்கொருவர் கொடும்பகையை வளர்த்துக் கொண்டு கொலைபாதகச் செயல்களையும் ஏற்றுக் கொள்ளும் காலம் இது. ஆனால் ''கதங் காத்துக் கற்றவரின்'' அடக்கமானது இப் பகைக்கு நடுவில் இனிய மனம், இனிய மொழி, இனிய முகம் என்ற மானிடச் செல்வங்களைப் பிறப்பிக்க வேண்டும். பல துறைகளில் சிதறப்படும் மனிதத் தன்மையை எப்படியாவது பரிபாலித்து, நற்காலத்தை எதிர் பார்த்துக்கொண்டே, கல்வி கேள்விகளில் தேறியவர் இப்பொழுது வாழ்நாட்களைக் கழிக்கவேண்டும். ஒரு பத்திரிகையில் எழுதப்பட்டுள்ள தலையங்கக் கட்டுரை பிடிக்கவில்லையென்று அப் பத்திரிகையைக் கிழித்துவிட்டு, எங்கள் ''கிளப்'' வாசகசாலைக்கு எவ்வுத்தரமளிப்பது என்று யோசித்த போது, நான் ''நயத் தக்க நாகரிகம் வேண்டுபவரை''த் தியானித்தேன். மானிடன் இவ் வண்ணம் பின்னமானவுணர்வுகளை வைத்தே உயிர் வாழ்பவன் என்பது நன்றாகத் தெரிந்தது. ஆனால் ஸாக்ரடீஸ் அப்பேர்ப்பட்டவரல்ல; ஜனக மகாராஜன் அப்பேர்ப்பட்டவரல்ல; ஏன், ராஜேந்திரப் பிரசாத் அப்பேர்ப்பட்டவரல்ல. இவர்களே வசையிலா வாழ்க்கை பூண்ட மாந்தராவர்.

# சித்ரா

கே. சுந்தரம்மாள்

13

ஸோட்டின் மடிப்பு சரியாக அமைந்திருக்கிறதா என்று பார்த்துக் கொண்டே கோட்டைக் கையிலெடுத்து ஒரு கையை மாட்டும் சமயம் கதவு தாளிடும் சப்தம் கேட்கவே திரும்பினான், ஒரு கையை மாட்டினபடியே ஸ்தம்பமாக நின்றுவிட்டான்.

"படுத்துப் புரண்டதினால் கலைந்த தலை பரந்து நிற்க, எண்ணெய்ப் பசையற்ற பின்னல் மார்மீது தவள, சோகம் கண்களைத் தழுவ, வெளிறிய முகத்துடன் இவனை நோக்கிவந்த சித்ரா நான்கடி தூரத்தில் பக்கத்தில் கிடந்த நாற்காலியை ஆதாரமாகப் பிடித்துக்கொண்டு நின்றாள்.

ஐந்து நிமிஷம் மௌனத்தில் சென்றது. ஒருவரையொருவர் பார்த்தபடியே நின்றார்களே தவிர வார்த்தை வெளிவர மறுத்தன. கடிகார அரைமணிக் குறிப்பைக் காட்டும் சப்தம் இருவரையும் திடுக்கிடச் செய்தது. அவளது பரிதாபகரமான தோற்றம் அவன் ஹ்ருதயத்தில் சுரீரென்ற உணர்ச்சியை உண்டாக்கியது அந்த நிலையில்.

"போகும் பொழுது உன் அறைக்கு வருவதாக இருந்தேன். நீயே வந்து விட்டாய், சந்தோஷம். இப்பொழுது உடம்பு எப்படி இருக்கிறது? தலைவலியா, மனவலியா?" என்றான்.

"ஏதோ ஒரு வலி. எனது அறைக்கு வரும் சிரமத்தை உங்களுக்குக் கொடுக்க வேண்டாமென்றே வந்தேன், கடைசியில் என்னை என்ன செய்வதாக உத்தேசம்?"

"நான் உன்னை என்ன செய்வது?"

"ஐயோ! இதென்ன இரக்கமற்ற பேச்சு" என்று சொல்லும் பொழுதே எதிரில், குழந்தையுடன் மேனகையை விச்வாமித்திரர் திரஸ்கரிக்கும் காட்சிப் படத்தின்மீது அவள் கண்கள் சென்றன. அவனையறியாது அவன் கடைக்கண்ணும் அதை நோக்கியது. 'அம்மா! உன் புத்திமதியைத் திரஸ்கரித்ததின் பலனை அனுபவிக்கிறேன். தெய்வமாக நின்று என்னை உன்னுடன் அழைத்துச் செல்ல மாட்டாயா' என்ற சொற்கள் ஈனஸ்வரத்தில் அவள் வாயிலிருந்து வெளி வந்தன. மறு விநாடி கீழே சாய்ந்து விட்டாள். பதறியவாறே ஒரு கையில் மாட்டியிருந்த கோட்டை வீசியெறிந்து விட்டு, அவள் கீழே சாயுமுன், கையில் தாங்கி, இருகைகளினாலும் தூக்கித் தனது கட்டிலில் படுக்க வைத்து, குழாய் ஜலம் தெளித்து, மின்சார விசிறியின் காற்று அவள் முகத்தில் படும்படி வைத்தான். கண்களை விழித்தாள்: தனக்காகக் கொண்டு வைத்திருக்கும் பாலை எடுத்து, அவள் பக்கத்தில் உட்கார்ந்து ஒரு வாய் உள்ளே செலுத்தினான், உணர்வு உண்டாய்விட்ட படியினால், "வேண்டாம் நீங்கள் சாப்பிடுங்கள்" என்றாள் அயர்ந்த குரலில்.

"காலையிலிருந்து ஒன்றும் சாப்பிடவில்லையென்று தெரிகிறது. ஏனிப்படிச் செய்தாய்? பிடிவாதம் செய்யாமல், எனக்காக வேண்டாம், உனக்காவும் வேண்டாம், உன் சிசுவிற்காகச் சாப்பிடு" என்று பால் டம்ளரை வாயருகில் வைத்தான்.

பாலைச்சாப்பிட்டானதும், "அபலை என் பதினால்தானே இப்படியெல்லாம் பேசுகிறீர்கள்.? உங்கள் வெறுப்பிற்கு ஆளாகிவிட்டால் பாலைவனப் பிரயாணம் எனது வாழ்வு என்பதை உங்கள் மனம் அறிந்துதானே சொல்லுகிறீர்கள்? பட்டணத்தில் தாங்கள் பிரசங்கம் செய்வதைப் பற்றிப் பத்திரிகைகளில் படித்து மகிழ்ந்து மனப்பால் குடித்தேன். ஏட்டுச்சுரைக்காய் கறிக்குதவாது என்ற உண்மை இன்றுதான் புலனாயிற்று, நான் இல்லாவிட்டால்

அந்தக் குறையை மற்றொருத்தி பூர்த்தி செய்துவிடுவாள். ராஜபாட்டையில் உங்கள் வாழ்க்கைப் பிரயாணம் தொடங்கிவிடும். இது சர்வசகஜம். நேற்று ஏதோ பாக்கி இருக்கிறது என்று சொன்னீர்களே! அதைக் கொடுத்துவிடுங்கள்'' என்றாள் அமைதியாக.

''இவ்வளவு தானா? இன்னும் ஏதாவது உண்டா? உன்னைச் சொல்லிப்பயன்! என் முட்டாள்தனத்தை யல்லவோ நோக்க வேண்டும்? என் கொள்கையைப் பிரசங்கத்தோடு நிறுத்துவதாக இருந்தால் இவ்வளவு நாள் இவ்வளவு எதிர்ப்புக்களைச் சஹித்துக்கொண்டிருக்க வேண்டிய அவசியமே இல்லை. இவை நீ அறியாதவை இல்லை. தற்சமயம் உனது மனநிலையில் இப்படிச் சொல்லுகிறாய். விதி!'' என்று நீண்டமூச்சுவிட்டு, ''இந்தச் சமயம் உன்னை எவ்வளவு அன்புடனும் சந்தோஷத்துடனும் நடத்தவேண்டும் தெரியுமா? பணமிருந்தென்ன, பதவியிருந்தென்ன? நீ கேட்டதை இந்தச் சமயம் கொடுத்தேனானால் நேற்று ஏதோ ஒரு பானம் கொடுக்கச் சொன்னாயே அது தேவையில்லாமல் செய்துவிடும்'' என்று அவள் கை நாடியைப் பார்த்தவண்ணம் கூறினான்.

''அப்படியானால்?''

''இன்னும் பதினைந்து நாள். பரீக்ஷை முடிந்து வந்துவிடுவேன். அவ்விடமிருந்தே சிறந்தமுறையில் தயார்செய்து வருகிறேன். என் ஏற்பாடு அவசியமென்பது இப்பொழுதாவது உனக்குப் புலப்பட்டது நமது காதலின் ஆழத்தைக் காண்பிக்கிறதல்லவா? வேறு எதுவேண்டுமானாலும் நடக்கலாம். ஹ்ருதயத்தில் உன் ஸ்தானத்தை ஒருவரும் கைப்பற்ற முடியாது என்பதை உன் மனம் அறியாமலிருக்க முடியாது. இதைப்பற்றின பேச்சே இனிவேண்டாம். உலகில் தவறுதல் சகஜம். ஆனால் அதைப் புத்திவன்மையைக் கொண்டு திருத்திக் கொள்ளுவதே வாழ்க்கையின் லக்ஷ்யம். சரி, நமது சண்டை தீர்ந்துவிட்டதல்லவா? இனிமேல் சேத்திதானே? எங்கே உன் கையினால் வெற்றிலை கொடு பார்க்கலாம்?'' என்று கட்டிலின் தலைப்பக்கத்தில் பூச்செடி போல் அமைக்கப்பட்ட ஸ்டாண்டிலிருந்து வெற்றிலைப் பெட்டியை எடுத்து அவள் பக்கத்தில் வைத்தான்.

அவள் மீது சாய்ந்தபடி அவள்கொடுக்கும் வெற்றிலைச்சுருளை வாயினாலேயே வாங்கிக்கொண்டு அவளையே வெறிக்கப் பார்த்த வண்ணமிருந்தான்.

''ரயிலுக்கு நேரமாகவில்லையா?'' என்றாள்.

''இன்னும் ஒரு மணி அவகாசமிருக்கிறது கவலைப்படாதே'' என்று சற்று நேரம் அவளை உற்றுப் பார்த்துக்கொண்டிருந்து விட்டு ''சித்ரா,'' என்றான்.

''ஏன்?''

''சாதாரணமானவர்களே இந்தச் சமயம் அழகுள்ளவர் போல் தோன்றுவார்கள். தலைவிரிந்த கோலத்திலும் உன் முகத்தின் பளபளப்பும், காந்தியும்! ஆஹா! உன் அழகு அதிஅற்புதம்!''

''என்ன பிரயோஜனம்? என் அழகு உங்கள் அம்மாவைக் கவரவில்லையே!''

''அம்மாவிற்கு உன் அழகு உபயோகம்?''

''உலகத்திற்கு அப்படி. என் மட்டிலும் அது மாறுபாடான விஷயமே''

''சரி. இந்தமட்டும் இன்று உன் பிணக்குத் தீர்ந்தது என் பிரயாணத்தைச் சுகமாக்கும். நீ சற்று நேரம் இவ்விடமே படுத்துக்கொண்டிருந்துவிட்டு, பிறகு கீழே செல். நான் போய்வரட்டுமா? சந்தோஷமாக இருக்கிறாயா? தினம் ஒரு கடிதம் எழுது, நானும் எழுதுகிறேன். அப்பொழுதுதான் கவலைவிடும்''

''அப்படியே செய்கிறேன். ஆனால் நீங்கள் சென்றதும், பின்கட்டு வழியாகச் சென்றுவிடுகிறேன்.''

''சரி உன்னிஷ்டம்.'' என்று எழுந்தான். அவளும் எழுந்து உட்கார்ந்தாள்.

''புஸ்தகம் போன்ற உயர்ந்த பாம்புத்தோலினால் செய்யப்பட்ட பர்ஸ் ஒன்றை எடுத்துவந்து, அவளிடம் கொடுத்து, இதில் இரண்டாயிரம் ரூபாய் இருக்கிறது. ஜாக்கிரதையாக வைத்துக்கொள். ஒரு சமயம் நமது தனிப் பிரயாணம் ஏற்படுவதானால் இது அவசியம்.''

''இது ஏது?''

''நான் சொந்தமாக ஒரு சினிமாக் கம்பெனியில், ஷேர் எடுத்தேன். அதில் வந்த லாபம் இது. கணக்கில் வரவு வைக்காதது. பயப்படாதே'' என்றான்.

''ஏன் இது உங்களிடமிருந்தால்?''

''சற்றுமுன் அபலை என்றாயல்லவா? அதற்காக உன்னிடம்தான் இருக்கவேண்டும்.''

"தங்கள் சித்தம்''

"நான் சென்று வரட்டுமா?'' என்று சொல்லும்பொழுதே கோட்டை எடுத்துவந்து போட்டு விட்டாள். பித்தான் மாட்டினதும் அப்படியே அவளை அணைத்துக்கொண்டான். தோளில் சாய்ந்து கண்ணீர்விட்டாள். முத்த மழையினால் அவளைச் சமாதானம் செய்தான். இன்னும் பதினைந்தேநாள் பொறுமையுடன் கழி, ஓடி வந்துவிடுகிறேன்'' என்று தைரியம் சொல்லி அவள் மனமுவந்து அளித்த காதல் முத்தங்களை ஏற்றுக்கொண்டு பிரியாமனதுடன் ரயிலுக்குச் சென்றான்.

அவன் சென்ற ஐந்தாவது நாள். காலை ஒன்பது மணி. ஸ்நானம் செய்துவிட்டுக் கண்ணாடி முன்னின்று பொட்டிடும்பொழுது தனது ரூபம் அளவுக்கு மிஞ்சி பிரகாசித்ததைக் கண்டு ஆனந்த பரவசமடைந்தது அவள் மனம். தனது மாறுதலை ஸீதாலக்ஷ்மி அறியாமலிருப்பது ஆச்சர்யம் என்றெல்லாம் எண்ணி, தனக்குத்தானே சிரித்துக்கொண்டாள். அந்தச் சமயம், வேலைக்காரன் கவர் ஒன்றைக்கொடுத்தான். அது பிரபாகரனின் அன்புமிக்க சொற்களால் நிரம்பிய கடிதம். தான் மிக்க அபூர்வமான முறையைக் கொண்டுவரப் போவதாகவும் பிறகு நடக்கும் விஷயங்களின் ஆகாயக்கோட்டையையும் வர்ணித்திருந்தான். படித்ததும் அவள் மனம் இன்னும் குதூகலமடைந்தது.

"எனது உள்ளமே; எங்கும் நிறைந்த இன்ப வெள்ளமே'' என்று பாடி மகிழ்ந்து கொண்டிருந்தாள். அந்தச் சமயம் வேதம் அவ்விடம் வந்து ஸீதாலக்ஷ்மி அவளைக் கூப்பிடுவதாகச் சொல்லவே அவ்விடம் சென்றாள்.

'சித்ரா! எனக்கு உடம்பு ஒருமாதிரியாக இருக்கிறது. மிஷன் ஆஸ்பத்திரியில் யாரோ ஒரு டாக்டர் புதிதாக வந்திருக்கிறாளாம். அவளிடம் உடம்பைக்காண்பிக்கப் போகிறேன், நீயும் வருகிறாயா?'' என்றாள்.

ஏதோ அவள் மனம் துணுக்குற்றது. இருந்தாலும் "வருகிறேன்'' என்றாள்.

அதுவரையும் சென்றறியாத ஆஸ்பத்ரிக்கு ஏன் செல்ல வேண்டுமென்றே சித்ரா அவள் பின்னாக டாக்டரிடம் சென்றாள். கேட்டிலிருந்து ஸீதாலக்ஷ்மி நோட்டு நோட்டாக வீசவே, சீட்டு வழக்கத்திற்கு மாறாக, சீக்கிரமே டாக்டரைப் பார்க்க

பாத்ருடுவின்
பால சஞ்சீவினி (Regd.)
(இது ஒன்றுதான் அசல் விஜயநகர மருந்து)
குழந்தைகளின் ஈரல்குலைக்கட்டி வியாதிகளுக்குச் சிறந்த மருந்து
சொற்ப காலத்திலேயே நிச்சய குணமளிக்கும்
48 வருஷகாலமாகப் பல்லாயிரக் கணக்கான குழந்தைகளை இக்கொடிய குலைக்கட்டி வியாதியினின்று காப்பாற்றியிருப்பதனால் பல பிரக்யாதி பெற்ற டாக்டர்கள் இச்சஞ்சீவினியை உபயோகித்துக் கொண்டிருக்கிறார்கள்.
எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும்.
போலி மருந்துகளைக்கண்டு ஏமாறாதீர்கள்
டாக்டர் பிள்ளா பாபய்ய பாத்ருடு & பிரதர்,
1, தெற்கு மாடவீதி, மயிலாப்பூர், மதராஸ்.
கும்பகோணம் கிளை :— 7, சாரங்கபாணி கோவில் கீழவீதி.
திருச்சி கிளை :— 15, புகழியபிள்ளை தெரு, தெப்பக்குளம் போஸ்டு.

முடிந்தது. டாக்டரிடம் ''இந்தப் பெண்ணின் உடம்பு சரியான நிலைமையிலிருக்கிறதா என்று பார்க்கவேண்டும்'' என்றாள் ஸீதாலக்ஷ்மி.

திடுக்கிட்டுப் பதறினாள் சித்ரா. இவ்விதம் தந்திரமாகவே தன்னைச் சீர் குலைக்கிறாள்; இந்தச் சமயம் எப்படி தப்புவது? அவ்விடத்தில் தர்க்கம் செய்வது ஆபாசம். விதியின்றி டாக்டர் பின்னால் பரிசோதனை அறைக்குச் சென்றாள்.

திரும்பி வந்ததும் ''இது மகளா, மருமகளா?'' என்றாள் டாக்டர்.

''மருமகள்'' என்றாள் பதில்.

இவ்வாக்யம் தேவாமிர்தம் போலிருந்தது சித்ராவின் செவிக்கு.

''கவலையே படவேண்டாம். எல்லாம் நன்றாகவே இருக்கிறது. மூன்று மாதம் பூர்த்தியாகிவிட்டது. எல்லாம் நார்மல். ஆரோக்யமும் பலமும் ஒத்த உடம்பு. கர்ப்பமும் மிகவும் சரியான நிலைமையில் இருக்கிறது. மருந்து ஒன்றும் தேவையில்லை. நல்ல 'பாடி'யை மருந்து கொடுத்துக் கெடுக்க வேண்டாம்'' என்றார்.

பத்து ரூபாய் நோட்டு இரண்டை அவரிடம் கொடுத்து விட்டு, ''வரட்டுமா'' என்றாள்.

''சரி இருந்தாலும் மாதம் ஒரு முறை என்னிடம் அழைத்து வாருங்கள். நமஸ்காரம்'' என்று கை குவித்தார்.

''சித்ரா, வா போகலாம்'' என்று நடந்தாள். வண்டியில் நிசப்தம் நிலவியது. லஜ்ஜையினால் சித்ராவின் மனம் வாடிற்று. ''இனிமேல் அவள் கேள்விக்கு எப்படிப் பதில் அளிப்பது'' என்ற சிந்தனையுடன் வீடு வந்து சேர்ந்தாள் சித்ரா.

ஒன்றுமே கேட்காமலிருந்தது ஆச்சர்யத்தைக் கொடுத்தது சித்ராவிற்கு. அமைதியாகச் சாப்பாடு முடிந்தது. யஜமானர் ஆபீஸ் சென்றார்.

மாடியிலுள்ள தங்களது படுக்கை யறைக்குச் சித்ராவை அழைத்துச் சென்று, கதவை உட்புறம் தாளிட்டுக்கொண்டு. ஒரு நாற்காலியில் உட்கார்ந்தாள். சித்ரா எதிரில் நின்றாள்.

''என்னடி மானங்கெட்டவளே! எவனுக்கு உண்டானாய்?''

''ஐயோ இதென்ன கேள்வி யம்மா! டாக்டரிடம் முறை சொன்னீர்களே. பிறகு சந்தேகம் எதற்கு?''

''மாமி மட்டி. அவள் கண்ணில் மண்ணைத் தூவிவிடலாம் என்று நினைத்தாய் போலும். ஏதோ உன் மாதக் கணக்கு ஐம்பது? அறுபது என்று போவதினால் என்னை ஏமாற்றவும் உனக்கு வசதியாயிற்று. ஒரு மாதம் முன்னாகவே உன்முகம் பறையடித்துவிட்டதே. நான் என்ன பிள்ளை குட்டி பெறாதவளா? இதைப் பார். அவன் உன்னுடன் சுற்றினது நிஜம்தான். ஆனால் அவன் இவ்வளவு துணியமாட்டான். அவன் தலையில் பழியைப் போட்டுவிட்டு நீ எவனையோ......'' என்று முடிக்குமுன்,

''ஐயோ! அம்மா! இதென்ன கொடூர வார்த்தை. கனவில்கூட அவரையன்றி வேறு சிந்தனை எனக்குக் கிடையாதே! லஜ்ஜையை விட்டுச் சொல்லுகிறேன். நீங்கள் சௌதாவைக் கொண்டுவிடப் போன மூன்றாம் நாள் இவ்விடம் வந்தார். அப்பாவும் ஊருக்குச் சென்றுவிட்டார். எவ்வளவோ முயன்று பார்த்தேன். அவர் கேட்கவில்லை. இப்பொழுது அவர் சென்ற பின்பு வந்த இரண்டு கடிதங்களைப் படித்துப் பாருங்கள். பொறுப்பாளி யாரெனத் தெரிந்துவிடும்.

''அப்படித்தானிருக்கட்டும். ஆண்பிள்ளைகள் அப்படித்தான்..................கல்யாணமாகாதவளான நீ அதற்கு இடங்கொடுக்கலாமா?''

''தப்பிதந்தான். விதி என் மதியை மயக்கிவிட்டது''

''மதிமயக்கம்! இப்படிச்செய்து விட்டால் நினைத்ததைச் சாதிக்கலாம் என்றுஎண்ணம். எனக்கு எல்லாம் தெரியும். நீங்கள் பளிங்கு மண்டபம் செல்லுவது, ஒருவருக்கும் தெரியாது என்பது உங்கள் நினைப்பு. ஏறவிட்டு ஏணிவாங்கும் உத்தேசத்துடன் தான் உன்னை அவனுக்குக்காப்பிகொண்டுபோய்க் கொடுக்கும்படிக்கும் வெளியில் அழைத்துச் செல்லவும், அவன் அறையில் நீ படிப்பதையும் தடுக்காமலிருந்தேன். இப்பவும் நான் நினைத்தால், இதற்கு அவன் பொறுப்பாளியில்லையென்று உன்னைச் சந்தி சிரிக்க வைத்துவிடுவேன்.''

''அவர் அப்படி நம்பமாட்டார்''

''அவர் நம்பமாட்டார். நீதான் எல்லாம் கண்டுவிட்டாய். ஆண்பிள்ளைகள் பச்சோந்தி போன்றவர். கண்டு கேட்டு சலித்து ஐம்பது

வயதான எனக்குத்தெரியாத அவரை நீ கண்டுவிட்டாய்! பிரசங்கமாரி பொழிவான். பெண்களை கண்ணெடுத்துப் பார்க்கக் கூடாது. யாவரும் சகோதரி என்று சொல்லுவான். காளைப்பருவத்தில் அழகிய பருவப்பெண் தனியாகப் பக்கத்தில் போய் நின்றால், சும்மா விட்டுவிடுவானா? அது தெரியாமலா உனக்கு இடங்கொடுத்தேன். இன்று எப்படி உன்னைத் தந்திரமாக ஆஸ்பத்ரி அழைத்துச் சென்றேனோ அதே போல் சரியான ஆதாரம், நீ அவனை ஏமாற்றியதாகக் காண்பித்து விட்டேனானால் உன்னை ஏறெடுத்துப் பார்ப்பானா? உன்னைப்பார்க்கும் பொழுது, நீதான் சகலமும், என் மனம் மற்றவளைக் கண்ணெடுத்தும் பார்க்கமாட்டேனென்று ஆயிரம் சத்யம் செய்வான். நீ இல்லாதவிடத்தில் மற்றவள் அருகில் நெருங்கினால் அவளிடமும் இதே பாட்டுத்தான். இதில் சந்தேகம் என்ற பேய் ஆண்களைத்தான் அதிகம் ஆட்டுவிக்கும் தெரியுமா?''

"நீங்கள் சொல்லுவது உண்மையாக இருக்கலாம். ஆனால் ஆண்களெல்லோரும் சலனமுடையவர் என்றோ, பெண்கள் உறுதியுடையவர்கள் என்றோ மொத்தமாகச் சொல்லுவது சரியாகாது. இருபாலாரிடத்தும் இருவித குணங்களும் இருப்பது நிச்சயம். அவரவர் குணத்தையும் நடப்பையும் பொறுத்து நிச்சயிக்க வேண்டும். நான் பழகின மட்டில் என்னிடத்தில் அவர் நடந்துகொண்ட மாதிரியிலிருந்து, அவர் அத்தகைய மனம் படைத்தவரல்ல. நீங்கள் என்ன பழிசாற்றினாலும் அதை அவர் நம்பமாட்டார். வேறு பெண்ணையும் விரும்பமாட்டார்'' என்று பதறாமல் பதில் சொன்னாள்.

"ஓஹோ! அவ்வளவு தைரியமா? விருதுப்பட்டிச் சனியனை விலைக்கு வாங்கினதுபோல் உங்களை என்று வீட்டில் அழைத்தேனோ அன்றே வினைதான். உன் பொருட்டு, அவன் நான் அவர் அவள் நால்வருக்கும் விவாதம் வளர்ந்துகொண்டிருக்கும். கடைசியில் இக்குடும்பத்தில் இளையராணிப் பதவிக்கு வந்துவிட்டாய். ஆனால் நான் அதற்கு இடந்தரமாட்டேன். சுகன்யா தான் அந்தப்பதவிக்கு உரியவள். நீ இன்றே இவ்வீட்டைவிட்டுச் சென்றுவிடவேண்டும். தற்கொலை பண்ணிக்கொண்டு சாவாயோ, கண்காணாமல் சென்று பிழைப்பாயோ தெரியாது. நாளை சூரியோதயத்தை இவ்வூரில் நீ பார்க்கக்கூடாது. அவனிடம் சென்று, அவன் வந்து அப்பா, பிள்ளை எல்லோருமாக உன்னை இவ்விடம் நாட்ட ஏற்பாடு செய்தால், கட்டாயமாக உன்னையும் அவனையும்சேர்த்துவாழ என் கண் பார்க்காது. இருவரையும் விஷமிட்டுக் கொன்றுவிடுவேன். என் கௌரவம்தான் எனக்குப் பெரிது. நாலுபேர் பார்த்து நாலுவித வார்த்தைகளைச் சொல்ல, என் மனம் சஹிக்காது. ஒரு குடும்பத்திற்காக ஒரு பிள்ளையை விடலாம் என்று சாஸ்திரம்கூடச் சொல்லுகிறது. மானங்கெட்டவளே! வாக்கா வழியா ஒரு கல்யாணம் செய்து நன்றாக இருக்கட்டும் என்று பார்த்தால் துர்க்குறி மூதேவி மாலையை வீசி யெறிந்து அவனைக் கொன்றாய்? பாவி பழிகாரி அவளும் என்னை ஊர்வாயில் விழ வைக்கச் செத்துக் கெடுத்தாள். அந்த அமளி அடங்கட்டும் என்றும் அந்தச் சௌதா சனியன் வேறு பிராணனை வாங்குமே என்றும், இவ்வளவுநாள் இப்படிச் செல்லமாக நடக்க இடங்கொடுத்தேன், சண்டாளி! உன் பிள்ளையை எடுத்துக்கொஞ்சுவேனா நான்?'' என்று சரமாரியாகச் சொல்லிமுடித்தாள்.

கண்ணீர் வடியக் கேட்டுக்கொண்டிருந்த சித்ரா அவள் காலில் விழுந்து பாதத்தைக் கெட்டியாகப்பிடித்துக்கொண்டு,"அவரைப் பெற்ற தாங்கள் தெய்வமாகப் போற்றக் கூடியவர். எதுவேண்டுமானாலும் சொல்லுங்கள், கேட்டுக்கொள்ளுகிறேன். என்னை இந்த நிலைமையில் வெளியில் அனுப்பாதீர்கள். இவ்வீட்டில் அடிமையாகக் கிடக்கிறேன். சுகன்யாவை அவர் மணந்து கொள்ளட்டும். மூன்றும் வருஷம் உங்கள் அக்கா பெண்ணிற்கு மருந்துகொடுத்து நிலைமையைச் சரி பண்ணினதுபோல் செய்து விடுங்கள்.'' என்று கல்லும் உருகக் கதறினாள்.

பேய் மனம் இரங்கவில்லை. எட்டி உதைத்துத் தள்ளிவிட்டு உன் "சாகசமெல்லாம் என்னிடம் செல்லாது. மரியாதையாக வெளியில் சென்றுவிடு. இல்லையேல் நாலுபேர் காறி உன் முகத்தில் உமிழும்படி செய்து அனுப்பிவிடுவேன்'' என்றாள்.

"உதைத்த வேகத்தில் எட்டி விழுந்த சித்ராவின் பக்கத்தில் ஒரு பத்திரிகையில் கிழிந்த துண்டு கிடந்தது. அவள் கையை ஊன்றி உட்கார்ந்ததும், அதிலுள்ள காப்டன் லக்ஷ்மியின் படம் வீரகளை ததும்பத் தென்பட்டது. அதையே சற்று நேரம் பார்த்துக் கொண்டிருந்தாள். சட்டென மனதில் ஒரு தைரியம் ஏற்பட்டது. எழுந்து நின்றுகொண்டாள்.

"சரி நான் இதோ போய் விடுகிறேன். ஆனால் என் மனதில் தோன்றுவதைச்

சொல்லி விட்டே செல்லுவேன். எளியரை வலியார் வாட்டினால் வலியாரைத் தெய்வம் வாட்டும். நான் சாகப் போவதில்லை. உங்கள் பிள்ளையினிடமும் போகப் போவதில்லை. அனாதைக்குத் தெய்வமே துணை நிற்கும். நான் ஒருவனுக்குப் பிறந்து ஒருவனுக்கு முந்தி விரித்தது, சத்தியமானால், என்னையும் என் குழந்தையையும் இதே வீட்டில் ஒரு காலத்தில் விமரிசையுடன் வரவேற்பீர்கள். பணம், பதவி இரண்டைத் தவிர நான் எந்த விதத்தில் உங்கள் நாட்டுப் பெண்ணாக வர அருகதை யற்றவள்? என்னிடம் என்ன குறை கண்டீர்கள்? எங்களுடைய அன்பு தெய்வீக சக்தி பெற்றது. இந்தச் சமயம் பிரிந்தாலும், ஒரு காலத்தில் நான் அவரை அடையாமல் போக மாட்டேன். பெண்ணுக்குப் பெண் இரக்கமில்லை. என்னை இந்த நிலைமையில் வெளியில் தள்ளுகிறீர்கள். என் வயிறும் மனமும் எப்படித் துடிக்கின்றதோ அந்த வினை உங்களை விடாது. நமஸ்காரம், சென்று வருகிறேன்'' என்று சொல்லிக் கதவைத் திறந்து வெளியில் சென்று விட்டாள்.

''சனி ஒழியட்டும். என் இஷ்ட விரோதமாக இந்த வீட்டில் ஒரு காரியம் நடக்க முடியுமா?'' என்று சொல்லிக் கொண்டே வெளியில் வந்தாள் ஸீதாலக்ஷ்மி.

அவளால் தூக்க முடியுமான ஒரு தோல் பெட்டியில் பிரபாகரன் மிகவும் பிரியமாக வாங்கிக் கொடுத்த புடவைகளையும் ஜாக்கெட்டுகளையும் எடுத்து வைத்துக் கொண்டாள். பரிசு பெற்ற சாமான்கள், பிரபாகரனும் அவளும் சேர்ந்து எடுத்துக் கொண்ட போட்டோ, முக்கியமான நாலைந்து புஸ்தகங்கள், இவைகளை வைத்துவிட்டு, அன்று அவன் கொடுத்த பர்ஸையும், முன்னால், தான் பள்ளிக்கூடத்தில் பரிசுபெற்ற ரூபாய், அவன் போகும்பொழுதெல்லாம் கொடுத்தவை எல்லாவற்றையும் எண்ணிப் பார்த்தால் மொத்தம் மூவாயிரத்து ஐந்நூறு ரூபாய்கள் இருந்தன. அவற்றைச் சேர்த்துப் பெட்டியில் வைக்கும்பொழுது, ''ஆஹா அவர் தீர்க்கதரிசி'' என்று சொல்லிக் கொண்டாள். சற்று நேரம் சிந்தனை செய்தாள். ஸ்கூலில் வேஷப் போட்டிக்காகப் பஞ்சாபி உடை தைத்துக்கொண்


# இண்டோ கமர்ஷியல் பாங்க் லிமிடெட்

ரிஜிஸ்டர்டு ஆபீஸ்: மாயவரம் ★ ஸெண்ட்ரல் ஆபீஸ்: மதராஸ்.

வாக்களிக்கப்பட்ட மூலதனம் ரூ. 25,00,000
செலுத்தப்பட்ட மூலதனம் ... ரூ. 18,75,000
ரிஸர்வ் பண்டு ... ரூ. 7,75,000
மொத்த ஆஸ்தி ... ரூ. 6 கோடிக்குமேல்

ஸிட்டி ஆபீஸ்கள்:

சைனபஜார், மாம்பலம், மயிலாப்பூர், பெரியமேட், திருவல்லிக்கேணி

| | | | |
|---|---|---|---|
| அமதலவால்ஸா | கும்பகோணம் | திருநெல்வேலி ஜங்ஷன் | ராமநாதபுரம் |
| அனகாபள்ளி | சாலூர் | திருச்சினாப்பள்ளி | மதுரை |
| அம்பாசமுத்திரம் | சிதம்பரம் | திருவாரூர் | மாருடேரு |
| ஆம்பூர் | சித்தூர் (கொச்சி) | தென்காசி | விழுப்புரம் |
| ஈரோடு | சீயாழி | நாகப்பட்டனம் | விருதுநகர் |
| கடலூர் N. T. | தஞ்சாவூர் | பரமக்குடி | விஜயநகரம் |
| கடலூர் O. T. | தாடபள்ளிக்கூடம் | பாலக்காடு | வேலூர் |
| காஞ்சீவரம் | திலாரு R. S. | பார்வதிபுரம் | வேதாரண்யம் |
| காரைக்குடி | திருநெல்வேலி டவுன் | புதுக்கோட்டை | |

பிக்ஸட் டிபாஸிட்கள்:- ஒரு வருஷம் நூற்றுக்கு வட்டி ... ... 2¾% வீதம்
இரண்டு ,, ,, ... ... 3% ,,
சேவிங்ஸ் பாங்கு கணக்கு வாரம் ரூ. 250/ வாங்கக்கூடியது ரூ. 5000/ வரை வட்டி 2½% ,,
கரண்ட் கணக்கு .. .. .. .. ¼% ,,

தங்கம், வெள்ளிபார், கவர்மெண்ட் பாண்டு, கடன் பத்திரங்கள், ஷேர்கள், வியாபாரச் சரக்குகள் முதலியவைகளின் பேரில் கடன்கள் கொடுக்கப்படும்.

எல்லாவிதமான பாங்கு நடவடிக்கைகளும் நடத்தப்படும்

எஸ். என். என். சங்கரலிங்க அய்யர்,
மானேஜிங் டைரக்டர்.

டிருந்தாள். அதை உடுத்தி, பின்னலை இரண்டாகப் பின்னி, இருபக்கமும் போட்டுக்கொண்டு ஒரு ஷாலையும் கையில் எடுத்துப் போட்டுக்கொண்டு, கண்ணுடி முன் நின்று பார்த்துக்கொண்டாள். "ரைட் ஒருவரும் காணமுடியாது" என்று கூலிங் கிளாஸைக் கண்ணில் மாட்டிக்கொண்டாள். அவள் மனதில் வருத்தம் தென்படவில்லை. "நாளை இந்நேரம் அவர் அணைப்பில். இவள் என்ன செய்ய முடியும்?" என்று எண்ணியவளாக, பெட்டியைக் கையிலெடுத்துக் கொண்டு புறப்பட்டாள். பகல் இரண்டு மணி சமயமாதலால் வேலைக்காரர் ஒருவரும் தென்படவில்லை. நிசப்தமாக இருந்தது. "தைரிய தேவதையே எனக்குத் துணைபுரி" என்று கொல்லைப்புறமாக வெளியில் சென்ருள்.

இரவு ஏழுமணிக்கு ரயில். அதுவரையில் எவ்விடமிருப்பது என்று சிந்திக்கும் சமயம் ஒரு சினிமாக் கொட்டகை வாசலில் வந்துகொண்டிருந்தாள். மாட்னி காட்சி தொடங்கும் சமயம். ஒரு சிந்தனை ஓடிற்று. "இதற்குள் நுழைந்தால், முடியும் சமயம் ரயில் சரியாக இருக்கும்" என்று நினைத்து முதல் வகுப்பு டிக்கெட் வாங்கிக்கொண்டு உள்ளே சென்ருள். அன்று வாசவதத்தா என்ற படம் நடந்தது. உதயணன் வாசவதத்தா அளவு கடந்த காதலினுல் பிரிக்கப்பட்ட காட்சி தன் நிலைமையைத் தெளிவுபடுத்திற்று. படம் முடிந்ததும் அவள் மனதில் ஒருவித தீர்மானமும் முடிந்தது. "வாசவதத்தையைப்போல், தான் இறந்துவிட்டதாக அவன் நம்பும்படி செய்து விட்டால் அவன் அம்மா இஷ்டப்படி நடப்பான். சுகன்யாவிவாகமே நடைபெறட்டும். என்ன செய்தாலும் என்மீதுள்ள அன்பை ஒருவரும் அபகரிக்க முடியாது. காலமும் விதியும் நமக்கு வழிகாட்டும். ஆனுல் இந்த நிலைமையில், எவ்விடம் அடைக்கலம் புக முடியும்?" என்று நினைக்கும் பொழுது அவள் மனதில் துக்கம் ஏற்பட்டது. அநேக விதமாகச் சிந்தனைசெய்து கடைசியில் சௌதாமினியிடம் சென்றுவிட்டால் ஏதாவது ஏற்பாடு செய்வாள் என்ற முடிவிற்கு வந்தாள். ஜட்காவில் ஸ்டேஷனுக்கு வந்து இரண்டாம் வகுப்பு டிக்கட் வாங்கிக்கொண்டு, ஒரேவண்டியில், ஆண்களுக்கு ஓர் அறையும் பெண்களுக்கு ஓர் அறையுமாகச் சேர்த்திருக்கும் வண்டியில் ஏறினுள். ஒருவயது குழந்தையுடன் ஒரு குஜராத்தியும், ஆங்கிலோ இந்தியன் மாது ஒருத்தியும் உட்கார்ந்திருந்தார்கள்.

ஹிந்தி பாஸ்செய்தது இந்தச்சமயம் உபயோகமாயிற்று சித்ராவிற்கு. அவர்களும் பட்டணம் வருகிறதைத் தெரிந்து கொண்டாள். அக்குழந்தை இவளிடம் பாய்ந்தது. சற்றுநேரம் அதனுடன் விளையாடினுள். மனதின் கஷ்டம் கொஞ்சம் குறைந்தது போல் தோன்றியது. இன்னும் ஆறுமாதம் கழித்து என்று நினைக்கும் பொழுது அவ்வளவு துன்பத்திலும் க்ஷணம் இன்ப உணர்ச்சி ஏற்பட்டது. ஆள்மூலம் ஆஹாரம் வரவழைத்து ஏதோ சாப்பிட்டாள். பிறகு மேலிருக்கும், பர்த்திற்கு, ஒருதாவில் ஏறி, பெட்டியைத் தலைக்குவைத்துப் படுத்துக் கொண்டாள்.

சிந்தனை ரதம் ஓடலாயிற்று. பிரபாகரனைப் பார்ப்பதா வேண்டாமா? என்ற முடிவைத் தீர்மானம் செய்ய வெகுநேரம் சென்றது. "அவன் கடைசியில் சமாதானமாகச் செல்லும் பொழுதுகூட மருந்து சாப்பிடுவதை வற்புறுத்திச் சொன்னதினுல் நிச்சயம் அவனிடம் சென்ருல் கொடுத்தே திருவான். ஆனுல், இருவருமாகத் தனிவாழ்க்கை தொடங்குவதனுல் அப்படிச் செய்யாமலிருக்கலாம். ஆனுல் அவன் அந்தஸ்துடன் வாழப் பணம் வேண்டாமா? படிப்பு இன்னும் ஒரு வருஷமிருக்கிறதே. அவனிடம் கலந்து கொண்டு சௌதாமினியிடம் செல்லலா மென்ருல் தனது நிலைமைக்கு அவன் மனம் லஜ்ஜையுறுவதினுல் இப்படியே அனுப்பமாட்டான். போனுல் போகட்டும்" என்று நினைக்கும் பொழுது அவளை யறியாமல் கீழ் ஸீட்டில் தாயின் அணைப்பில் ஆனந்த நித்திரை செய்யும் குழந்தையின் மீது அவள் பார்வை சென்றது. தாய்மை ஸ்தானமே தலை யெடுத்து நின்றது. எவ்வளவு கொடிய துக்கமும் தூக்கத்தில் தான் முடிவடையும். அந்த விதி சித்ராவிற்கு மட்டும் விலக்காகுமா?

எழும்பூரில் இறங்கி, குஜராத்தியுடன் வெயிட்டிங் ரூமில் பகலைக் கழித்தாள். பிரபாகரனைக் காணத் துடித்த மனதை அடக்கினுள். சாயங்காலம், சென்டரலுக்குச் சென்று இரண்டாம் வகுப்பு டிக்கெட் சௌதாமினியின் ஊருக்கு வாங்கி இருவரும் பெண்கள் வண்டியிலேயே ஏறினுர்கள். பஞ்சாபி உடையுடன் தலையை வெளியில் நீட்டி, பிளாட்பாரத்தின் அந்தக் கோடியிலிருந்து இந்தக் கோடி வரையிலும் பார்வையை ஓட்டினுள். கிழக்குப் பக்கம் பார்த்ததுமே திடுக்கிட்டாள்.

ஒரு நண்பனுடன் பேசியவாறு பிரபாகரன் பெண்வண்டியை நோக்கி வந்து கொண்டிருந்தான். 'தேவி! உன் சங்கல்பம் எதுவோ' என்று எண்ணியவளாகத் தலையை

உள்ளுக் கிழுத்துச் சேலையை எடுத்து முகம் தெரியாதவாறு போர்த்திக் கொண்டாளே தவிர மனம் பட படத்தது. அவர்களுக்குப் பின்னுல் இருபது வயது மதிக்கத் தக்க ஒரு மராட்டியப் பெண், ஏழெட்டு மாதக் குழந்தையை ஏந்திய வளாக வந்தாள். பிரபாகரனும் நண்பனும் மராட்டியப் பெண்ணை இந்த வண்டியி லேற்றிவிட்டு, அவர்கள் இருவரும் வண்டிக் குள் வந்தார்கள். சித்ராவின் மனதை விவரிக்க முடியாது.

பஞ்சாபியில் இவளிடம் "எந்த ஊருக்குப் போகிறீர்கள்" என்றான் பிரபாகரன்.

"பன்னகர்" என்றாள் பஞ்சாபியில் குரலை மாற்றி.

குஜராத்தியைக் கேட்டதற்கு 'கல்கத்தா' என்றாள்.

நண்பனைப் பார்த்து, "கவலைவிட்டது. நீ போக வேண்டிய அவசியமில்லை. நல்ல துணை கிடைத்துவிட்டது" என்றான் மராட்டியில்.

சாமான்களை ஒழுங்காக வைத்துவிட்டு, சித்ரா உட்கார்ந்த ஸீட்டில், முதலில் மாராட்டியப் பெண் அதற்கடுத்தபடி, மராட்டியன், அடுத்தது பிரபாகரன், அவன் பக்கத்தில் சித்ரா இப்படியாக உட்கார்ந்தார்கள். மராட்டிய தம்பதிகள் பேசிக்கொண்டிருந்தார்கள். பிரபாகரன் குஜராத்திக் குழந்தையை எடுத்து விளையாடிய வண்ணம் சித்ராவிடம் பேச்சுக்கொடுத்தான்.

"இது புருஷன் வீடு, பிறந்த வீட்டிற்குச் செல்லுகிறேன்" என்றாள்.

"புருஷன் ஸ்டேஷனுக்கு வரவில்லையா?"

"அவர் சண்டைக்குச் சென்றிருக்கிருர். கொழுந்தன் வந்து ஏற்றிவிட்டு அவசர ஜோலி இருப்பதினுல் சென்றுவிட்டார். அவ்விடம் ஸ்டேஷனுக்குத் தந்தை வருவார்" என்றாள்.

பக்கத்தில் உட்கார்ந்து இவ்விதமெல்லாம் பேசும்பொழுது, ஒருபுறம் அளவு கடந்த துக்கமாகவும், ஒருபுறம் தமாஷாகவும் தோன்றினது. "நாம் இன்னர் என்று சொல்லிவிடுவோமா? வேறென்றும் வேண்டாம். கண்ணுடியைக் கழற்றி, தலையிலுள்ள கோஷாவை எடுத்தால் போதுமானது? நமது கவலையெல்லாம் பறந்துவிடும்" என்று க்ஷணநேர சிந்தனை ஓடிற்று. "எடுத்த காரியம் யாவினும் வெற்றி" என்ற பிச்சைக்காரப் பையனின் பாட்டும், எதிரிலிருக்கும் குழந்தையும் அந்த எண்ணத்தை மாற்றின. வேணுமென்றே, தனக்கும் அவனுக்கும் மத்தியில் இடமிருக்கும்பொழுதே, அவன் பாதத்துடன் தனது பாதத்தைச் சேர்த்து வைத்துக்கொண்டாள். அப்படியும் இப்படியுமாகச் சாமான்களை ஒழுங்கு பண்ணி வைப்பதுபோல் அவன் மீது உராய்ந் தாற்போல் உட்கார்ந்தாள். பிறகு இரண்டு பிஸ்கெட்டை எடுத்துக் குழந்தைக்கும் கொடுத்து, அவனிடம் "சாப்பிடுங்கள்" என்றாள்.

"வேண்டாம். மன்னித்துக் கொள்ளுங்கள்" என்றான்.

"தாங்கள் சாப்பிட்டால்தான் எனக்குத் திருப்தியாக இருக்கும். பெண்களை அவமதிப்பது உங்கள் மதராஸ் வழக்கமோ?" என்றாள்.

"அடடா! அப்படியொன்றுமில்லை. வருத்தம் வேண்டாம் கொடுங்கள்" என்றான். அவள் கை கால் மேலேபடும்பொழுது கூடியமட்டும் விலகிக்கொண்டான்.

மராட்டியப்பெண் புருஷனுக்குப் பீடா மடித்துக் கொடுத்தாள். சித்ராவின் மனதில் ஒருவித தமாஷ் தோன்றவே, தானும் பீடா மடித்து, பிரபாகரனிடம் கொடுத்தாள். இதேதடா சங்கடம் என்று நினைத்தபடி வாங்கிப் போட்டுக்கொண்டான். பிறகு "உங்கள் பெயரென்ன?" என்றான்.

"மித்ரா" என்று சொல்லிவிட்டு "உங்களுக்குக் கல்யாணமாகிவிட்டதா?" என்றாள்.

"உம், ஆகிவிட்டது. இன்னும் சில மாதங்களில் இதைப் போல் ஒரு பேபி. மித்ரா என்று நீங்கள் சொன்னதும், என் மனைவி நினைவு தோன்றினது. அவள் பெயர் சித்ரா" என்றான்.

"ஓஹோ, ஒரு சமயம் போன ஜன்மத்தில் நாங்கள் இருவரும் சஹோதரியாக இருந்திருப்போம் போலும்" என்றாள்.

"உங்களுக்குத் தமிழ் வருமோ? என்றான்.

"நான் இவ்விடம் வந்து ஆறுமாதம் தான் ஆகிறது. ஒரு எழுத்துக்கூட வரவில்லை" என்றாள்.

இவையெல்லாம் கவனித்துவந்த நண்பன், "என்னப்பா உனக்கு நல்ல யோகம் தான் போலிருக்கு" என்றான் தமிழில்.

"அது ஒரு உம்மணா மூஞ்சி" என்று குஜராத்தியைச் சுட்டிக்காட்டிவிட்டு "இது ஒரு லூஸ் போலும்." என்றான் சித்திராவைச் சுட்டி,

"என்ன? செய்வதை ஏற்றுக்கொண்டு லூஸ் என்று பட்டம் கொடுக்கிறாயோ?"

"சே, சே, அவளை அவமதித்த மாதிரி நினைத்துவிடுவாள் அதற்காக. உன்னைப் போலச் சபலசித்தன் நானல்ல. மேலும். இவள் கைகளைப் பார்த்தால், சித்ரா மாதிரியே இருக்கிறது, அதனால்தான் இந்தமட்டும். அவள் கையில் ஒரு மோதிரம் இருக்கிறதுபார். அதேமாதிரி எங்கள் இருவருக்கும்தான், நானே மாதிரி கொடுத்துச் செய்யச் சொன்னேன். இவள் எங்கு வாங்கினாள் என்று கேட்கட்டுமா" என்றான்.

இந்தச் சமயம் சித்ராவின் மனம் படபடத்தது.

"இந்த மோதிரம் எவ்விடம் செய்தது?" என்றான்.

பட்டணத்தில் ஒரு கம்பெனியின் பெயரைச் சொன்னாள்.

"சரிதான், என் மாதிரியை அவன் பிரபலப்படுத்தி விட்டான் போலும்" என்றான். அந்தச் சமயம் ரயில் புறப்படப் போகும் விசில் கொடுக்கவே ஆண்பிள்ளைகள் இருவரும் கீழே இறங்கினார்கள். பக்கத்துவண்டியிலுள்ள பிரயாணிகளிடம் இவர்களைக் கவனித்துக் கொள்ளும்படி கேட்டுக்கொண்டார்கள்.

பிறகு "நீங்கள் மூவரும் சமவயதினர்களாக இருந்தாலும், நீங்கள் தான் சற்றே தைரியமுள்ளவர்களாகக்காணப்படுகிறீர்கள். கவனித்துக் கொள்ளுங்கள்" என்றான் மராட்டியன்.

ஜன்னலின் மீது கைவைத்து நின்றுகொண்டிருந்த பிரபாகரனைப் பார்த்து "பாபுஜீ! சென்று வருகிறேன். மறந்துவிடாதீர்கள்; மறு முறை வரும் பொழுது உங்களைச் சந்திக்கிறேன்" என்று கைகுவித்தாள்.

"நீங்கள் மறு முறை வரும் பொழுது நான் இவ்விடமிருப்பேனென்பது நிச்சயம் இல்லை"

"விதியிருந்தால் சந்திப்போம்" என்றாள் ஜன்னல் மீதிருந்த அவன் கைகளைத் தனது கைகளினால் பிடித்தவாறு.

"ரயில் சிநேகம் என்று பழமொழியாகச் சொல்லுவதில்லையா?" என்றான் பதில்.

அதுவரை தமாஷில் சென்ற அவள் மனம் பிரியும் சமயம் அளவு கடந்த துக்கத்தை அடைந்தது. தன்னை அவன் 'லூஸ்' என்று சொன்னதை நினைக்க, "என்ன கொடுமை ஈசா! கொண்டவனிடமே, வேசிப்பட்டமா" என்றது அவள் மனம். ரயில் புறப்படும் சமயம். மனிதர்களின் தாம்பத்யம்கூடச் சில சமயம் ரயில் சிநேகிதம் ஆகிவிடுகிறது. என்ன உலகம்? என்ற நீண்ட மூச்சுவிட்டாள். உன் தாம்பத்யத்தை நானா பிரிக்க முன் வந்தேன் என்று சொல்லுவதுபோல 'உஸ்' என்ற பெருமூச்சுடன் வண்டி நகர்ந்தது. வாய்விட்டுக் கதறவேண்டும்போல் தோன்றியது. "பிரபாகர்" என்று ஒரே சப்தம் கூப்பிட்டுவிட்டால் அவள் வாழ்க்கையே மாறிவிடும்; இன்பலாகிரியின் முதல் சகாப்தம் தொடங்கியிருக்கும். ஆனால் விதியின் விளையாட்டு; அதில் அகப்படாத ஆத்மா? அவன் தலை மறையும் மட்டும் பார்த்துக்கொண்டிருந்துவிட்டு, "இப்பிரிவு என்னை எந்தப் பாதையில் கொண்டு விடுமோ?" என்ற நீண்ட மூச்சுடன் கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள்.

வண்டி கண்ணிற்கு மறையுமட்டும் பார்த்துக்கொண்டிருந்துவிட்டு, "இந்தப் பஞ்சாபி பெண் யார்? அவள் தன்மை விசித்ரமாகத் தோன்றுகிறது. அவள் கண்ணீர் என் மனதை வேதனை செய்கின்றதே" என்றான்.

"ஏதோ வாழ்க்கையில் சுகமில்லாதவள் என்பது நிச்சயம்" என்றான் மராட்டியன்.

பஞ்சாபி பெண்ணையும் சித்ராவையும் சம்பந்தப் படுத்தும் விதம் அவன் மனம் உணர்ச்சி வசமாக, நடந்து சென்றான்.

(தொடரும்.)

# மல்லிகை மொட்டு

**ஜி. எஸ். மணி**

வயது பதினாறு பூர்த்தியாகியும்கூட உலக மறியாதவளாகவே இருந்தாள் பத்மா. கல்வியறிவும் அதிகம் இல்லை; மஹா முன்கோபியான தகப்பனாரின் எதிரில் நிற்கவே அவளுக்கு ரொம்ப பயம்; தாயசரோ கிருத யுகத்திலே தோன்றியிருக்க வேண்டியவள், தவறிப்போய், கலியுகத்திற்கு வந்து விட்டாள். வறுத்தெடுத்த வறுமையில் உழன்ற குடும்பம். மிக்க கடுமையான சட்ட திட்டங்களுக்குக் கட்டுப்பட்டு வளர்ந்து வந்த பத்மாவிற்கு அவள் வீடுதான் உலகமாய் இருந்தது. பிறருடன் பேசி அறியாள்; யாருடனும் பழகி யறியாள், உயிருள்ள பெண்பொம்மையாக இருந்து வந்தாள். இயற்கையாக உண்டாகும் உணர்ச்சிகளைக்கூட அறிந்து கொள்ளச் சக்தி யற்றிருந்த அவளை அந்தக் கிராமத்தார் 'அசடு' என்று அழைத்து வந்தனர். ஆயினும் அந்த அசட்டின் நகசிக பரியந்தம் அதிசயிக்கத் தக்க பேரழகை அள்ளிப் பொழிந்திருந்தாள் இயற்கையன்னை.

அபூர்வமான அந்த அழகிற்காகவே அவளை 'எவனோ' வந்து கல்யாணம் செய்து கொண்டுபோனதாக அந்த ஊரார் பேசிக் கொள்வார்கள். அவளுக்கு விவாஹம் ஆனதே யாவருக்கும் ஆச்சர்யமாய்த்தானிருந்தது. "பத்மாவிற்குக்கூடவா கல்யாணம்!" என்று அவ்வூர் சிறுவர்கள்கூட மூக்கின் மீது விரலை வைத்துக் கொண்டனர். மாப்பிள்ளைப்பையன், எங்கோ தூர தேசத்திலிருந்து வந்ததால்தான் பெண்ணைப் பற்றிய 'விசேஷங்கள்' தெரிய வில்லையென்று பெரியவர்கள் சொல்லிக் கொண்டனர்.

மாப்பிள்ளைப்பையன் லாகூரில், ஏதோ கம்பெனியில் பெரிய வேலைபார்த்து வந்தான்; வெகு வருஷங்களுக்குப் பிறகு தமிழ்நாட்டுக்கு வந்திருப்பதாகவும், யார் யாரையோ பார்க்கவேண்டி யிருப்பதாலும் அந்த வேலைகளை யெல்லாம் முடித்துக் கொண்டு மீண்டும் லாகூர் திரும்ப இரண்டு மாதங்கள் ஆகுமென்றும், போகும் போது கையுடன் அழைத்துப் போவதாகவும் சொல்லி, பத்மாவைப் பிறந்த வீட்டிலேயே வைத்துவிட்டுத் தமிழ்நாட்டிலே சுற்றுப் பிரயாணம் செய்து கொண்டிருந்தான்.

அவனிடமிருந்து பத்மாவிற்கு முதல் கடிதம் வந்தது; அது வரையில் அவள் பெயருக்குக் கடிதமே வந்தறியாத பத்மா, "என்னவோ—ஏதோ" வென்று பயந்து நடுங்கினாள்; தானே பிரித்துப் பார்ப்பதா—வேண்டாமா வென்று புரியாமல் மனங் குழம்பினாள்; அதே சமயம் "அது என்னடி கடுதாசி?" என்று உரத்த குரலில் கேட்டுக் கொண்டே அவ்விடத்திற்கு வந்த அவள் தகப்பனாரிடத்தில், கடிதத்தைப் பிரிக்காமலே கொடுத்து விட்டாள்.

அவளுக்கு வந்த கடிதத்தை அவள் தகப்பனார்தான் உடைத்துப் பார்த்தார். முழுவதும் படித்த பிறகு "தலைக்கிறுக்குப் பிடித்த அதிகப் பிரசங்கி" என்று உறுமிய படியே கடிதத்தை அவள் முகத்திலே விட்டெறிந்து விட்டுப் போய் விட்டார். அவர் வைதது அவளையா, அவள் கணவனையா? வென்பது தெரியாமல் திகைத்தாள்; தலை சுற்றியது.

அடுத்தாற்போல் அவள் தாயார் அங்கே பிரசன்னமானாள். "யாரிடமிருந்து வந்திருக்குடீ?" என்று கேட்டாள். "அவளுடைய அழகான அகமுடையான் அருமைப் பெண்டாட்டிக்கு எழுதியிருக்கிறான்; நான் ஒருத்தன் மலை போல் இருக்கிறது அவன் கண்ணுக்குத் தெரிய வில்லை!" என்று உள்ளே யிருந்தபடியே சீறினார் தகப்பனார்.

"என்னடீ எழுதி யிருக்கான்? படித்துக் காட்டு, பார்க்கலாம்?" என்று கேட்டாள் கட்டுப்பெட்டியான தாயார்க்காரி.

பெற்றோருக்கு அடங்கியே நடந்து வந்த பத்மாவினால் கடிதத்தைப் படித்துக் காட்டாமல் இருக்க முடியவில்லை; அவளுக்கு அதில் எழுதப்பட்டிருந்ததைத் தெரிந்து கொள்ள ஆவலாய் இருந்தது; மெல்லிய குரலில் படித்தாள்.

பத்மா படித்து முடித்ததற்கும், அடுத்த வீட்டு அம்புலு அவ்விடம் வருவதற்கும் சரியாக இருந்தது.

"வாடீ அம்புலு! என்னவோம்மா; இந்தக் காலத்துப் பசங்களின் போக்கே புரிய வில்லை; முந்தாநாள் கல்யாணம் பண்ணிக் கொண்டு விட்டு, இன்னிக்கு இவள் ஆம்படையான் இவளுக்கு, 'கன்னா—பின்னா'

வென்று கடுதாசி எழுதியிருக்கான்! அந்தக் காலத்திலே எங்களுக் கெல்லாம் கடுதாசி வந்தால் வாசிக்கவும் தெரியாது; எழுதற வாளும் இல்லே! இப்போ நடக்கிற இத்தக் கூத்தெல்லாம் என்ன விபரீதத்திற்கோ, தெரியல்லே; நீதான் இவளுக்கு ஒத்தவயசுக் காரியாய் இருக்கே; அடக்கமாய் நடந்து கொள்ள நீதான் இவளுக்குப் புத்தி சொல்லணும்" என்ற பாட்டோடு உள்ளே எழுந்து போய்விட்டாள் தாயார்க்காரி.

அம்புலு பத்மாவைப் பார்த்துச் சிரித்தாள்; "என்ன எழுதியிருக்கார்டீ உன் ஆத்துக்காரர்?" என்று கேட்டாள்.

பத்மா பதிலே சொல்லாமல் கடிதத்தை அம்புலுவிடம் கொடுத்துவிட்டுத் தலையைக் குனிந்துகொண்டாள்.

அம்புலு பால்ய விதவை; இல் வாழ்க்கையின் இன்பங்களை ஆரம்பத்திலேயே இழந்துவிட்டவள்: ஏங்கிய உள்ளத்திலே ஏமாற்றத்தைக் கண்டவள்; சிதைந்துபோன உணர்ச்சிச் சுழல்களுக்கிடையே உன்மத்தம் கொண்டவள்; சொந்த வாழ்க்கை, கானலோடும் பாலைவனமாகி விட்டதைப் பார்த்துப் பெருமூச்சு விடுபவள்; பரபுருஷன் ஒருவன் தன் பெண்டாட்டிக்கு எழுதிய கடிதத்தை வெட்கமின்றிப் படித்துப் பார்த்தாள்; படிக்கப் படிக்க அவள் முகத்திலே 'சிவப்பு' ஏறிக்கொண்டே வந்தது.

படித்தானதும் பெருமூச்செறிந்தாள்; "மொத்தத்திலே இந்தப் புருஷர்களே ஈவிரக்க மற்றவர்கள்; அவர்களை நம்பவே கூடாது" என்ற சொற்கள் அம்புலுவின் வாயிலிருந்து வெளிப்பட்டன.

பத்மா கால் கட்டைவிரலால் தரையைக் கீறிக் கொண்டிருந்தாள். "நீ இதற்குப் பதில் எழுதப் போகிருயா?" என்று அம்புலு கேட்ட பிறகுதான் அவள் தலை நிமிர்ந்து பார்த்தாள்.

"என்ன எழுதுவது? இந்தக் கடுதாசியின் அர்த்தமே எனக்குப் புரியவில்லையே?" என்று பத்மாவின் வெகுளித்தனமான பதிலைக் கேட்டு அம்புலு நகைத்தாள்.

யௌவனத்தின் உணர்ச்சிகளைப்பற்றிக் கிட்டாத கனவுகள் கண்டுகொண்டிருந்த அம்புலுவின் உள்ளம் பிறருடைய இன்பத்தைப் பற்றியும் பொருமைப் பட்டுக் கொதிப்படையும் நிலையில் இருந்தது.

இல்லறத்தின் ஆழ்ந்த இன்பங்களைப் பற்றிச் சொல்லுவதற்குப்பதிலாக, மேலாக மிதந்துகொண்டிருக்கும் பற்பல இன்னல்களைப்பற்றி விவரித்து, பேதை மனம் கொண்ட பத்மாவைப் பயமுறுத்தி விட்டாள்.

ஒன்றையும் புரிந்துகொள்ள முடியாத பத்மா என்னவோ சங்கடப் பட்டாள். "கடிதத்தின் மூலமாக நாம் இருவரும் பரிமாறிக் கொள்ளும் முத்தங்களின் ஆழ்ந்த சுவையை, உள்ளபடி, அனுபவிக்க முடியாது; நேரில் வந்தபிறகு நீ எனக்குத் திகட்டாத இன்ப முத்தங்கள் எவ்வளவு கொடுக்கப் போகிருய், சொல்லு பார்க்கலாம்!" என்று அவள் கணவன் சுந்தரம் கடிதத்தை முடித்திருந்த விதம் பத்மாவிற்குச் சொல்ல முடியாத வியப்பையே அளித்தது.

"பச்சைக் குழந்தையைப் போல் முத்தம் கொடுக்கச் சொல்லுகிருரே! என்ன செய்வது?" என்றுதான் பத்மா அதைப்பற்றி எண்ணிக்கொண்டாள்.

* * *

லாகூரில் பத்மாவும், அவள் கணவன் சுந்தரமும் சேர்ந்து தனிக் குடித்தனம் நடத்திய லக்ஷணத்தைப் பற்றி என்ன சொல்லுவதென்றே தெரியவில்லை; அவ்விளந் தம்பதிகளின் இல் வாழ்க்கை போன பாதையைப் பற்றி எப்படிக் குறிப்பிடுவதென்றும் புரியவில்லை.

ஒரே வார்த்தையில்—சுந்தரம் எதிர்பார்க்காத ஏமாற்றம் அடைந்தான்; "இவ்வளவு அழகுள்ள இந்தப் பெண்ணிடத்திலே இத்தகைய அடிமுட்டாள் தனம் இருக்குமென்பதாக நான் நினைக்கவேயில்லை; உண்மையில் இயற்கை செய்துவிட்ட திருத்தமுடியாத ஒரு தவறுதானு இது?" என்று அழமாட்டாக் குறையாகத் தனது அந்தரங்க நண்பன் ரவியிடம் சொல்லி வருத்தப் பட்டுக்கொண்டான்.

"இயற்கையின் தவறு என்பது எப்போதுமே கிடையாது; அதன் சம்பந்தப்பட்ட மட்டில் குறை யென்பது இருக்க இடமே இன்றி அவ்வளவு அற்புதமாகத் தன் வேலையைச் செய்து வருகிறது; தவறுவதெல்லாம் ஸூக்ஷ்மம் தெரியாத மனிதனே; புஷ்பங்களில் சில சீக்கிரமே மலர்ந்து விடுகின்றன; சில மலர்கள் மலர்ந்து மணம் வீச அதிக நேரம் ஆகிறது; அவசரப் படாதே!" என்ருன் ரவி.

"காத்திருந்து காத்திருந்து போதும் போதுமென்ருகி விட்டது; என் பொறுமை எல்லை கடந்துவிட்டது" என்று பதிலளித்தான் சுந்தரம்.



கர்ப்பச் சேதத்துக்குப்

பிறகும், பிரஸவத்திற்குப் பிறகும், நீடித்த ஜ்வரங்களுக்குப் பிறகும், தலைமயிர் அதிகமாகக் கொட்டுவதுண்டு. சாதாரண ஜ்வரங்களுக்குப் பிறகும், மயிர் உதிர்வதுண்டு. அதிர்ச்சி ஸஹிதமான ஜ்வரமானாலும் மயிர் அபரிமிதமாகக்கொட்டும். சில சமயம் விடாமல் உதிர்ந்துகொண்டேயிருக்கும். எந்தக் காரணத்தினால் மயிர் உதிர்ந்த போதிலும் கேசவர்த்தினியைக் கொண்டு மயிர் உதிர்வதை நிறுத்துங்கள்.

உதிர்ந்த கூந்தலுக்குப் பதில் இளம் புதுக் கூந்தலைப் பெறுங்கள். கேசவர்த்தினியின் உதவியால் அற்ப கேசத்தை அபரிமித கேசமாக்குங்கள்.

கேசவர்த்தினி

கூந்தலைப் பாதுகாப்பது, விருத்தி செய்வது, அழகு படுத்துவது

விலை அணா 12

(மேற் செலவு வேறு)

எல்லாக் கடைகளிலும் கிடைக்கும்

தயாரிப்பவர்

தென் இந்திய ரஸாயன சாலை

கோயமுத்தூர்.

"அதற்காக? முரட்டுத் தனமாக நடந்து கொள்ளுகிறாயா, என்ன?"

"அத்தனை தூரத்திற்குக்கூடப் போக வேண்டிய அவசியமில்லைபோலிருக்கிறது; அவள் என்னைத் தூரத்தில் பார்க்கும் போதேகூடப் பயந்து சாகிறாள்!"

"அவள் போக்குப்படியே விட்டு, மெல்ல மெல்லத் திருத்த முயற்சிக்க வேண்டும், சுந்தரம்! தானாக மலராத மொட்டைப் பிடித்து முரட்டுத்தனமாக நசுக்கிவிட்டால் அழுகித்தான் போகும்!"

"இதுவரையில் மலராமலேயிருக்கும் இந்த மொட்டை மலரச் செய்வதில் இவ்வளவு சிரத்தையும், ஊக்கமும் எதற்கு? கடை வீதியிலே மலர்ந்த மலர்கள் எத்தனையோ விற்பனைக்குத் தயாராய் இருக்கின்றனவே! இவளிடம் வீண் காலம் கடத்துவதைவிட........."

"சீச்சீ! நீ சும்மாவிரு; என் மனைவியிடம் சொல்லி நான் அவளைத் திருத்த முயற்சியெடுக்கச் சொல்லுகிறேன்; கொஞ்சம் பொறுமையாய் இரு."

"நீங்கள் எக்கேடும் கெட்டுப் போங்கள்; நான் இனி யாருக்காகவும் காத்திருக்க முடியாது."

* * *

அம்புலுவிற்கும், விமலத்திற்கும் எவ்வளவோ வித்யாஸமிருப்பதைத் தெரிந்து கொண்டாள் பத்மா.

கணவனிடம் இருந்து கொண்டு குடித்தனம் செய்வதில் இருக்கும் தர்மசங்கடங்களைப்பற்றியே, ஸதா ஸர்வதா சொல்லிக்கொண்டேயிருந்த அம்புலுவைப் பற்றியும், வாழ்வின் கணக்கில்லாத இன்பங்களைப்பற்றியும், புருஷனிடம் இருந்து இல்லறம் செய்வதில் உள்ள அளவற்ற ஆனந்தத்தைப் பற்றியுமே விவரித்துக் கொண்டிருக்கும் விமலத்தின் மனசைப் பற்றியும். எண்ணியெண்ணி வியப்படைந்து வந்தாள் பத்மா. பக்கத்து வீட்டிலேயே குடியிருந்துவந்தாள் விமலம்.

விமலம் ரவியின் மனைவி; தாம்பத்ய வாழ்வின் ஆனந்தத்தை உல்லாசமாய் அனுபவித்துக் கொண்டிருப்பவள்; அதில் பொதிந்து கிடக்கும் எண்ணுதற்கரிய இன்பங்கள் இன்னும் எத்தனையையோ எவ்வளவோ ஆர்வத்துடன் எதிர்பார்ப்பவள்; ஸரள ஸ்வபாவம் கொண்டவள்; இயற்கையின் போக்கை அறிந்தவள்; தான்

பார்க்கும் எல்லாவற்றிலும் ஸுகத்தையே காண்பவள்; கவலை இல்லாதவள்; எல்லாவற்றிற்கும்மேலாகப் புருஷர்களின் உள்ளப் போக்கை அளந்தறிந்தவள்; பெண் என்னும் பெயருக்கேற்ப மென்மையான ஹிருதயமும், கவர்ச்சியும் கொண்டவள்.

குளிர்ச்சி நிறைந்து கிடந்த விமலத்தின் உள்ளத்திற்கும் வறண்டுபோன அம்புலுவின் நெஞ்சிற்கும் உள்ள வித்யாஸத்தைப் பற்றி எப்படிப்பட்ட விவேகமுள்ள மனசிற்குக்கூட ஊஹித்தறியவும் முடியாது. கேவலம், பத்மாவினால் எவ்விதம் எண்ணிப் பார்க்கக்கூடும்?

விமலம் பலவிதங்களிலும் பத்மாவிற்கு ஊக்கமும், உத்ஸாகமும் ஊட்டிவரலானாள்; பத்மாவிற்குத் தெரியாத பல விஷயங்களைப் பற்றி, புத்தியில் படும்படி, சொல்லிவந்தாள்; ஸ்திரீக்கும், புருஷனுக்குமுள்ள நெருங்கிய தொடர்பைப் பற்றி நெளிவு—சுளிவுகளுடன் எடுத்துரைத்தாள்; விவாஹத்துறையிலிருந்து உண்டாகும் விவேகத்தைப் பற்றி விவரித்தாள். முதல் இரவிலே முதலில் உண்டாகும் பயத்தைப் பற்றியும் அந்தப் பயத்தினுள்ளே குரல் கொடுக்கும் உணர்ச்சித் துடிப்பைப் பற்றியும், அந்த உணர்வுத் துடிப்பிலேயே உள்ளம் அடையும் ஆனந்தத்தைப் பற்றியும், அப்புறம் விளையும் சாசுவதமான இன்பத்தைப் பற்றியும், அந்தரங்கமாக விஸ்தரித்தாள்; கொஞ்சம் கொஞ்சமாக இன்னும் எவ்வளவோ சொன்னாள். கணக்கில்லாதபடி கதைப்புஸ்தகங்கள் பலவற்றைப் பத்மாவிற்குப் படிக்கக் கொடுத்தாள், வாழ்க்கையின் பலதுறைகளைப் பற்றி, அவ்வப்போது, கதைகதையாய்ச் சொன்னாள்; சினிமாக்களுக்குக் கூட்டிச் சென்றாள்; அடிக்கடி வெளியே உலாவ அழைத்துச் சென்றாள்; பல பேர்களைப் பார்க்கச் செய்தாள். கணவனிடம் அவள் கொண்ட பயத்தைப் போக்க மிகுந்த பிரயாசையெடுத்துக் கொண்டாள்.

விமலத்தின் அந்த முயற்சிகள் எல்லாம் வீண் போகவில்லை; பத்மாவின் பேதையுள்ளம், உள் உணர்வு பெற்றுத் துடிக்கத் தொடங்கியது.

"எல்லாம் ஸரிதான் அக்கா; ஆனாலும் இப்போது 'அவர்' இன்னொரு பெண்ணிடம் கொஞ்சிக் குலாவிக்கொண்டு இருக்கிறாரே? நான் எப்படி அவரை நெருங்குவது?" என்று கவலைப்பட்டாள் பத்மா.

"அடி அசடே! இத்தனை நாளும் நீ அவரை நெருங்காத காரணத்தினால் தான் அவர் இன்னொரு பெண்ணிடம் நெருங்கும்படி நேர்ந்திருக்கிறது. இதை இன்னும் இப்படியே வளர விட்டுக்கொண்டுபோனால் கடைசியில் நீதான் ஏமாந்து போய் ஏங்கியிருப்பாய்; தெரியுமா!" என்றாள் விமலம்.

"அந்தப்பெண் அவருடன் மான—வெட்கமில்லாமல் பேசிச் சிரிப்பதை நானும் தினம் பார்த்துக் கொண்டேதான் இருக்கிறேன். இருந்தாலும் என்னால் அவள் மாதிரி நடந்துகொள்ள முடியாதுபோல் தோன்றுகிறதே!"

"அசடே! விவாகம் என்கிற பந்தமே ஆணையும், பெண்ணையும், ஒருவரோடொருவர் மனசுவிட்டுப் பழகச்செய்யும் ஒரு வித்தை; நீ அந்தப் பெண்ணைப் போல் நடந்துகொள்ள வேண்டுமென்கிறதுதான் உன் கணவரின் அந்தரங்க விருப்பமும்; நீ இருக்கவேண்டியபடி யிருக்கத் தவறிவிட்டதினால்தானே, அந்தமாதிரி யிருக்கும் இன்னொரு பெண்ணின் நட்பை அவர் நாடுகிறார்? இன்னமும் இது உனக்குத் தெரியவில்லையா பத்மா?"

"இப்போது தெரிகிறது; ஆனால் வெட்கமாயிருக்கிறதே அக்கா!"

"கல்யாணத்தின் மூலம் ஒன்றுபட்ட ஒரு ஆணும், பெண்ணும், அந்தரங்கமாய்ப்பழகுவதிலேயே வாழ்க்கையின் அஸ்திவாரம் அமைகிறது. பர ஸ்திரீ ஒருத்தி, பர புருஷன் ஒருவனிடம் மான வெட்கமில்லாமல் பழகும் போது உனக்கே உரிமையுள்ள உன் கணவனிடம் நீ வெட்கப்படுவதில் அர்த்தமேயில்லை."

"பயமாய் இருக்கிறதே அக்கா! என்ன செய்வேன்?"

"உன் அர்த்தமற்ற பயமே ஆரம்பமுதல் உனக்குச் சத்துருவாக வந்து கொண்டிருக்கிறது; உன் நடுக்கமே உங்களுக்கு நடுவில் நின்று உங்களைச் சேரவிடாமல் பிரித்து வைத்திருக்கிறது; இவ்வளவு சொல்லியும் நீ அவரைக் கை நழுவ விடத்தான் போகிறாயா? உன் ஸ்தானத்தில் இன்னொருத்தியை இருக்க விட்டுவிட்டு நீ ஓடத்தான் போகிறாயா?"

"இல்லை; மாட்டேன்!"

"ஸரி பின்னே அவரிடம் போ; அவர் இஷ்டம் போல் நடந்துகொண்டு மனசை மயக்கி உன் வசப் படுத்து!"

"ஸரி, அக்கா; ஆனால் அந்தப் பெண்ணை எப்படித் துரத்துகிறது?"

"நீ நெருங்குகிறாய் என்பது தெரிந்தாலே அந்த நாசகாரி, சொல்லிக் கொள்ளாமல், தானே ஓடிவிடுவாள்; அவரும் அவளை மறந்து, உன்னை நோக்குவார்; நானும் என் னாலான ஒத்தாசை செய்கிறேன்."

"அக்கா! நீதான் தெய்வம்; உன்னை மறக்கவே மாட்டேன்!"

"உன் கணவன்தான் உனக்குப் பிரத்யக்ஷ தெய்வம்; அவருடைய இஷ்ட விரோதமாக நடந்து கொள்ளாதே."

* * *

பூரண சந்திரிகையின் குளிர்ந்த நிலாக் கதிர்கள் மனுஷ்ய உலகத்தை மயங்க வைத்தது. மெல்ல மிதந்தோடிய தென்றலின் இன்ப ஸ்பரிசம் ஸ்வப்பன உலகத்தைச் சிருஷ்டிக்க வைத்தது. அமைதித் திரைக்குப் பின்னிருந்த மோன மயக்கத்திலே மனதைத் தாவவிட்டுக் கொண்டிருந்த அந்த மனோஹரமான இரவு மாசு மறுவற்ற காதல் கரைதனிலே மோஹ அலையைக் கொண்டு மோதவும் வைத்து வேடிக்கை பார்த்தது.

கரைகாண முடியாத உள்ளத் துடிப்புடனே எதையோ எதிர்பார்த்தபடி ஜன்னலருகே நின்று கொண்டிருந்தாள் பத்மா. ஜன்னலுக்கு வெளியே, எட்டாத உயரத்தில் அகன்று படர்ந்திருந்த ஆகாய வெளியை அண்ணாந்து நோக்கினாள்; ஆகாச கங்கையைப் போல, அமிர்தமாக வர்ஷிக்கும் ஆனந்த நிலவொளி, நிலத்தையடைந்து பால் வெள்ளமாகப் பெருகிப் பாய்ந்திருப்பதைக் கீழே குனிந்து பார்த்தாள். இந்திர லோக வாயில் திறந்திருப்பதைப்போலே கனவு கண்டாள். அதே ஸமயம் அவள் இருந்த அறைக்கதவு மெதுவாகத் திறக்கப்படுவதையும் உணர்ந்தாள்.

திரும்பினாள்: அறைவாயிலருகே நின்ற சுந்தரம் அவளை நோக்கினான்; பத்மா நாணித் தலைகுனிந்தாள்.

அவளருகில் நெருங்கி வந்த சுந்தரம், "பத்மா! இந்த நாணத்திற்கும், பழைய பயத்திற்கும் எவ்வளவோ வித்யாசம் இருப்பதாக உணர்கிறேன்; சமீபகாலமாக உன்னிடம், இதுவரையில் இல்லாத, ஒரு புதுமையைக் காண்கிறேன். நான் காண்பது கனவல்லவே?" என்று கனிவான குரலில் கேட்டான்.

"அதோ; பால் வைத்திருக்கிறேன்; கொண்டுவந்து தருகிறேன்" என்று சிலிர்க்கும் குரலிலே சொன்னாள் பத்மா.

"உன்னிடம் இருக்கும் அமிர்தத்திற்காக இத்தனை நாளும் ஏங்கிக்கொண்டிருந்தேன்; முதலில் அதைக் கொடு; அப்புறம் பாலைப் பார்த்துக்கொள்ளலாம்" என்றான் சுந்தரம்.

முதல் முறையாக, மனப்பூர்வமாக, அன்று பத்மா, சுந்தரத்திற்கு 'இடம்' கொடுத்தாள்; அவனது அணைப்பிலே கட்டுண்டு கிடந்தபொழுது அவள் பார்வை அகஸ்மாத்தாகத் தோட்டத்துப் பக்கம் சென்றது.

அங்கே எண்ணுதற்கரிய மல்லிகை மலர்கள் மொக்கு விரிந்து மணம் பரப்பி, சிரித்து மகிழ்ந்தன.


## காவேரி சந்தா விகிதம்

| சந்தா விபரம் | உள்நாடு | ஸிலோன் பர்மா & மலேயா முதலிய வெளிநாடுகளுக்கு |
|---|---|---|
| ஒரு வருஷம் | 6 0 0 | 7 8 0 |
| அரை வருஷம் | 3 0 0 | 3 12 0 |
| தனிப்பிரதி ஒன்றுக்கு | 0 8 0 | 0 10 0 |

ஏஜன்ஸி இல்லாத இடங்களில் டிபாஸிட் கட்டி நாணயமும் பொறுப்புமுள்ள ஏஜண்டுகள் தேவை.

ஸர்குலேஷன் மானேஜர், காவேரி,
பெஸன்ட் ரோடு, கும்பகோணம்.




மாலை வேளையின் மங்கலான வெளிச்சத்தில் காற்றிலசையுகின்ற அழகான இந்திய ரோஜா மலர்களைப் பார்த்ததும், உங்கள் இதயத்திற்குரிய சோப்பான வினோலியா ஒயிட்ரோஸின் ஞாபகமேற்படும். உங்கள் எழிலை அதிகப்படுத்த இதன் சுகந்த நுரையைவிட உத்தமமானதோ, தகுதியானதோ வேறு கிடையாது. மிருதுவான நுரையைத் தரும் வினோலியா மிக நேர்த்தியான சருமத்தையும் சுகமாக சுத்தம் செய்கிறது . . . மேலும் உங்களை சுற்றிலும் மனோஹர பரிமளத்தைப் பரவச்செய்கிறது.




# வினோலியா ஒயிட் ரோஸ் சோப்

VWR. 20-23 TM

VINOLIA COMPANY LIMITED, LONDON, ENGLAND

# "தெலுகு வீருடு"

டாக்டர் வே. ராகவன்

"... ஓ ....டு....கனக.....தரவாத.....அரவ வாடு...மன ஆந்த்ர ஸாம்ராஜ்யமு ...... குலோத்துங்கசோளுடு.........செஞ்ஜி, தஞ்ஜாபுரி. மதுரா...உத்தர சென்னபுரீ, தக்ஷிண சென்னபுரீ...ஆந்த்ரா ப்ராவின்ஸு ...ஸெபரேஷனு......பௌண்டரி கமிஷனு, ஸெபரேட் பட்ஜட்டு........"

இப்படி ஒரே 'லு, டு லுடு' என்று ஒரு தெலுங்கு ப்ரமுகர் சொன்மாரி பெய்து கொண்டிருந்தார். தென் சென்னையில் "தக்ஷிண சென்னபுரீ ஆந்த்ர அப்யுதய ஸபா" என்ற கழகத்தில் ஒரு சிறு மகாநாடு. ப்ரஸங்கங்கள் ஆங்கிலத்திலிருக்கு மென்று பத்திரிகை ஆபீஸில் என்னை நிருபராக அனுப்பினார்கள். இங்கே ஒரே 'லு, டு, லுடு' வென்று தெலுங்கு மழை பெய்து கொண்டிருந்தது. நடு நடுவே வரும் ஸம்ஸ்கிருத பதங்களாலும், விலக்க முடியா ஆங்கிலச் சொற்கள் அடிக்கடி குறுக்கிடுவதாலேயும் ஆந்த்ர பிரமுகர்கள் கூடி, தங்கள் ஆந்த்ர மாகாணப் பிரச்னையைப் பற்றியும், சென்னையில் தங்களுக்குள்ள உரிமைகளைப் பற்றியும், தமிழர் குலோத்துங்க சோளன் காலத்திலிருந்தே ஆந்த்ர ஆதிக்யத்திற்கு உட்பட்டவரே என்ற சரித்திர நுட்பங்களைப் பற்றியும், சென்னையைத் தமக்கே ராஜதானியாய் வைத்து கொள்ள வேண்டியது, முடியாதுபோனல் வடசென்னை, தென்சென்னை யென இரண்டாய் வெட்டிவிடுவதென்பதைப் பற்றியும் மேலும் தென் தமிழ் ஜில்லாக்களிலுள்ள ரெட்டி, நாயுடு, முளகிநாடு, வெலநாடு, பண்டுதர், பஞ்சாங்கி, நியோகி முதலிய தெலுங்கர் அனைவரையும் கணக்கிடுவதைப் பற்றியும், இது போன்ற விஷயங்களைப் பற்றிப் பேசுகின்றனர் என்று கிரகித்துக் கொண்டேன். விஷயம் ஒருவாறு புரிந்தாலும், நாமொன்றைப் பேப்பரில் போட்டுவிட்டு, 'அரவவாடு பத்ரிகலோ. அபத்தங்காவேசினுவு' என்று ஏசப்போகிறுர்களே என்று ஆங்கிலத்தில் காரியதரிசியவர்களை 'நீங்களே ஒரு சுருக்கம் எழுதிக் கொடுத்து விடுங்கள்' என்று கேட்டுக் கொண்டேன். சுருக்கெழுத்து வேலையில்லாததால், பேச்சுக்களின் வீரா வேசத்தையும், தெலுங்குணர்ச்சியுடன் துடிக்கும் பலவித மீசைகளையும் நன்கு அனுபவிக்க முடிந்தது, லீக், நாட்லீ இவர்களின் கடும்வேகம் இங்கு ஓரளவு காணப்பட்டது ......

அம் மாலை உபன்யாசஞ் செய்தவர்களுள் முக்கியமானவர் ஓர் இளம் தெலுங்கு முற்போக்கு எழுத்தாளர்; "ஆப்யுதபாக ரசயிதலு" என்கிறுர்களே அவர்களுக்குள் முன்னணியிலிருப்பவரில் ஒருவர். வியாவஹாரிக, பாஷா, க்ராம்ய சைலி என்று சொல்லப்படும் இலக்கியப் புதுமையைக் கையாளும் கற்பனையாளரில் மிகவும் முக்கியமானவர். கற்பனையுலகிலேயே வாழ்பவராதலால், அவரிருக்கும் இண்டிக்கு 'வேங்கி' என்று பெயர் வைத்திருந்தார். ராமரிருக்குமிடம் அயோத்திபோல், நம் எழுத்தாளர் குடிபோகும் வீட்டிற்கெல்லாம் 'வேங்கி' என்ற பெயரும் ப்ரயாணம் செய்து கொண்டிருக்கும். குழந்தைகள் பல—திக்கணன், கிருஷ்ண தேவராயன் ஸ்ரீ நாதன் என்றெல்லாம் பெயர் வைத்திருந்தார். வீரசைவர், வீரவைஷ்ணவர் என்பதுபோல் வீர ஆந்த்ரர் என்றுல் இவருக்கு நன்கு தகும்.........................

நாம் பேசிவரும் காலம் உலகச் சண்டையின் இடி முழக்கங்கள் ஓய்ந்து அமைதி ஏற்படும் காலம். உலகச்சண்டை ஓய்ந்து நம் நாட்டிற்குள்ளும், மாகாணத்திற்குள்ளும் சண்டை சச்சரவுகள் துவக்கமாகும் காலம், அட்வைஸர் ஆட்சி முடிந்து, தேர்தல்கள் நடந்து, ஆகஸ்ட் வீரர்கள் சட்ட சபைகளுக்கு வரவேண்டிய காலம்.

மிலிடரி லாரிகள் ஓட்டம் இன்னும் முழுதும் குறையவில்லை; ஆங்கில, அமெரிக்க, மேல் ஆப்பிரிகா நீக்ரோ படைவீரரின் நடமாட்டம் முற்றிலும் நின்று விடவில்லை.......

ஒரு நாள் இரவு 9-30 இருக்கும். இரண்டு ஆங்கிலப்படை வீரர் நன்குய்த்தாக சாந்தியைச் செய்து விட்டு, ஒருவர் மேல் ஒருவர் நடுநடுவே சாய்ந்து கொண்டு, நடுநடுவே ஒருவரையொருவர் இன்ப மொழிகளும், இனிய பெயர்களும் கொண்டு கொஞ்சித் தழுவிக்கொண்டு, தம் 'மாமூல்' ஸ்தானத்திற்கு வந்தனர். வந்து பார்த்ததும் ஹனுமார் வால் போல்

ஒரு "க்யூ" நின்று கொண்டிருந்தது. "ப்ளடி, ஹெல்" என்றெல்லாம் சாபமிட்டுக்கொண்டு "சீ, வா போவோம்" என்று மேலே நடந்தனர்.........

மாலை தாம் பேசி, ஜனங்களின் ஆமோதத்தைப் பெற்றதைப்பற்றி மகிழ்ந்து, நம் முற்போக்குத் தெலுங்கு எழுத்தாளர், தம் இண்டி 'வேங்கி'யில் முன்னறையில் தம் மனைவியுடன் பேசிக்கொண்டிருந்தார். அந்த அம்மாள் 'தமலபாகு' கொடுத்தாள்; இவர் தாம் எழுதிய சிருங்கார கவிதையொன்றை, "பத்ய ராகம்" என்று ஏற்பட்டிருக்கும் ராகத்தில் இழுத்துக் கொண்டிருந்தார்........

அவ்வழியே போய்க்கொண்டிருந்த முன் சொன்ன இரு ஆங்கிலப் போர்வீரரும் சற்று நின்றனர். ஜன்னல் வழியே ஆண், பெண் இருவர் கொஞ்சம் நெருங்கி உல்லாஸமாய் இருப்பது கண்ணில் பட்டது. ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டு, ஸம்சயமான இடம் என்று எண்ணி, உள்ளே நுழைந்து விட்டனர்.

பூட்ஸ் சத்தம் கேட்டதும், ஸ்திரீ உள்ளே ஓடினாள்; அவள் நழுவியதை ஸோல்ஜர்கள் கவனிக்கவில்லை. எழுத்தாளர் தம் மேஜை மேல் புத்தகத்தின் பக்கங்களைக் கிழிப்பதற்காக ஒரு கத்தி போன்ற நீண்ட உலோகக் கருவி வைத்திருந்தார், அதைப் படைவீரரில் ஒருவன் எடுத்துக்கொண்டு எழுத்தாளரைக் குத்துவதுபோல் நெருங்கினான்; மற்றவனும் அவனுடன் பின் தொடர்ந்தான். எழுத்தாளருக்கு நாடிகள் ஒடுங்கிப் போயின; தம் மேஜையை மெள்ள ப்ரதக்ஷிணம் செய்து கொண்டு, அவ்விரு படைவீரரையும் பார்த்த படியே பின்னாலேயே நடந்து, தம் அறையின் கதவைத் தள்ளிக்கொண்டு, வெளியே வந்துவிட்டார். வீட்டில் மனைவி, ஸ்திரீ ஒருத்தியும், குழந்தைகளும் இருக்கிறார்களே என்று அவர் நினைக்கவே யில்லை.

ஆந்த்ர எழுத்தாளரைத் தொடர்ந்து, அவர் மார்பில் 'பேப்பர்—கட்டர்' கருவியைக் கொண்டு குத்துவதுபோல் அபிநயம் செய்து கொண்டு, போதையிலிருந்த ஆங்கிலப்படைவீரன் தன் தோழனுடன் வெளியேவந்தான். தெரு வந்ததும் எழுத்தாளர் திரும்பி ஓடினார்; இரு படைவீரரும் அவரைத் துரத்திக்கொண்டு ஓடிவந்தனர்.........

மணி 9-30 ஆனதும் டாக்டர்.........தம் ஆஸ்பத்திரிக்கு (Nursing Home) வழக்கம் போல் வந்து, நர்ஸுகளை, படுத்திருக்கும் நோயாளிகளின் நிலைமை, ஜ்வரம், நீர், தூக்கம் முதலியவற்றை ஒன்றொன்றாய்க் கேட்டுக்கொண்டு, பெரும் 'கேஸாய்' இருக்கும் இரண்டொன்றைத் தாமே போய்ப் பார்க்கப் போகும் தருணம். பழுப்புக் கதர் துப்பட்டாவில் கச்சம், மீசை, இவற்றுடன் ஒரு தெலுங்கன் ஓடிவந்து டாக்டரின் அறைக்குள் நுழைந்து, "டாக்டர், டாக்டர், டு மிலிடரி பெலோஸு (two military fellowsu) சேஸிங்கு (chasingu)..." என்றான். முகமெல்லாம் ஒரே வியர்வை; ஒரே நடுக்கம்.

"கம் ஆன்; நோ பியர்ஸ் (come on, no fears)" என்று டாக்டர் அவனை அணைத்துக் கொண்டு, 'ஆபரேஷன் தியேடருக்குள் புகுத்தி, பத்ரப்படுத்தி விட்டு வெளியே வந்து பார்ப்பதற்குள், இரண்டு "டாமி', கள் காகியும், பூட்ஸுமாய் 'பட, பட' வென நுழைந்து தம் போதை மழலையில், தமக்கியற்கையான வசவுகளைப் பொழிந்து "இங்கே, ஒரு ப்ளடி பெலோ (Bloody fellow) தப்பி ஓடி வந்தானே, அவனை 'டெலிவர்' (Deliver) செய்" என்று டாக்டருக்கு உத்தரவிட்டனர். டாக்டர் ஸாவதானமாய் "லுக் ஹியர்' (look here) இது ஒரு ஹாஸ்பிடல், (hospital). பல பேஷண்ட்ஸ் (Patients) படுத்துக் கொண்டிருக்கிறார்கள். அகாலத்தில் 'டிஸ்டர்பன்ஸ்' (Distrubance) செய்தால், போலீஸுக்குக் 'கம்ப்ளெயிண்ட்' (Complaint) கொடுப்பேன்" என்று சொன்னார். ஒரு ஸோல்ஜரின் கையில் குத்தும் பாணியில் கூர்மையான 'பேப்பர் கட்டர்' இருந்ததைப் பார்த்தார் டாக்டர். மற்றொரு ஸோல்ஜர் கொஞ்சம் நிதானத்தை அடைந்துவிட்டான் போலிருந்தது; அவனைப்பார்த்து மறுபடியும் டாக்டர்முன் சொன்னதையே சொல்ல, அவன் இங்குமங்கும் திரும்பித்திரும்பிப் பார்த்ததும், ஸ்டெதஸ் கோப், வாஷிங் பேஸின், முதலியவை தென்பட தன் தோழனைக் கைகொடுத்து அழைத்துக் கொண்டு வெளியே சென்றான். அத்தோமுன் போகும்போது டாக்டரை இருமுறை திரும்பிப் பார்த்து, இரண்டொரு ஆசீர்வாதச் சொல் தொடர்களை அளித்து விட்டு நகர்ந்தான்.

பூட்ஸ் சப்தம் கொஞ்சம் கொஞ்சமாய்ச் சிறியதாகி மறைந்ததும், டாக்டர் ஒரு கதவு வழியே உள்ளே சென்று, 'ஆபரேஷன் தியேடரில்' மூடி வைத்திருக்கும் அசாமியை வெளியே கொண்டுவர எண்ணினார். அந்த அறையின் கதவு திறந்து கிடந்தது; உள்ளே பார்த்தால் தெலுங்

கரைக், காணோம். பூட்ஸ் சப்தம் மறைந்ததும், மெள்ள நழுவி, இருட்டில் தம் வீட்டிற்கு ஓடிவிட்டார் ஆந்த்ர எழுத்தாளர்.

டாக்டருக்கு ஒரு பக்கம் ஆத்திரம். ஒரு பக்கம் சிரிப்பு. இப்படியும் ஒரு பிரகிருதி இருக்குமா? போகிறவன் கொஞ்சம் தங்கி இருந்து, சொல்லிக்கொண்டு, 'தாங்கஸ்' (thanks) உபசாரம் தெரிவித்துவிட்டுப், போகக்கூடாதா? இல்லை, தம்முடன் வந்து இந்த ஸோல்ஜரின் நடத்தையைப் போலீஸில் ரிபோர்ட் செய்யக்கூடாதா? டாக்டருக்கு மிகவும் அருவருப்பாயிருந்தது. ஆனாலும் இந்தத் தைர்யசாலி யாரென்று தெரிந்து கொள்ள வேண்டுமென்று தீர்மானித்துக் கொண்டார். தம் அறைக்கு வந்ததும், முழுப்போதையிலிருந்த ஸோல்ஜர் குத்துவதற்காகக் கத்தியாய் உபயோகிக்க எண்ணிய 'பேப்பர்—கட்டர்' கீழே போடப்பட்டிருந்தது. அதை எடுத்துக் கொண்டு, தம் மோட்டாரை விட்டு, ஸமீபமான வீடுகளை உற்று நோக்கின வண்ணமே மெள்ளச் சென்றார். ஒரு பர்லாங்குக்குள் ஒரு ஜன்னல் வழியாய்த் தன் மனைவியுடன் தெலுங்கில் ஒருவன் பேசிக்கொண்டிருப்பது கண்ணிலும், காதிலும் பட்டது. தலை அந்தச் சரணம் புகுந்த தெலுங்குத் தலை போலவே தானிருந்தது. டாக்டர் காரை நிறுத்திக் கதவைத் தட்டினார்.

உள்ளே எழுத்தாளர், அவர் மனைவியிருவரும் நடுங்கிப் போனார்கள். அதே ராணுவ வீரர்களோ, இல்லை வேறு விசாரணைக்காக யாரோ, வத்துவிட்டனர் என்று தீர்மானித்துக் கொண்டனர். இதற்குள் டாக்டர் நயமாய், "பயம் வேண்டாம், நான்தான் டாக்டர்......" என்றார். போன உயிரைத் திருப்பி வாங்கிக்கொண்டு, ஆந்த்ர எழுத்தாளர் கதவைத்திறந்தார்.

"இந்த, 'பேப்பர் கட்டர்' உங்களுடையது தானே? அந்த ஸோல்ஜர் என் நர்ஸிங் ஹோமில் போட்டுவிட்டுப் போய்விட்டான்"

'ஸாலா ஸந்தோஷ மண்டி, தாங்கஸ், மேஷ்டர் காரு"

"அது போகட்டும்; வா, இந்தக் காரிலேயே. போலீசுக்கு ரிபோர்ட் செய்வோம்"

"ஒத்தண்டி, எந்துகு ஈ கஷ்டம்"

"அடே, இன்றைக்கு உன் வீட்டில் புகுந்து கலாடா செய்தார்கள். நாளைக்கு வேறெங்கேயாவது செய்வார்கள். மேலும் ஒரு ஆஸ்பிடலில் புகுந்து இந்த மாதிரி 'டிஸ்டர்ப்' செய்யப் படுமா? பொதுஜன நன்மைக்காக இதை 'அதாரிடிசுக்கு' (authorities) ரிபோர்ட் செய்ய வேண்டாமோ" என்று மன்றாடினார் டாக்டர்.

அந்தத் தீரன் அசையவே இல்லை. "ரேபு சூஸ்தாமு, குட்நைட்டு".........

டாக்டருக்கு, சீ யென்றாய்விட்டது. அருகாமையிலேயே பத்திரிகை நிருபர் தம் பேஷண்ட் ஒருவர் உண்டு. அவரை எழுப்பி, அவருடன் சென்று, தானாவில் கேஸ் ஒன்றைத் தாக்கல் செய்துவிட்டு, அவர் மூலமே மறுநாட்காலை பத்திரிகையிலும் செய்தியைப் போடவைக்கலாம் என்று உத்தேசித்தார். நல்ல வேளையாய்ப் பத்திரிகை நிருபர் அப்போதுதான் தம் பேப்பர் ஆபீஸிலிருந்து சில மாலை மீட்டிங்குகளின் ரிபோர்ட்டுகளை எழுதிக்கொடுத்துவிட்டு வந்திருந்தார். டாக்டரின் கார்–ஹாரண் கேட்டதும் வெளியே வந்தார் "வா, உக்காரு, காரிலே, போயிண்டே கதையைச் சொல்றேன்" என்றார். நிருபர் எறினார...... ..

"அதோ...அந்தத் தெருவிலே, 'வேங்கி'னு ஒரு வீட்டுலே, நர்ஸிங்ஹோமுக்கு கொஞ்ச தூரத்துலே இருக்கானே, தெலுங்கன், உனக்கு நன்னாத் தெரிஞ்சுருக்குமே...... தெலுங்குகதை, பாட்டு, 'ஸினிமா டைலாக்" எல்லாம் எழுதறானேப்பா.........

"ஆமான், ஆமான், அவனா இப்படி பயந்துண்டு ஓடினான்.... அட! அவன் இன்னிக்கு ஸாயந்தரம் ஆந்த்ரஸபையிலே போட்ட சத்தத்தையும், அவனுக்கிருந்த ஆவேசத்தையும், பார்த்தா, ஏதோ தென்னிந்தியா முழுதையும் ஒரேடியாய் ஜயிச்சுடும் ஹிட்லர் போலனா இருந்தது! அவனா இப்படி ஓடினான்! அடே தெலுகு வீருடு...!

# "குப்பையில் மாணிக்கம்"

டி. சேஷாத்திரி

19808
சென்னை-600 008

கலியாணசுந்தரம் என் சிநேகிதனே. ஆனால் அவன் பட்டணவாசி; கிராமங்களை விரும்ப மாட்டான். அதன் மக்களை நம்பவே மாட்டான். அவன் ஒரு நாள் எங்கள் கிராமத்துக்கு வந்தான்; கோடை விடுமுறையை என்னுடன் கழிப்பதாகவும் சொன்னான். சந்திரன் அமாவாசையன்று கிளம்பிப் பிரகாசித்திருந்தால்கூட நான் இவ்வளவு வியப்பெய்தியிருக்கமாட்டேன்!

பிற்க; ஒரு மாலையில் நானும் அவனும் உலாவக் கிளம்பினோம். வடக்கே செல்லும் சாலையில் கிராமத்தைத் தாண்டி சுமார் ஒரு மைல் வடக்கே போயிருப்போம். அங்கே வள்ளி எங்களைச் சந்தித்தாள். அவள் ரோட்டிற்குக் கிழக்கே சுமார் ஒரு பர்லாங் தூரத்திலுள்ள சேரியைச் சேர்ந்தவள். அவள் தலையில் ஒரு கூடை இருந்தது. என்னைக் கண்டவுடன் நின்றாள்; கூடையை இறக்கிக் கீழே வைத்தாள். மரியாதையாக விலகி நின்று, இரு கைதூக்கி நமஸ்கரித்தாள். "சாமி" என்று தழுதழுத்த குரலில் கூப்பிட்டாள்.

"என்ன வள்ளி? என்ன சேதி? சுகம் தானே?" என்றேன். கலியாணம் எங்களை 'டிராமா' பார்ப்பது போலப் பார்த்தான்.

"சுகம் தானுங்க" என்றாள் வள்ளி.

"எங்கே போறே. பண்ணையில் சேர் கட்டறாங்க போலிருக்கு. அப்பனுக்கு சோறு கொண்டு போகிறாயோ?" என்றேன்.

"ஆமாமுங்க...இல்லிங்க! ஒரு சமாசாரம் அதானுங்க...கேட்கணும்..." என்று வள்ளி இழுத்தாள். குரல் கம்மித் தழுதழுத்தது. கண்கள் சிவந்து நீர் மல்கியது.

"ஓ! அதுதானே! இன்னும் இரண்டரை வருஷங்கள் பாக்கி இருக்கின்றனவே... அம்மா" என்றேன்.

"அப்படின்னா வர்ற நடவு; அதுக்கடுத்த நடவு. அதற்கடுத்த நடவுங்களா சாமி"

"ஆமாம், வள்ளி. சரிபோ. நேரமாகிறது. கடைகண்ணிக்குப் போய்வர வேண்டாமா?"

நான் நடக்க ஆரம்பித்தேன். அவள் கூடையை எடுத்துத் தலையில் வைத்தாள். அவள் கண்கள் அவளையும் மீறித் தண்ணீரைச் சொரிய ஆரம்பித்தன. 'கேவல் சத்தம் கேட்க ஆரம்பித்தது. ஒட்டி உலர்ந்த அவள் சரீரத்தில் துக்கம் புகுந்து கொண்டு, நெஞ்சில் ஈரமில்லாமல் ஆட்டி வைத்துவிட்டது.

நான் சமாதானம் செய்தேன். "அழாதே வள்ளி. நீ அழுவதனால் விரதத்தின் பலன் குறையும். இன்னும் இரண்டு நடவு பொறுத்துக்கொள்"

நாங்கள் நடந்தோம். கலியாணம் கேட்டான் "யாரடா அந்தப் பறச்சி?"

"பறச்சி அல்ல அவள். அவள் வாஸ்தவமாகவே 'ஹரிஜனம்', கடவுளின் செல்வி. பறத்தெருவுக்கு மட்டுமல்ல, நம் தேசத்திக்கே ஒரு பெருமை. இந்துமதத்தின் இருதயம். பழைய பெருமைகளின் எல்லை. இந்திய வாழ்க்கை முறைகளின் உச்சியில் பிரகாசிக்கும் விளக்கு. உயர்ந்த இலக்ஷியங்களின் உரு...'

கலியாணத்துக்கு அவ்வளவாகப் பிடிக்கவில்லை "என்னடா அது, உணர்ச்சிவேகமா? உண்மையைச் சொல்லப்பா!" என்றான்.

நான் கேட்டேன் "உனக்கு அவளைப் பார்த்தவுடன் ஏதாவது தோன்றிற்றா?"

"என்ன தோன்றிற்று? மிகத் துக்கப்பட்டவள் போலக் காண்கின்றது. அது ஒரு அதிசயமா? அது இருக்கட்டும். நீ ஏதோ ரகஸ்ய பாஷையில் பேசினாயே, அது என்ன என்று கேட்கிறேன்"

"வாஸ்தவமே. நம் தேசத்தில் ஹரிஜனங்கள் கஷ்டப்படுவது அதிசயமில்லை. ஆனால் அவள் துக்கம் அலாதியானது. அவள் வயது என்ன இருக்கும்? சொல் பார்க்கலாம்"

"என்ன சுமார் முப்பது இருக்கும்"

"அல்ல. வயது இருபது இருபத்திரண்டு தான் ஆகிறது. இந்த வயதில் இப்படி உலர வேண்டாம் இவள். மொட்டுக் கருகுகிறது. சரி கதையைச் சொல்கிறேன்,

கேள்'' சொல்லிக் கொண்டே போனேன், கேட்டுக் கொண்டே நடந்தான் நண்பன்.

2

''எங்கள் வீட்டுக்கு அடுத்தவீட்டு மிராசுதாருக்கு நடேசபிள்ளை என்று பெயர். அவருக்கு எட்டு வேலி நிலம். அவரிடம் எட்டு ஆட்கள், பத்து நடவாட்கள் இருந்தனர். அவர்களுள் ராமன் என்று ஒரு கிழவன்; வயது 62 ஆகிறது. அவனுக்குச் சுமந்நை ரூபாய் எழுபத்தைந்து.

அவனுக்கு முன்னு மின்றி பின்னு மின்றி அவனுடைய நாற்பதாவது வயதில் ஒரு பெண் குழந்தை பிறந்தது. அதை நான்கு வயது வரை வளர்த்த அதன் தாய் அவன் கையில் ஒப்புவித்துவிட்டு, வந்தவேலை தீர்ந்தவள் போல நழுவி விட்டாள் பரலோகத்துக்கு.

ராமன் குழந்தையை அருமையாக வளர்த்தான். ஆக்கி அளித்து, வேலைக்குச் செல்லும்போது எடுத்துச் சென்று வரப்பில் துணி விரித்து உட்காரவைப்பான். குழந்தை உட்கார்ந்திருக்கும், சற்று நேரம் எழுந்திருந்து அங்கும் இங்கும் ஓடும், விளையாடும். உருமத்துக்கு ஒரு தடவை தகப்பன் கரையேறும்போது அவன் கொடுத்ததைச் சாப்பிடும். மாலையில் தந்தையுடன் வீடு சேரும்.

முதலாளி நடேசபிள்ளையும் அந்தக் குழந்தையை நேசித்தார். தமக்கு வரும் சோற்றில் அதற்கும் கொஞ்சம்கொடுப்பார். கிழவன் மனது பூரித்துப் போவான்.

''ஏட்டி, அய்யா வீட்டுச் சோறு. உழைக்கணும் தெரியுமல்ல'' என்பான். குழந்தை புரிந்தவள் போலச் சிரிப்பாள்!

அப்படி வளர்ந்த குழந்தை தான் வள்ளி! இதோ போகிறுளே துக்கத்தின் பெண்ணுரு மாதிரி அவள்.

பதினுன்குவயது ஆனவுடன் முதலாளி பண்ணையிலேயே நட ஆரம்பித்தாள் வள்ளி. நடேசபிள்ளைக்கும் மனது குளிர்ந்தது. எழுபத்தைந்து ரூபாயில் ஒரு கிழவன் மட்டும் பிணைபட்டிருந்தால் எங்கள் மிராசு


# நின்றுபோன மாதவிடாய்



குமாரி (TABLETS) மாத்திரையின் உபயோகத்தினுல் நின்றுபோனது நீங்கும். வருங்காலத்திலும் கஷ்டங்கள் நேரிடா. கெடுதலின்றி விரைவில் நலம் கிட்டும். இந்தியாவிலும், வெளிநாடுகளிலும் ஆயிரக்கணக்கானவர்கள் உபயோகிக்கின்றுர்கள்

| | | |
|---|---|---|
| சாதாரண கேஸ்களுக்கு | ... | ரூ 3 |
| நீண்டநாளைய கேஸ்களுக்கு | ... | ரூ 5 |
| மிக ஆபத்தான கேஸ்களுக்கு | ... | ரூ 8 |
| கர்ப்பத்தடை (6 மாத உபயோகத்திற்கு) | ... | ரூ 4 |

(வி. பி. அணு 12 கூட)

தயாரிப்பவர்கள்:-

**MRS. P. DEVEE, F.D.S. (C.M.)**

Tollygunge CALCUTTA.

கீழ்க்கண்டவர்களிடமும் கிடைக்கும்:—

ஹாரி & சன், 93, சைனுபஜார் ரோடு மதராஸ்.
ராகவன் & கம்பெனி, ஸ்ரீ நரசிம்ஹராஜா ரோடு பங்களூர் ஸிடி
நாதம் & கம்பெனி மட்டஞ்சேரி, கொச்சி
J. திராத் & கம்பெனி, மஹாத்மா காந்தி ரோடு, கராச்சி
L. M. முகர்ஜி & சன்ஸ் லிமிடெட் 167, தராம்தோலா தெரு கல்கத்தா
சிவானந்த சித்தர் மெடிகல் ஹால், 92, கடல்தெரு கொளும்பு, & 768, லோவர் தெரு, பாத்துல்லா (ஸிலோன்)

தார் மனது அவ்வளவு குளிர்ந்த நிலையில் இருக்காது!

வள்ளிக்குப் பதினைந்து வயதாயிற்று. வள்ளி சாதாரணமாகவே அழகான பெண். சற்றுச் சிகப்பு. களைபொருந்திய முகம். வயது வந்தால் கேட்கவேண்டுமா? உயர் குல யுவர்கள் மனதைக்கூடக் கொஞ்சம் கலக்கிவிட்டாள்.

வேலையிலும் அவள் அபார சூரி. சேற்றில் இறங்கி நடவு நடக் காலையில் குனிந்தால் அஸ்தமித்துத் தான் தலை நிமிர்வாள். நடவும் மிகச் சட்டமாயிருக்கும். ''ஒட்டை''க்கு ஒரு நடவு என்றால், 'ஸ்கேல்' வைத்து அளந்து கொள்ளலாம். நடவு மட்டுமல்ல, போரின் மேல்ஏறி வைக்கோல் உதறினாலும் சரி, நெல்லுத் தூற்றினாலும் சரி, பெரிய பெரிய ஆட்கள்கூட ஆச்சரியத்தால் விம்முவார்கள். அவளுக்குத் தெரியாத வேலை கிடையாது. அந்தச் சேரியில் வயது வந்த பையன்கள் உள்ள தந்தை தாய்மார்கள் எல்லாம் வள்ளியைப் போகும் போதும் வரும் போதும் பார்த்து ஏங்கின தில் ஆச்சரியமே இல்லை.

வள்ளிக்கு வயதாக வயதாக நடேச பிள்ளை வயிற்றில் நெருப்புக் கனிந்தது. வள்ளி மணந்தால் வேறு பண்ணைக்குப் போய்விடுவாளே! பணத்துக்குக் கிழவன் மட்டும் போதுமா?

அந்தப் பணம் கொடுத்த வேடிக்கையே வேடிக்கை. ராமன் வந்த புதிதில் ரூ 35/- வாங்கிக் கொண்டான். ஆளும் நடவாளுமாக வேலை செய்தான் மனைவியுடன். பிறகு சாவு வாழ்வு; ஒன்றிரண்டு கடனும் வாங்கியிருப்பான். சேர்ந்தது, சேராதது எல்லாம் கூட்டி இன்று எழுபத்தைந்தாகி விட்டது! நாற்பது வருஷம் வேலை செய்ததின் பலன் அது!!

ஆனால் ராமனோ? அவனுக்கு இந்த வாதம் எல்லாம் தெரியாது. ஐயாவிடம் சுமந்தை கைநீட்டி வாங்கியது. அதற்குப் பதில் உழைத்து ஆகவேண்டும். பிறந்ததும் பெண்ணாகி விட்டது. கடனோ தங்கி விட்டது. என்ன செய்வது? என்ற ஒரே கவலை.

'ஏன் அப்பா கவலைப்படறே? நான்தான் இருக்கேனே!' என்பாள் வள்ளி.

'நீ என்னம்மா பண்ணுவே!' என்று அங் கலாய்ப்பான் கிழவன். 'நான் ஒரு பிள்ளையாய்ப் பிறந்திருந்தால்'' என்பாள் வள்ளி கவலையாய். ''சரி அது கிடக்குப்போ!'' என்று முடித்து விடுவான் கிழவன். இருவரும் கவலைப்பட்டனர். கிழவனுக்கு இன்னம் ஒரு கவலை. வள்ளிக்கேற்ற கணவன் கிடைக்கவேண்டும். வள்ளி ஒரு நிச்சயம் செய்திருந்தாள்; ''யாரைச் செய்து கொண்டாலும் சரி. அப்பா சுமந்தைக்கு ஏற்பாடு செய்கிறவனைத்தான் கட்டிக் கொள்வது'' என்று.

அதனாலேதான் வேலன் தன்பையனுக்குப் பெண் கேட்டபோதும் சரி; அஞ்சலை தனக்கு மருமகளாக வள்ளியை வரித்த போதும் சரி; அஞ்சாளும் ஆறுமுகமும் தாங்களே தூது வந்தபோதும் சரி; அவர்கள் ஏமாறித் திரும்ப வேண்டியிருந்தது. அவரவர்கள் பண்ணைக் கடனுடனும் கலியாணத்துக்கு வாங்கப்போகும் கடனுடனும், இன்னம் 75 ரூபாயைச் சேர்த்துக் கொள்ள எந்த ஆள்தான் சம்மதிப்பான்?

3

நாட்கள் சென்றன. அடுத்த நடவு காலம் வந்தது. அன்றலர்ந்த மலரே என விளங்கினாள் வள்ளி. அவளுக்கு இந்த வருஷம் ஒரு புது அனுபவம் ஏற்பட்டது.

தென்புறத் தெருவில் 'முருகன்' என்ற ஒரு பையன். வயது இருபத்துநான்கு இருக்கும். பத்து வருஷங்களுக்கு முன் வெளியேறிய தாய் தந்தையுடன் அவனும் போய்விட்டான். இப்பொழுதுதான் அவன் தனியே திரும்பி வந்தான். அவன் கையில் ''இரண்டு காசு'' இருக்கும் என்றுகூடச் சொல்லிக் கொண்டனர்.

அவன் பண்ணையில் ''சுமந்தை'' வாங்கிக் கொண்டு வேலை செய்யத் தயாரில்லை. கூலி வேலைதான் செய்வான். அதுவும் இஷ்டமிருந்தால்தான் செய்வான். அவன் அதிகம் குடிப்பதில்லை. அவன் ஒருநாள் நடேச பிள்ளை பண்ணைக்கு நாற்றுப்பறிக்க வந்தான். நாற்றுப்பறிக்க வந்தவன் நடவு நட்டுக்கொண்டிருந்த வள்ளியின் இருதயத்தையும் ஆட்டிப்பறித்து விட்டான். வள்ளியின் கூரியகண்களும் அவனைப் பலமாகவே தாக்கின. இயற்கையின் நியதி. இருவரும் உணர்ச்சி வழிப்பட்டனர்.

கிழவன் ராமனும், முதலாளி நடேச பிள்ளையும் இதை அறிந்தார்கள். நடேச பிள்ளை பயந்தார். அவன் தறிதலை. பணத்துக்கு என்ன செய்வான்? ராமனுக்குச் சந்தோஷமே! பையன் நல்ல பையன். வள்ளிக்கேற்ற காளை. ஆனால் அவன் மனமும் மகளின் அன்புக்கும், பணத்தின் பயத்துக்கும் நடுவே ஊசலாடியது.

4

முருகன் அடிக்கடி அந்தப் பண்ணைக்கே கூலிவேலை செய்ய வருவான். 'ஏன்?' என்று எல்லோருக்கும் தெரியும். இப்படி இரண்டு மூன்று மாதங்கள் சென்றன.

கிழவன் ஒருநாள் உள்ளம் அழச் சொன்னான்: "வள்ளி! உன்னை வேலனுக்குக் கட்டிக்கொடுக்கப் போகிறேன்" "எந்த வேலன்?" என்றாள் வள்ளி.

"வடக்குத்தெருப் பொட்டை ஆண்டை ஆள்."

"ஆமாம் அந்தக் குடிகாரன் மவனுக்கா?"

"ஆமாம். அவன்தான் நம்ம பணத்துக்கு ஏற்பாடு செய்வான் போலிருக்கிறது. அவனுக்கு ஏற்கனவே சுமந்தை ரூபாய் 35 தான். 110 ரூபாய்க்கு ஐயா கிட்டேயே நிக்கிறேன்னு சொல்றான்."

வள்ளி சற்று யோசித்தாள். வாஸ்தவமே. கிழவனுக்குத் தான் எவ்வளவு பாரமாயிருக்கிறாள் என்று அவளுக்குத் தெரியும். ஆனாலும் ஆசை...!

"வேலன் குடிகாரன் அப்பா. முரடன். அவன்கிட்ட யாரப்பா உதை வாங்கறது? இப்ப, என்ன ஆஞ்ஞான் வந்திடுச்சி. ஐயா பணத்துக்கு நான்தான் இருக்கேனே! நீயும் என்ன சும்மா குந்திக்கிட்டா இருக்கே? வேலை செஞ்சுக்கிட்டுத் தானே இருக்கே? நீ செத்தாக்கூட நான் பணம் கொடுக்காமே வேறே பண்ணேக்குப் போறதில்லை......... சரிதானே!" என்றாள் வள்ளி.

கிழவன் ஒன்றும் சொல்லவில்லை. இருதயம் தண்ணீராகி விட்டதுபோல் தோன்றிற்று. மகள் ஆசை ஒருபுறம். முதலாளி கடன் ஒருபுறம். வாட்டக் கிழவன் கல்லாய்ச் சமைந்தான்.

அடுத்த தடவை முருகன் வள்ளியைச் சந்தித்தபோது முருகன் வாய்திறந்து கேட்டான் "வள்ளி என்னைக் கட்டிக்கிறயா?" என்று.

வள்ளி பூரா விபரமும் சொன்னாள். "இப்படி யிருக்குது சேதி. ஒண்ணு ரூபாயைக் கொடுத்திட்டு அப்பாவை மூட்டுப்புடு; அல்லாங் காட்டியும் பண்ணையிலேயே நின்னுக்கோ"

முருகன் சொன்னான்; "பண்ணை வேலை மட்டும் செய்யச் சொல்லாதே வள்ளி"

"அப்ப வள்ளியும் கிடைக்கமாட்டாள் அத்தான்" என்றாள் வள்ளி.

உண்மையான நல்ல பட்டை உணருங்கள்.




உண்மையான நல்ல பட்டு எப்படி உணர்ச்சிக்கு இருக்கும் என்பதை அறிய ஆடம்பரமும் மனோரம்மியமான மைசூர் சில்க் அணிவதன்மூலம் தெரிந்து கொள்ளலாம். அது சாதாரண பட்டுக்களைவிட அதிக காலம் உழைக்கும்.

மைசூர் கவர்ன்மெண்ட் தயாரிப்பு

கவர்ன்மெண்ட் சில்க் வீவிங் பாக்டரி, மைசூர்.

வள்ளியின் திடப் பார்வையும், புன் முறுவலும் அலட்சியமும் அவனை வேதனை செய்தன.

"ஏன், பணம் கொடுத்தாக்கூடவா?"

"அப்ப வள்ளி தயார்."

முருகன் சற்றுத் தயங்கினான். அவனிடம் அவ்வளவு ரூபாயில்லை. ஏதோ யோசனை செய்தான்.

"சரி. நாலஞ்சு நாளில் வீட்டுக்கு வாறேன், அப்ப திட்டமாய்ச் சொல்றேன். போ." என்றான்.

## 5

பெண்ணால் இந்திரன் கெட்டான்; சந்திரனும் கெட்டான். பரமசிவன் மகன் என்ன வாழ்ந்தான்? பொய் சொன்னான் பெண்ணுக்காக. வேஷம் போட்டான். கள்ளத்தனம் செய்தான். நம் முருகனும் ஒரு அசட்டுத் தனம் செய்துவிட்டான்.

நான்கைந்து நாட்களுக்குப் பிறகு ஒரு நாள் மாலை 3 மணிக்கு வள்ளியும் தகப்பனும் வீட்டில் இருந்தனர். அன்று பண்ணையில் வேலை இல்லை. "சோம்பு" (பதினைந்து நாட்களுக்கொருமுறை பண்ணை ஆட்களுக்குக் கிடைக்கும் விடுமுறை). அப்பொழுது முருகன் வந்தான்.

வள்ளி: "இதோ வந்திருச்சே அத்தான்" என்றாள்.

கிழவன்: "ஓலைப் பாயை எடுத்துப் போடு குந்தட்டும்"

முருகன் நின்று கொண்டே, "இல்லை; நிற்பதற்கு நேரமில்லை; நான் டவுனுக்குப் போகிறேன்..." என்றான்.

"டவுனுக்கா? எதுக்கு?" முருகன் தயங்கினான். அவன் முகக் களை ஒழுங்கா யில்லை. கூண்டில் நிற்கும் கைதி போல விழித்தான்.

வள்ளி அதட்டிய குரலில் அன்பாய்க் கேட்டாள்: "என்ன முளிக்கிறே. ஆடு திருடின கள்ளன் மாதிரி"

கள்ளன் என்ற வார்த்தையைக் கேட்டு இன்னம் யோசனையில் ஆழ்ந்தான் முருகன்.

மெதுவாக மடியிலிருந்து ஒரு பொன் சங்கிலியை எடுத்தான். சுமார் 6 பவுன் களாலாகியது.

வள்ளி லபக் என்று பாய்ந்து பிடுங்கினாள். "ஏது? ஏது? எங்காச்சியும் திருடினயா?" கிழவன் அதட்டினான். அவனுக்கு விஷயம் தெரியாது. "சீச்சீ, தம்பிகிட்ட நகை இருக்கக் கூடாதோ?"

முருகன் தலைகுனிந்தபடியே நின்றான். வள்ளி சண்டமாருதம்போல் சீறினாள். "சொல்லு சொல்லு ஏன் சும்மா நிக்கறே?"

முருகன் கண்ணீர் உதிரச் சொன்னான்...

"ஆமாம் வள்ளி. திருடிட்டேன். இது வரையில் செய்தறியாத ஒரு பாபத்தைப் பண்ணிட்டேன்"

"எதுக்காவ இப்படிச் செய்தே?"

"உனக்குத் தெரியாதா வள்ளி? என்னமோ புத்திப் பிசகு பண்ணிட்டேன். நேத்துத்தான் திருடினேன். அண்ணைக்கே திருடியிருந்தால் பணம் மாத்தித்தான் உங்கிட்ட வந்திருப்பேன். நாளாய்ட்டதினாலே சொல்லிட்டுப் போவலாம்னு வந்தேன். இனி நீதான். சொல்றபடி கேக்கறேன்."

வள்ளிக்குத் தாளவேயில்லை "சரி அவுங்க கிட்டயே திருப்பிக் கொடு, போ" என்றாள்.

கிழவன் சொன்னான்: 'ஏண்டா தம்பி, சங்கடம் பண்ணிட்டயே! அது வைச்சுக்கிறதும் சரியில்லையே. அது சரி எங்கே எடுத்தா?"

"அதுவா? ராமசாமிப் பிள்ளை குழந்தை போட்டுக்கிட்டு வாய்க்கால் தாண்டி வந்திடுச்சு......திரும்பிப் போறப்ப.........அறுத்துட்டு......ஓடியாந்துட்டேன்......"

"ஐயையோ! ராமசாமிப் பிள்ளையா?" என்று தந்தை மகள் இரண்டு பேருமே அலறினார்கள்.

"சரி கொண்டுபோய்க் கொடு" என்றார்கள். கிழவன் சற்று யோசித்துச் சொன்னான்.

"இரு அவருகிட்ட நீ போய்க் கொடுத்தாலும் சும்மா விடமாட்டாரு. ஒரு யோசனை தோணுது.........நானே கொண்டுபோய்க் கொடுக்கிறேன். சங்கடம் கிழவனோடே ஒழியட்டும்........."

முருகன் பதறினான். அவன் நற்குணங்கள் அற்றவனல்லன். தங்கம்கூட நிறமாறிக் காணப்படுகிறது. ஜோதியுடன் சேர்ந்தால் பிரகாச மடைகிறது.

அவன் கதறினான். "தாத்தா அது முடியாது. திருடநான்; கஷ்டப்பட நீங்களா?..." வள்ளி சொன்னாள்: "என் புருசன் திருடன்னு உறுத்திக் கிட்டே யிருக்கும். அது உதவாது. இதுதான் என் புருசன்னு பரிசம் போட்டுட்டேன். ஆனாலும் திருடனைக் கட்டிக்கிட்டு வாழமுடியாது"

"வள்ளி மோசம் போய்ட்டேன். கொல்லாதே. நீ என்ன சொன்னாலும் தலையாலே செய்றேன், சொல்லு"

வள்ளி நிச்சயமாய்ச் சொல்லி விட்டாள்: "கொண்டு போய் ராமசாமி ஆண்டை கையில் கொடுத்து காலில் விழு. அடித்தால் பட்டுக்கொள்"

"ஜெயிலுக்கனுப்பினால்?"

"போ. பரவாயில்லை; நீ வள்ளியைப் பத்தி சந்தேகப்படாதே. எவ்வளவு நாளானாலும் நான் உன்னைத்தான் கட்டிக்கப் போறேன். ஆனால் சுத்தமானவன்தான் என்னைத் தொடலாம்"

கள்ளங்கபடமற்ற மனம்; குப்பையில் மாணிக்கம். அவள் உள்ளம் அவ்விதம் பேசி விட்டது. அவள் தன் கஷ்டத்தை உணராமலில்லை. ஆனால் அவள் அழத் தயாரில்லை. "சரி" என்று திரும்பினான் முருகன். "ஆனால் இந்தக் கிழவர் பாடு...," என்று சந்தேகம் கிளப்பினான். கிழவன் தைரியமூட்டினான். "என் குழந்தைகள் ஒருவர்க்காக ஒருவர் கஷ்டப்பட நான் மட்டும் குழந்தைகளுக்காகக் கஷ்டப் படக் கூடாதா?" கிழவன் இருதயம் அலை மோதிக் கண்கள் வழியாக வெளியேறிற்று.

அவர்கள் ஒருவர் மனதாவது ராமசாமிப் பிள்ளை ஏன் மன்னிக்கக் கூடாது? என்று சந்தேகிக்கவே இல்லை.

6

இவ்வாறு சொல்லி நிறுத்தி நான் கல்யாணத்தின் முகத்தைப் பார்த்தேன். அவன் நன்றாக அலைக்கப்பட்டிருந்தான். பரபரப்புடன் கேள்விகளை அடுக்கினான்.

"சரி மேலே என்ன ஆயிற்று? கொண்டு போய்க் கொடுத்தானா? ராமசாமிப் பிள்ளை மன்னிக்கவேயில்லையா? என்ன நடந்தது?

"ராமசாமிப் பிள்ளை மன்னிக்கவேயில்லை. கிழவனாயிருந்தாலும் அடித்து விரட்டியிருப்பார். ஆனால் அவர் எந்தப் "பறையனை"யும் சும்மா விடமாட்டார்! இவனிடம் அவருக்குக் கொஞ்சம் பயம். ஆகவே கேஸை ஜோடித்து அவனுக்கு ஆறுவருஷம் கடுங்காவல் வாங்கிவைத்து விட்டார்.

வள்ளியும் முருகனும் ஒருவரை ஒருவர் அடையத் தவம் கிடக்கிறார்கள். மூன்றரை வருஷங்கள் சென்று விட்டன. கிழவனும் முருகனிடம் வள்ளியை ஒப்புவித்துவிட்டுப் போகவேண்டும் என்று கடவுளை வேண்டிக் கொண்டிருக்கிறான்" என்று நான் முடித்தேன் "இதுதான் வள்ளி கதை"

கலியாணசுந்தரம் சொன்னான்.

"அதுதான் அப்பா! அவள் முகத்திலே ஒரு மாதிரியான பிரகாசம் இருந்தது. நிசமாகச் சொல்லுகிறேன்' அவளை நமஸ்காரம் செய்தால்கூடப் புண்ணியம் உண்டப்பா!"

அவன் இருதயம் தழுதழுத்ததை நான் அவன் கண்கள் மூலம் கண்டேன்.




Agent for Tanjore Dt.

K. ராகவேந்திர ராவ்,

சந்திர விலாஸ்,

கும்பகோணம்.

# மமதா

### ஜயசங்கர் பிரஸாத்

ரோகதாஸக் கோட்டையின் ஒரு அறையில் உட்கார்ந்து கொண்டு யுவதி மமதா சோண நதியின் கம்பீரப் பிரவாகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தாள். மமதா விதவை. சோணநதியைப்போல் பொங்கிப் பெருகிக்கொண்டிருந்தது அவளுடைய யௌவனமும். உள்ளத்தில் வேதனை, சிந்தனையில் புயல், கண்களில் நீர், இவற்றுடன் அவள், வாழ்க்கையின் முட்படுக்கையில் அமர்ந்திருந்தாள். அவள் ரோகதாஸக்கோட்டை அதிகாரியின் மந்திரி சூடாமணியுடைய ஒரேபெண். ஆகவே அவளுக்கு எந்தக்குறையும் இல்லை. ஆனால் அவள் விதவை. ஹிந்து சமூகத்தில் மிகவும் கீழான-பரிதபிக்கத்தக்க-நிலைமைதான் விதவைக்கு. ஆகவே அவளுடைய சோகத்துக்கு எல்லையேது?

சூடாமணி மௌனமாய் அவளுடைய அறைக்குள் நுழைந்தார். கல கல வென்ற ஓசையுடன் ஓடிச் செல்லும் சோணநதியின் பிரவாகத்துடன் கலந்து விடலாமா என்று தீவிரமாய் யோசித்துக் கொண்டிருந்த மமதா தன் தந்தையின் வரவை உணரவில்லை. சூடாமணி மனம் வெதும்பியிருந்தார். அன்புக்குப் பாத்திரமான பெண்ணிற்குச் சாந்தியளிக்க என்ன செய்வது என்று அறியாமல் அவர் தவித்தார். திரும்பி வெளியே சென்று விட்டார். இம்மாதிரி அவர் அடிக்கடி வந்துவிட்டுப் போவதுண்டு. ஆனால் இன்று அவருள்ளத்தில் புதுவிதமான கவலை சூழ்ந்திருந்ததால் கால்கள் தடுமாறின.

அந்தி வேளையில் அவர் மறுபடியும் மமதாவின் பக்கம் வந்தார். அப்பொழுது அவர் பின்னால் பத்து சேவகர்கள் பெரிய வெள்ளித் தட்டுக்களில் எதையோ எடுத்து வந்திருந்தார்கள். பலருடைய காலோசை கேட்டு மமதா திரும்பிப்பார்த்தாள். எல்லாவற்றையும் அங்கே வைத்து விட்டுப் போகும்படி சூடாமணி சைகை காட்டிச் சேவகர்களுக்கு உத்தரவிட்டார். எல்லோரும் போய்விட்டார்கள்.

மமதா, "இதென்ன அப்பா?" என்று வினவினாள்.

"உனக்குக் காணிக்கை, அம்மா!" என்று கூறிக்கொண்டு தட்டுக்களை மூடியிருந்த துணிகளைச் சூடாமணி விலக்கினார். அவைகளிலிருந்த பொன்னின் மஞ்சள் நிறம் அந்தப் பொன்முலாம் பூசப்பெற்ற அந்திப் பொழுதின் எழிலுடன் கலந்தது. மமதா திடுக்கிட்டாள்.

"இவ்வளவு தங்கமா; இது எங்கிருந்து வந்தது, அப்பா?"

"உரக்கப்பேசாதே மமதா இதெல்லாம் உன்னுடையவை"

"அப்படியானால் நீங்கள் முஸல்மான்களிடம் லஞ்சம் வாங்கிவிட்டீர்கள் என்று சொல்லுங்கள். இது அர்த்தம் (செல்வம்) அல்ல. அனர்த்தமாகும், அப்பா! திருப்பி அனுப்பி விடுங்கள், அப்பா. நாம் பிராமணர்கள். நமக்குப் பொன்னும் பணமும் எதற்கு?"

"கீழே விழுந்துகொண்டிருக்கும் இந்தச் சாமந்த வமிசத்தின் இறுதிக் கட்டம் விரைந்து அணுகிக் கொண்டிருக்கிறது, மமதா. ஒரு நாள் சேர்ஷா ரோகதாஸக் கோட்டையைப் பிடித்துக் கொண்டு விடப்போகிறான். அன்று எனக்கு மந்திரிப் பதவி இராது. அப்போதைக்காகத் தான் இந்தத் தங்கம்."

'ஈசுவரா! அப்பொழுதிற்காகவா? ஆபத்துக்காலத்துக்காகவா? ஆண்டவன் நியதிக்கெதிராகவா சூட்சிசெய்யப்பார்க்கிறீர்கள்? அப்பா, பிச்சை கிடைக்காமலா போய் விடும்? பிராமணனுக்கு ஒரு பிடி அரிசி பிச்சை போடவும் ஆளில்லாமல் போய் விடுமென்று நீங்கள் பயப்படுகிறீர்கள்? அப்படி நேரிடாது. இதையெல்லாம் திரும்பக்கொடுத்து விடுங்கள் அப்பா. இதன் பிரகாசம் என் கண்பார்வையைப் பறிக்கிறது, என்னால் சகிக்க முடியவில்லை."

"அசடே!" என்று மட்டும் கூறிவிட்டுச் சூடாமணி அங்கிருந்து எழுந்து சென்றார்.

மறுநாள் டோலிகள் வரிசையாய் உள்ளே வந்தபோது சூடாமணியின் இதயம் படபட வென்று அடித்துக்கொண்டது. அவரால் பொறுக்க முடியவில்லை. டோலிகளைச் சுமந்து வந்த பட்டாணிகளிடம் டோலிகளை மூடியுள்ள திரைகளை விலக்கும்படி கேட்

டார் அவர். அதற்கு அவர்கள், "இது பெண்களை அவமானம் செய்வதாகும்" என்றனர்.

வார்த்தை வளர்ந்தது, சூடாமணி கொல்லப்பட்டார். ராணி பொக்கிஷம் எல்லாம் சேர்ஷாவிற்குச் சொந்தமாயின. ஆனால் மமதா தப்பித்துக்கொண்டு சென்றுவிட்டாள். டோலிகளில் வந்த பட்டாணியர் அவளுக்காகக் கோட்டை முழுவதையும் தேடியும் அவள் பிடிபடவில்லை.

* * *

காசிக்குச் சற்று வடக்கே தர்மசக்ர விஹாரம் மௌரிய; குப்தவமிசத்துச் சக்கரவர்த்திகளின் புகழினுடைய பாழடைந்த சின்னமாய்க் காட்சியளித்தது அன்று. இடிந்துபோய், புல்லும் புதரும் படர்ந்து பழைய செங்கற் கூட்டத்திற்கிடையே சிதறிக் கிடந்த இந்திய சிற்பச் செல்வத்தின்மீது அன்றிரவு குளிர் நிலவு படிந்து கொண்டிருந்தது.

முன்பு கௌதம புத்தருடைய உபதேச மொழிகளைக் கேட்பதற்காக, பஞ்சவர்க்கீய பிக்ஷுக்கள் கூடும் ஸ்தூபியின் பாழைபடுத்து ஒரு சிறு குடிசையிருந்தது. அதில் எரிந்து கொண்டிருந்த ஒரு சிறு விளக்கின் மங்கிய ஒளிக்கெதிரில் உட்கார்ந்து கொண்டு ஒரு பெண்மணி,

அனன்யாச் சிந்தயந்தோமாம், யேஜனா: பர்யுபாஸதே............ என்று ஜபித்துக் கொண்டிருந்தாள்.

சட்டென்று ஜபம் தடைப்பட்டது. ஒரு பயந்த மனிதனுடைய உருவம் குடிசை வாசலில் நிற்பதை அந்த மங்கலான ஒளியில் அந்தப் பெண்மணி கண்ணுற்றாள். அவள் எழுந்து கதவைச் சாத்த முயன்றபோது அந்த மனிதன்,

"தாயே எனக்குப் புகலிடம்கொடு" என்று கெஞ்சினான்.

"நீ யார்?"

"நான் முகலாயன், சௌஸா யுத்தத்தில் சேர்ஷாவிடம் தோற்றுப்போய் உயிரைக் காப்பாற்றிக்கொள்ள ஓடி வந்திருக்கிறேன். இன்று இரவில் மேலே என்னால் பிரயாணம் செய்ய முடியாது."

"சேர்ஷாவிடமா தோற்றாய்?" என்று கேட்டுவிட்டு, அந்தப் பெண்மணி தன் உதட்டைக் கடித்துக்கொண்டாள்.

"ஆம் தாயே,"

"ஆனால் நீயும் அதேமாதிரி கொடியவன்தானே? அதே ரத்ததாகம் கொண்டவன்தானே நீ? அதே கொடுமையின் நிழல் தான் உன் முகத்திலும் படிந்திருக்கிறது. போ, என் குடிசையில் இடமில்லை. வேறு தேடிச்செல்."

"தொண்டை வறண்டு போகிறது. நண்பர்களும் போய்விட்டார்கள். குதிரையும் விழுந்து விட்டது. அலுப்புத் தாங்க முடியவில்லை." என்று கூறிக்கொண்டே அந்த மனிதன் தடாலென்று தரையில் உட்கார்ந்தான். அவன்தலை சுழன்றது. "இந்த ஆபத்து எங்கிருந்தோ வந்துவிட்டதே." என்று எண்ணினாள் அந்த ஸ்திரீ. அவள் தண்ணீர் கொடுத்தாள். "எல்லோரும் தயவுக்குத் தகுதியுள்ளவர்கள் அல்ல. என் தந்தையைக் கொன்ற கொடியவர்கள்!" என்று எண்ணும்போதே அவள் மனதில் வெறுப்புப் பொங்கிற்று.

அந்த முகலாயன் தாகம் தீர்ந்து கேட்டான், "தாயே அப்படியானால் நான் போகவா?"

அந்தப்பெண்மணியின் மனதில் யோசனை எழுந்தது—"நானோ பிராம்மணஸ்திரீ. விருந்தினரை உபசரிப்பது என்கடமை. ஆனால் ஆம், எல்லோரும் தயவுக்குப் பாத்திரமானவர்களாக மாட்டார்கள்...... ஆனாலும் நான் என் கடமையை நிறைவேற்றவேண்டும். அப்பொழுது?........."

முகலாயன் தன் வாளை ஊன்றிக்கொண்டு எழுந்து நின்றான்.

அதைப் பார்த்த மமதா, "நீயும் மற்றவர்களைப்போல் ஏமாற்றமாட்டாய் என்று யார்கண்டது?" என்று கேட்டாள் அவனிடம்.

"ஏமாற்றுவதா? அப்படியானால் வேண்டாம் தாயே! நான்போய் விடுகிறேன். தைமூர் வமிச வழியாய் வந்தவனா பெண்களை ஏமாற்றுவான்? இதுவும் விதியின் விளையாட்டுத்தான், போகிறேன்" என்றான் முகாலயன்.

மமதாவின் மனதில் எண்ணங்கள் எழுந்தன. "இங்கே இவன் பிடிப்பதற்குக் கோட்டை இல்லை. இந்தக் குடிசைதான் இருக்கிறது. இதிலிருந்து எதை வேணுமானாலும் எடுத்துக் கொள்ளட்டும். நான் கடமையைச் செய்தாக வேண்டும்" இவ்வாறு யோசித்துக் கொண்டே அவள் வெளியே வந்து, "உள்ளே போ, இளைப்பாறு. நீ யாரா யிருந்தாலும் சரி, நான்

உனக்கு அடைக்கலம் தருகிறேன். நான் பிராம்மணப் பெண். மற்றவர்கள் கடமை வழுவினாலும் நான் ஏன் கடமையில் தவற வேண்டும்?'' என்றாள் முகாலயனிடம். முகலாயன் சந்திரிகையில் அந்த மகிமை நிறைந்த முகத்தை ஒரு கணம் உற்றுப் பார்த்தான். அவன் மனதால் அவளுக்கு மரியாதை செலுத்தினான். மமதா இடிந்த சுவர்களுக்கிடையே சென்று விட்டாள். குடிசைக்குள் போய் அந்த முகலாயன் இளைப்பாறினான்.

அதிகாலையில் அனேக ஆயிரம் குதிரை வீரர்கள் அந்தப் பிராந்தியம் முழுவதையும் சுற்றிப் பார்ப்பதை இடிந்த சுவர்களி லிருந்தபடியே மமதா கவனித்தாள்.

குடிசைக்குள்ளிருந்து வெளியே வந்த முகலாய வீரன் ஒரு குதிரை வீரனிடம், ''மிர்ஸா, நான் இதோ இருக்கிறேன்.'' என்று கூப்பிட்டுச் சொன்னான்.

இதைக் கேட்டதும் அந்தக் குதிரை வீரர் களின் மகிழ்ச்சியின் ஆரவாரம் அந்தச் சுற்று வட்டாரத்தையே அதிரச் செய்தது. மமதா இன்னும் அதிகம் பயந்து போனாள்.

முகலாயன் சொன்னான்:

''அந்தப் பெண்மணி எங்கே? அவளைத் தேடு, மிர்ஸா'' இதைக்கேட்ட மமதா பக்கத்துக் காட்டில் ஒளிந்து கொண்டாள். பகல் முழுதும் வெளியே வரவே யில்லை. அந்திப் பொழுதில் அவர்கள் யாவரும் புறப்படத் தொடங்கியதும் அந்த முகலா யன் சொல்வது காதில் விழுந்தது: ''மிர்ஸா, அந்தப் பெண்மணிக்கு நான் எதுவும் கொடுக்க வில்லை. அவள் வீட்டைக் கட்டி விடு. ஆபத்துக் காலத்தில் நான் அடைக் கலம் புகுந்த இடம் இது. இந்த இடம் ஞாபகம் இருக்கட்டும்'' அவர்கள் எல் லோரும் அங்கிருந்து சென்று விட்டனர்.

* * *

சௌஸாவில் முகலாயருக்கும் பட் டாணிகளுக்கும் இடையே நடந்த சண்டை முடிந்து வெகுநாட்களாகி விட்டன. மமதா இப்பொழுது எழுபது வயதுக் கிழவி. அவள் அன்று தன் குடிசையில் படுத்திருந் தாள். குளிர்ச்சியான காலை வேளை. அவள் உடலை இருமல் உலுக்கி எடுத்துக் கொண்டிருந்தது.

மமதாவின் பக்கத்தில் அவளுக்குச் சேவை புரிவதற்காக வந்திருந்த இரண் டொரு பெண்கள் உட்கார்ந்தார்கள். அவர்கள் அந்தக் கிராமவாசிகள். மமதா வாழ்நாள் முழுதும் பிறருடைய சுகதுக்கங் களில் பங்கு எடுத்துக் கொண்டவளாத லால் அவர்கள் உதவ வந்திருந்தார்கள்.

மமதா தண்ணீர் குடிக்க விரும்பியதும் ஒரு ஸ்திரீ சங்கினால் அவள் வாயில் நீர் ஊற்றினாள். சட்டென்று ஒரு குதிரைவீரன் அந்தக் குடிசையின்முன் காட்சியளித்தான். அவன் தனக்குத்தானே சொல்லிக் கொண்டான்: ''இந்த இடத்தின் படம் தான் மிர்ஸா போட்டுக் கொடுத்திருக்க வேண்டும். அந்தக் கிழவி இறந்து போயிருக்கக்கூடும். எந்தக் குடிசையில் ஹுமாயூன் சக்ரவர்த்தி ஒருநாள் தங்கினார் என்று யாரிடம் கேட்டுத்தெரிந்து கொள் வது? அது நடந்து நாற்பத்தேழு வருஷங் களாகி விட்டனவே.''

மமதாவின் காதுகளில் இச் சொற்கள் விழுந்தன. பக்கத்திலிருந்த ஒருத்தியிடம் அந்த மனிதனை உள்ளே அழைக்கும்படி சொன்னாள்.

அந்த மனிதன் பக்கத்தில் வந்ததும் மமதா மெலிந்த குரலில் தயக்கத்துடன் சொன்னாள்: ''அவன் சாதாரண முகலாய வீரனா அல்லது ஹுமாயூன் சக்கரவர்த் தியா என்பதை நான் அறியேன். ஆனால் இந்தக் குடிசையில்தான் அவன் ஒரு நாள் தங்கியிருந்தான். அவன் அன்றே எனக்கு இங்கே பெரிய வீடு கட்டக் கட்டளை யிட்டி ருந்தான். இந்தக் குடிசையை யார் எப் பொழுது பிரித்து எறிய வருவார்களோ என்ற பயத்துடன் வாழ்நாள் முழுதையும் கடத்தினேன். கடவுள் என் வேண்டு கோளைக் கேட்டுக் கொண்டார். இன்று நான் போய் விடுவேன். இனி இங்கே வீடு கட்டினாலும் சரி, அரண்மனை எழுப்பி னாலும்சரி, நான் நிரந்தர சாந்தியைத் தேடிப் போகிறேன்.''

அந்த மனிதன் இதைக்கேட்டு வாய டைத்து நின்றான்.

கிழவியின் உயிர்ப்பறவை உடல் கூண்டிலிருந்து விடுபட்டுச் சென்று விட்டது.

அங்கே எட்டுக்கோணமுள்ள ஒரு பெரிய கட்டிடம் எழுப்பப்பட்டது.

அதில் செதுக்கப்பட்டிருந்ததாவது;—

ஏழேழு தேசங்களுக்கும் அரசனான ஹுமாயூன் இங்கு ஒருமுறை ஓய்வெடுத்து கொண்டார். அவருடைய மகன் அக்பர் அவர் ஞாபகார்த்தமாக வான்முகட்டைத் தொடும் இக்கட்டிடத்தை எழுப்பச் செய்தார்.''

அதில் மமதாவின் பெயரே இருக்கவில்லை!

(மொழிபெயர்ப்பு:—எஸ். கிருஷ்ணன்)

# அடிமைத் தளை

து. ராஜகோபால்

இயற்கையின் குழந்தை மானுஷி சுற்று முற்றும் பார்த்தாள். அவள் போர்த்திருந்த தோலாடை அவளது தோற்றத்திற்கு அருவருப்பை யளிக்கவில்லை. கொடியை நிகர்த்த அவளுடைய உடம்பிற்கு அதுவும் அழகையே அளித்தது. அள்ளிச் செருகப்பட்டிருந்த அளகத்தில் அன்றலர்ந்த பூங்கொத்துடன் ஒரு கிளையையே முறித்து வைத்துக் கொண்டிருந்ததும் அவளுடைய அழகை அதிகப்படுத்திக் காண்பித்தது. நவ நாகரிக யுவதிகளின் தலையலங்காரத்திற்கு அது எவ்விதத்திலும் தாழ்ந்திருக்கவில்லை. ஒரு வேளை அந்த ஆதி மனுஷியின் இயற்கை யலங்காரத்தைக் கற்பனைக் கண்ணால் கண்டுதான் தற்போது இவர்களும் தங்கள் கொண்டையை அலங்கரிக்கப் பூவோடு சேர்ந்த கொம்பையே நாடுகிறார்கள்போலும். அவள் கையில் நன்றாக வடிக்கப்படாத கல்லாயுதம் ஒன்று காணப்பட்டது. அதன் முனை கூர்மையாகவும் வசமாகப் பிடித்து எதிரியைத் தாக்க வாய்ப்பாகவும் அமைந்திருந்தது. அந்த ஆயுதம்கூட அவளிடம் எந்தவிதமான அவலட்சணத்தையும் உண்டாக்கிவிடவில்லை. இயற்கையின் மடியிலே வளர்ந்த அந்த மங்கையின் ஒவ்வொரு அங்கமும் யௌவனத்தின் புதுச் சோபையையும், கறைபடாத மாசற்ற சௌந்தரியத்தின் சோதியையும் வெளிப்படுத்திக்கொண்டிருந்தது. பக்கத்தில் ஓங்கி வளர்ந்து பெருங் கிளைகளை விட்டு நின்றிருந்த அசோக மரத்தின்மேல் சற்றே சாய்ந்துகொண்டு நின்ற அந்தக் காட்சியைக் கண்ட யாரும் அதை மறக்கமுடியாது. சில நிமிஷங்கள் யோசனையி லாழ்ந்திருந்து விட்டு ஏதோ நிச்சயித்துக்கொண்டவள் போல நதிக்கரையை நோக்கி நடந்தாள்.

அந்த வனத்தில் நாலுகாற் பிராணிகளுக்குக் குறைவில்லை; ஆனால் இரண்டுகாற் பிராணி அவள் ஒருத்திதான். கிடைத்ததை உண்டு களிப்புடன் காலந்தள்ளி வந்த அவள் மனம் தெளிந்த நீரோடை போன்று நிச்சலனமாக இருந்தது. எப்பொழுதுமே ஆனந்த வாரிதியில் ஆழ்ந்திருக்கும் அவளுடைய உள்ளம் அன்று என்றுமில்லாத உற்சாகத்துடன் இருந்தது. அவளுடைய நடையும் அதற்குத் தகுந்தாற்போல உல்லாசமாக மந்த கதியில் சென்றது.

தூரத்திலிருந்தே நதிக்கரையில் தன்னுடைய பார்வையைச் செலுத்தி ஆராய்ந்தாள். அவளுடைய விழிகள் சட்டென்று கரையின்மீது நின்று நீர் குடிக்கும் ஒரு உருவத்தின்மீது நின்று தடைப்பட்டன. அவளுடைய கை 'கல்வேலை'க் கெட்டியாகப் பிடித்தது. எதிரியைத் தாக்கும் முயற்சியில் அவள் ஒன்றும் அவசரப்படவில்லை. பாய்வதற்கு முன் பதுங்கும் புலியைப் போலச் சற்று நின்று நிதானமாகக் கவனித்தாள். அதைப் பார்க்கப் பார்க்க அவளுக்கு ஆச்சரியமே உண்டாயிற்று. அதுவரை அவள் அம்மாதிரி மிருகத்தைக் கண்டதில்லை. ஆகவே அவள் மிகவும் சாக்கிரதையடைந்தாள். அதற்குள் அந்த உருவம் எழுந்து நின்றது. என்ன ஆச்சரியம்! அவள் நினைத்தபடி அது ஒரு நாற்காற் பிராணியல்ல. தன்னைப்போல ஒரு இரண்டுகால் பிராணி. அதற்கு இரண்டு கால் உள்ளதை மட்டும் அவள் கவனித்தாள் என்பது மட்டுமல்ல; ஓரேபார்வையில் அது தன் இனத்தைச் சேர்ந்ததல்ல என்றும் கண்டு கொண்டாள். ஆம், அந்த உருவம், இரண்டுகால் பிராணியினத்தைச் சேர்ந்ததாயிருந்தாலும் அவளுக்கும் அதற்கும் வித்தியாசம் இருந்தது. அது அவள் அல்ல. அவன். ஆம். ஆதி மனிதன்.

அவனுடைய அகன்ற மார்பிலே ஒருவில் தொங்கியது. மூங்கிலை வளைத்துக் கொடி நாணால் கட்டப்பட்ட வில் அது. ஒருகணம் செய்வதின்னதென்று அறியாமல் திகைத்து நின்றாள் மானுஷி. திகைப்பெல்லாம் ஒரு நிமிஷம்தான். அதற்குள் அவள்மனதில் ஆயிரம் எண்ணங்கள் அலைபாய்ந்தன. தன்னிச்சையாக வாழ்ந்த காட்டில் தனக்குப் போட்டியாக வந்த இரண்டுகால் பிராணியின் மீது அவளுக்கு பகைமை தோன்றியதில் ஆச்சரியமில்லை. அடுத்தகணம் அவனை எதிர்த்துப் பாய்ந்தாள். திடீரென்று தாக்கப்பட்ட 'மனிதன்' திகைத்து நின்று விட்டான். விஷயத்தைப் புரிந்து கொள்ளுவதற்குள் அவளுடைய கல்வேல் அவனுடைய மண்டையைப் பலமாகத் தாக்கியது. அடியுண்ட சிங்கம் போல் வெகுண்டெழுந்தான் அவன். கட்டிப் புரண்டனர் இருவரும். உடம்பெல்லாம் காயம். அவைகளிலிருந்து வெளிபட்டரத்தம் நதிக்கரை மீது படிந்தி

ருந்த வெண்மணலில் சிந்தித் தோய்ந்து கிடந்தது. வெற்றி தோல்வி யென்பதின்றி வெகுநேரம் வரை யுத்தம் நடந்தது. வெயில் ஏறிக்கொண்டே போயிற்று. சூரியன் உச்சி மீதிருந்து சற்றுநேரம் இந்த வேடிக்கையைப் பார்த்தான். நின்று பார்க்க நேரமின்றி மேற்றிசை நோக்கி முன்னேறினான். அவர்களும் களைத்து விட்டனர். வெயிலின் தாபம் தாங்காமல் தரையில் உருண்டனர்.

அவர்களுடைய பரிதாப நிலையைக் கண்டு மனமிரங்கி, சூரியன் மலைவாயில் தயங்கி நிற்கிறான். அவனுடைய கண்கள் கலங்கி ரத்தச்சிகப்பாக மாறி அந்தக் காட்டுப் பிரதேசத்திலும் சலசலவென்று ஓடிக்கொண்டிருக்கும் தெள்ளிய நீரோடையின் மீதும் அதன் மணல் தடத்தின் மீதும் தன் செம்மையைப் பிரதிபலித்துக் கொண்டிருந்தன. மாலையின் மந்த மாருதம் அவர்களுக்கு உயிர்ப்பூட்ட முயன்றது. மானுஷி இளங்காற்றின் இன்னிசையிலே துயிலெழப்பெற்றாள். கண்ணைத்திறந்து சுற்றும் முற்றும் பார்த்தாள் மானுஷி. 'மனிதன்' பக்கத்தில் அசைவற்றுக் கிடப்பதைக் கண்டாள். உச்சி முதல் உள்ளங்கால் வரை ஊடுருவிப் பார்த்தாள். அவள் உதடு அசைந்தது. உள்ளம் குமுறியது. அவன் உடலில் காணப்பட்ட ஆண்மை அவளை மயக்கியது. அவள் அவனைப் பார்த்துக் கொண்டு அசைவற்று உட்கார்ந்திருந்தாள்.

சிறிது நேரத்தில் அவனும் மூர்ச்சை தெளிந்தான். எழுந்து சுற்று முற்றும் பார்த்தான். அவளையும் பார்த்தான். வெகு நேரம் வரை இருவரும் கண்கொட்டாமல் ஒருவரை யொருவர் பார்த்துக் கொண்டு நின்றனர். அவன் எழுந்து மேற்கு நோக்கி நடந்தான். அவன் போவதைக் கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தாள் அவள். அவளுடைய மார்பு ஒரு தடவை விம்மித் தாழ்ந்தது. அவளும் தன்னிருப்பிடத்தை நாடிச் சென்றாள்.

மறுநாள் காலை மானுஷிக்கு முதல் நாள் நடந்ததெல்லாம் கனவெனத் தோன்றியது. ஆனால் அவளுடைய உடலில் காணப்பட்ட காயங்கள், 'அது கனவல்ல; நனவுதான்' என்று தெரிவித்துக் கொண்டிருந்தன. தலைக்குமேல் கையை உயர்த்திச் சோம்பல் முறித்தாள். அவளுடைய மனக்கண் நேற்றுக் கண்ட அந்த உருவத்தைத் தன் முன் கொண்டுவர முயற்சித்துக் கொண்டிருந்தது. அவளும் அதற்கு உதவி செய்பவள் போலத் தன்புறக்கண்களை மூடிக்கொண்டு ஒரு நிமிஷம் மௌனமாக நின்றாள்.

அவள் உதடுகள் பூத்தன. புன்னகையின் புத்தொளியிலே அவளுடைய மனக்கண் பெற்ற வெற்றியின் சின்னம் தெள்ளெனத் தெரிந்தது. ஆம், அவள் அந்த உருவத்தைப் பிடித்து விட்டாள். அவளுடைய உள்ளம் களி கொண்டது. அந்த உருவத்தின் அகன்ற மார்பும், திரண்ட தோள்களும் அவளை வசீகரித்து விட்டன. அவைகளை மறுமுறையும் பார்க்கமுடியுமாவென்று ஏங்கியது உள்ளம். நேற்றுக் காணப் பெற்ற பகைமை யுணர்ச்சியின் சோடே தெரியாமல் மறைந்து விட்டது. தனிமையிலே தனக்குக் கிடைத்த தோழனைத் துன்புறுத்தியதை நினைக்க நினைக்க அவளுக்கு வெட்கம் பிடுங்கித் தின்றது. இனியும் ஒரு முறை அவனைச் சந்தித்தால் முன் செய்த மாதிரி யெல்லாம் செய்யக் கூடாதென்று தீர்மானித்துக்கொண்டு நதிக் கரையை நோக்கி நடந்தாள்.

அவனும் நதிக்கரையை நோக்கித்தான் வந்து கொண்டிருந்தான். மதயானையின் நடையையும் தோற்கடிக்கும் அவனது நடையழகிலே மயங்கி நின்றாள் அவள். அவன் நின்றான். பேசவில்லை. உதடுகள் மட்டும் அசைந்தன. வார்த்தை வெளி வரவில்லை. கண்கள் மட்டும் ஒன்றையொன்று கவ்வி விழுங்கிவிட முயற்சித்தன. அவன் ஓரடி நடந்து வந்து அவள் கரத்தைப் பற்றினான். அவள் மறுக்கவில்லை. அவன் துணிவடைந்தான். மறு நிமிஷம் அவளை இழுத்துத் தன் அகன்ற மார்போடு அணைத்துக் கொண்டான்.

அந்த ஆனந்த நிலையில் எவ்வளவு நேரம் இருந்தார்களோ தெரியாது. மேலே உயர்ந்து உயர்ந்து பஞ்சமத்தை எட்டிப் பிடிக்கப் போகும் இன்னிசையிலே ஏற்பட்ட அபஸ்வரம்போலே, அவர்களுடைய இன்பக்கனவைத் தகர்த்தெறிந்தது அந்தப் பயங்கர சப்தம். சட்டென்று அவனுடைய கை கல்வேலைப் பற்றியது. தூரத்தில் இவர்களைப் பார்த்து உருமிக்கொண்டு நின்றது ஒரு புலி. அவளுடைய அணைப்பிலிருந்து விடுபட்டுப் புறப்பட்டான். அவளும் புறப்பட்டாள்.

“இல்லை. நீ வரவேண்டாம்” என்றான் அவன். அவனுடைய குரலிலே அதிகாரம் கலந்த அன்பு கனிந்து நின்றது.

“ஏன், நானும் வருகிறேனே”

“இல்லை. வேண்டாம். ஏன்? என்னுடைய சக்தியில் உனக்கு நம்பிக்கையில்லையா?”

அவள் தயங்கினுள். அவனுடைய சக்தியில் நம்பிக்கையுண்டு என்பதற்கடையாளமாகத் தலையையசைத்தாள் அந்தச் சக்திஸ்வரூபிணி. இருந்தாலும் விடவில்லை. "நான் தனியாக என்னசெய்வது?" என்ருள்.

"ஏன்? என்விளையாட்டை, கைத்திறமையைப் பார்த்துக் கொண்டிரேன். நான் உன்னைக் காப்பாற்றுவேன்."

"என்னைக் காப்பாற்றுவதா? சீ! நான் இதுவரை என்னைக் காப்பாற்றிக் கொள்ளவில்லையா? இப்பொழுது மட்டும்.........?"

"அப்படியல்ல. நீ உன்னைக்காத்துக் கொள்ள முடியாதென்று நான் சொல்லவில்லை' ஆனுல்........."

"ஆனுல்.........?"

"இல்லை. நீ சுகுமாரி. உன் இளந்தளிர் மேனி தாங்காது."

அவளுடைய முகம் சிவந்தது. கோபத்தால்அல்ல, நாணத்தால். இதுவரைகவிழாத அவள் முகம் கவிழ்ந்தது. அவள்உடலில் பொங்கித் ததும்பிய ஊக்கம் பலஹீனமாகியது. அந்தப் பலஹீனத்திலும் அவள் ஆனந்தத்தையே கண்டாள். அவளுடைய ஆண்மை அந்த முகஸ்துதியிலே பொடிப் பொடியாகிவிட்டது. அவனுடைய புகழ்ச்சியிலே அவள் மயங்கினுள். அவளுடைய நெஞ்சம் குழைந்தது; ஆண்மை அகன்றது.

பயங்கரமான யுத்தம் மூண்டது. கடைசியில் வெற்றி இரண்டு கால் மிருகத்திற்குத்தான். நாலுகால் மிருகம் வயிறுகிழிந்து மல்லாந்து கிடந்தது. அவன் அவளை நோக்கி வெற்றிப் பெருமிதத்துடன் வந்தான். அவனுடைய வெற்றி அவளுடைய உதட்டில் புன்னகையாகப் பூத்தது. அந்தப் புன்னகையே அகற்ற முடியாத அடிமைத் தளையை பூட்டியது.

அன்றுமுதல் அவளைக்காக்கும் பொறுப்பு அவனுடைய தாகியது. மானுஷி 'மனிதனு'க்கு எழுதிக்கொடுத்த முறிச்சீட்டு முறியாமல் வழிவழியாகத் தன் அதிகாரத்தை நிலைநாட்டி வருகிறது.


ஆயுர்வேத வித்வான் 'B.V. பண்டிட்' அவர்களின்
சத்வைத்யசாலை. நஞ்சன்கூடு.

"நஞ்சன்கூடு பல்பொடி"
I.D.L நெ 61, மெடிகேட்ட் [பல் உபாதைகளுக்கு]

குழந்தைகளுக்கு
காஸ்மஸ் — கஸ்தூரி மாத்திரை
கர்ஜன் — கோரோஜனை மாத்திரை
பாலக்ஸ் — பேதியாக மாத்திரை

ஜ்வரேக் [எவ்வித ஜ்வரங்களுக்கும்]
ஜீர்ச்சிப் [அஜீர்ண பித்த சமனி]
கூலெக்ஸ் [உஷ்ண சமன ஸ்நான தைலம்]

கவனிப்பு:- மாதர்களுடைய சூதக, கெர்ப்பாசய உபாதைகளுக்கு விபரம் எழுதி சிகிச்சை பெறலாம்

ஸான்டலக்ஸ் — நறுமண சரும ரக்ஷிணி முகப்பரு, புண், சொறி குணமடைய.
காஷ்மீர்-குஸும் — கூந்தல் செழிப்புக்கு நீங்களே தைலம் செய்ய உதவுகிறது.

மைசூர் "பிரேமலீலா" உயர்தர ஊதுபத்திகள்.
'அகர் ஸ்பெஷல், ஜவாது, ஜெயலக்ஷ்மி'

யுனைடெட் கன்ஸர்ன். 54, பந்தர் தெரு, மதராஸ்.

# தெம்பு

**வை. சுப்ரமண்யன்**

ஜோஸியத்திலே எனக்கு நம்பிக்கை விழாததற்காக என் நண்பர்கள் சிலர் எனக்காகக் கவலைப்பட்டிருக்கின்றனர். நம்பிக்கையைப் புகட்டுவதற்கு என்ன வெல்லாமோ பிரயத்தனங்கள் செய்து பார்த்தனர்.

ஜோஸியத்தில் எனக்கு நம்பிக்கை விழும்படி செய்வதற்காக என் நண்பன், எங்கள் வழியே போய்க்கொண்டிருக்கையில் தென்பட்ட ஒரு பஞ்ச பக்ஷி சாஸ்திரக்காரனிடம் ஒரு அரையணாவைக் கொடுத்து, என் பெயரைச் சொல்லி ஜோஸியம் பார்க்கச் சொன்னான். மனைவி மக்களுடன் நல்ல தசையில் காலம் போய்க் கொண்டிருக்க வேண்டும், அந்தச் சமயம் அந்த ஜோஸியக் குறிப்பின்படி. ஆனால் எனக்குக் கல்யாணத்திற்கு ஜாதகங்கள் இன்னும் வந்து கொண்டிருக்கின்றன; கல்யாணம் நடந்தபாடில்லை எனக்கு.

பக்ஷி சாஸ்திரமும் ஜோஸியமும் மனிதனின் வாழ்க்கையுடன் நெருங்கிய ஒட்டுறவு கொண்ட விஷயங்கள் என்பதை நினைக்கும்போதே எனக்குச் சிரிப்புத்தான் வரும். ஜோஸியம் மனிதவாழ்க்கையைத்திட்டமாக எடுத்துக் கூறிவிடும் என்ற நம்பிக்கையிலே வாழ்க்கையை நடத்துகின்றனர் பலர்.

எனக்குத் தெரிந்து பஞ்சுவய்யரின் குடும்பம் பரம்பரையாகப் பணக்காரக் குடும்பமாக விருந்தது. அவருடைய ஒரே பிள்ளை கோபாலனும் அவன் மனைவியும் அவர் வீட்டிலேயே இருந்தனர். கலாசாலைப் படிப்பிற்குப் பிறகு கோபாலனுக்கு வீட்டுடன் இருந்து காலத்தைக் கடத்துவதிலே தனியின்பம் ஏற்பட்டது போலும். சுகமான வாழ்விற்கு ஆதாரம் பணம். பணம் நிறைய இருந்தது. எனவே வீட்டோடு இருந்து கொண்டு சுமுகமாகக் காலம் கழிக்க எண்ணியதில் அதிசயமில்லை.

கோபாலனின் வாழ்க்கை முறை விசித்திரமாய் அமைந்துவிட்டது. அவனுக்கு ஒரு தனி உலகம் நிர்மாணித்துக் கொண்டான் அவன் வீட்டிற்குள்ளேயே. வெளியுலகில் நடப்பவைகளைக் குறித்துக் கவலைப்படுவதில்லை அவன். அவன் மனம் வெளியுலகைப் பற்றி நினைத்ததே இல்லை. தன் அறைக்குள்ளே தினசரி தான் செய்த அலுவல்களை யந்திரம் போன்று செய்து கொண்டு பொழுதைக் கடத்தி வந்தான். அவனுக்கு நண்பர்களே கிடையாது. அவன் வாசித்து வந்த புத்தகங்களும், அந்த அறைக் கோட்டத்தில் அவன் தொட்டுப் பழகிய மற்றப் பொருள்களுமே அவனுக்கு உற்ற நண்பர்கள். அவன் நினைவில் அழியாதஇடம் பெற்றவை அந்தப் பொருள்கள்தாம். மனைவியின் தூண்டுகோல்கள்கூட அவன் இயல்பை மாறவிடவில்லை. அவன் மனைவி அழகாயிருந்தாள். அவளுடைய அழகுக்கும் இளமைக்கும் மயங்கித்தான் அவன் கல்யாணத்திற்குப் பிறகு தன் வாழ்க்கையை வெளி உலகத்துடன் தொடர்பு கொள்ளாத வாழ்க்கையாக ஆரம்பித்தான். சுற்றிச் சுற்றித் தன் மனைவியை வலம் வந்து, அவளுடைய பேச்சுக்களில்—கேளிக்கைகளில் மனதைப் பறிகொடுத்து வெளி உலகை மறந்தான்—வெளி உலகுடன் இன்றைக்குத் தன்னை அறிமுகப் படுத்திக்கொண்டு தொடர்பு கொள்வது சாத்திய மில்லாத விஷயமாக இருந்தது அவனுக்கு.

அந்த ஆசைகள் இப்போது போய்விட்டன. அவன் அதிகம் வாய்திறந்து பேசுவது கிடையாது யாருடனும். பிரமைபிடித்தவன் போல அறைக்குள் உட்கார்ந்து கிடந்தான். அவனுக்கு உடம்பு சரியில்லையென்ற அபிப்ராயம் எழுந்தது அவன் தாயார் தகப்பனாரிடையே. என்ன உடம்பு என்று தெளிவாக அவர்களுக்கே தெரியவில்லை. ஸ்தூல சரீரத்திலே மாறுதல் எதுவும் கிடையாது. யாருடனும் பேசாமல் அறைக்குள் சும்மா அடைந்து கிடப்பதைக் கண்டு அவனுக்கு ஒருவேளை பைத்தியமோ—சித்தப்பிரமையோ—வென்ற எண்ணம் கொண்டனர். உடம்பு சரியில்லை என்ற முடிவிற்கு வந்தனர் கடைசியில்.

பஞ்சுவய்யருக்கு ஜோஸியம் அளவற்ற நம்பிக்கையை அளித்த விஷயம், கவலை அவர் மனதை வாட்டிக் கொண்டிருந்தது. பையனுக்குச் சித்தப்பிரமையென்ற வதந்தி கிளம்பி இரண்டு மாதத்துக்கு மேலாகி விட்டது. குணமடையும் மார்க்கத்தைக் காணவில்லை யெனவே அவருடைய எண்ணங்கள் சிறிது பீதி அளிக்கும் வகையில் தான் தோன்றின. அவர் மனைவி சீதாவுக்

# இந்தியன் பாங்க் லிமிடெட்

**இந்தியன் பாங்க் பில்டிங்ஸ்**
**நார்த் பீச் ரோட், மதராஸ்.**

●

மதராஸ் ஆபீஸ்கள்:
எஸ்பிளனேட், மவுண்ட் ரோடு, திருவல்லிக்கேணி, தியாகராயநகர், மயிலாப்பூர், புரசைவாக்கம், எழும்பூர்.

●

தென் இந்தியாவில் எல்லா முக்கியமான இடங்களிலும் பம்பாயிலும் கிளை ஆபீஸ்கள் உள்ளன

●

| | | |
|---|---|---|
| வழங்கி வாக்களிக்கப்பட்ட முலதனம் | - | ரூ. 71,10,900 |
| செலுத்தப்பட்ட முலதனம் | | ரூ. 51,67,608 |
| ரிஸர்வ் நிதி | - - | ரூ. 61,50,000 |

டிபாஸிட் ரூ. 17 கோடிக்குமேல்

●

எல்லாவித பாங்கு அலுவல்களும் கவனிக்கப்படும்.

**N. கோபால அய்யர்.**
செக்ரெடரி.


கும் மனதில் இருந்த பாரம் சொல்ல இயலாது.

கோபாலனுடைய நிலைமை மோசமாகிக் கொண்டு வந்தது. தெம்பு கொண்டிருந்த ஸ்தூல சரீரமும் மெலிந்து காணப்பட்டது. படுக்கையில் கிடக்கும் நிலை ஏற்பட்டு விட்டது. வைத்தியம் முறைப்படி நடந்ததே தவிர வியாதி என்னவென்றே பிடிபட வில்லை. வைத்தியருக்கும் தெரியாத வியாதியைப்பற்றி எப்படித் தீர்மானிக்க முடியும்? கோபாலனுடைய வியாதியைப்பற்றி அவனையே கேட்டபோதும் அவன் தனக்கு ஒன்று மில்லையென்று சொன்னானே தவிர அவனால் தன் மன உணர்ச்சிகளை எடுத்துக் கூற இயலவில்லை. அவனுடைய மன உணர்வு—வியாதி என்னவென்று தெரிய வில்லை.

பஞ்சுவய்யருக்கு ஒரே பிள்ளை அவன். கல்யாணத்தின்போது ஜாதகத்தைப் பார்த்த ஜோஸியர், இந்த "ஜாதகனுக்கு வாய்க்கப் போகும் பெண்ணால் ஏற்படும் அதிர்ஷ்டம் சொல்லி முடியாது. இருபத்து எட்டாவது வயதிலே இந்த ஜாதகன் அஷ்ட ஐசுவரியத்துடன் சுகமாயிருக்கப் போகிறான்-ஒரு அதிசயம் நடக்கப் போகிறது அப்போது—"என்று சொன்னார். இப்போது கிட்டத்தட்ட அதிசயம்தான் நடந்துகொண்டிருந்தது. அவனுக்கு வயது 28-தான். இப்போது விசித்திரமான வியாதியால் பீடிக்கப்பட்டு வெளி யுலகத் தொடர்பை யிழந்து தன் சூழ் நிலையிலே ஒரு தனி மகத்வத்தை—அவனுக்கு மகத்வமாகப்பட்டது—சிருஷ்டித்துக் கொண்டிருந்தான். படுத்த படுக்கையாகிவிட்ட அவன் நிலைக்காக இப்போது உருகுகின்றனர் பஞ்சுவய்யரும் சீதாவும்.

மௌன நிலையில் படுக்கையில் கிடந்த கோபாலனின் நிலைமை அவன் மனைவியின் மனதில் சண்டமாருதத்தைக் கிளப்பிவிட்டது. அவன் படுக்கை யருகில் உட்கார்ந்து கொண்டு கண்ணீரும் கம்பலையுமாய் அவனிடம் ஏதாவது பேச்சுக் கொடுத்துக் கொண்டே யிருந்தாள். அவன் வாயினின்றும் பத்து வார்த்தைக்கு ஒரு வார்த்தை வெளிவருவதே சிரமமாயிருந்தது. சந்தோஷமான வாழ்க்கையில், உலக அனுபவங்களிலும் அலுவல்களிலும் ஈடுபடாது தன்னுடனே உல்லாசமாயிருந்த அவன் மனோபாவத்தை வியந்தாள். அது அந்தக் காலம். அவனுடைய தற்போதைய நிலைமைக்கு முற்றும் தான்தான் காரணம் என்று தன்னை நொந்துகொண்டாள். அவன் உடம்பு

தேறுமா என்ற சிந்தனையில் ஈடுபட்டுக் கிடந்தாள்.

வைத்தியர் வருவதும் போவதும் வழக்க மாக ஏற்பட்டுவிட்டது ஒருமாத காலமாய். பணம் நன்ருகச் செலவழித்தும் கோபாலன் நிலையில் அபிவிருத்திக்கு வழியைக் காண வில்லை.

பஞ்சுவய்யர் தினம் தினம் அவன் படுத் திருந்த அறைக்கு வெளியே மேலும் கீழும் பார்த்துக்கொண்டு உலாவிக்கொண்டிருந் தார். என்ன செய்வதென்று தெரியவில்லை அவருக்கு அந்த நிலையில். அவன் நிலைமை யில் அபிவிருத்திக்கான வழியைக் கண்டு பிடிக்க அவர் மனம் அடித்துக்கொண்டிருந் தது. வைத்தியத்தில் பலனில்லை; மாந்திரீ கத்தில் பலனில்லை; பலனளிக்கும் வேறு வழியும் தெரியவில்லை.

அந்த வருஷம் பூராவும் அதே நிலையில் இருந்தது இந்த விசித்திர நிலைமை. மறு வருஷ ஆரம்பத்தில்தான் சிறிது பயத்தை யளித்தது கோபாலனின் நிலைமை. சதா காலமும் ஏதோ முணுமுணுத்துக் கொண் டும் வேதனைப்பட்டுக்கொண்டும் கிடந்தான். தினம் இரண்டு தடவை டாக்டர் வந்து போய்க் கொண்டிருந்தார். அவருடைய திட்டமான எச்சரிக்கை வேறு அவர்களைப் பயத்தில் ஆழ்த்தியது. இன்னும் ஒரு மாதம்வரை ஜாக்கிரதையுடனிருக்கவேண் டும் என்ருர். இன்னவியாதி என்று பிடி படாத அவருக்கு ஜாக்கிரதையாயிருக்க வேண்டும் என்று எச்சரிக்க மட்டும் எப் படித் தெரிந்தது? ஒருவருக்கும் நம்பிக்கை விழவில்லை, "ஏதோ அவர் பாட்டில் சொல்கிருர். வியாதி என்னவென்று தெரிய வில்லை; ஏதாவது ஏவல் வைத்திருப்பார் களோ ஒருவேளை" என்று எண்ணினர் பஞ்சுவையரும் சீதாவும்.

துயரம் எல்லைக்கருகே வந்துவிட்டது அவர்களுக்கு. அவர்களுடைய அந்தரங்கத் தில் ஒரு பெரிய நஷ்டம்—சம்பவம் நடந்து விடப்போகிறது என்று ஏதோ ஒன்று சொல்லிக் கொண்டிருந்தது.

பஞ்சுவய்யருக்கு நம்பிக்கையளித்து வந்த விஷயம் ஒன்றே ஒன்றுதான். கோபா லனின் ஜாதகத்தைக் கொண்டுபோய் நன் ருகப் பார்த்துக்கொண்டு வந்து விடவேண் டும் என்பதுதான் அது. பக்கத்து ஊரில் பிரபலமாயிருந்த ஒரு ஜோஸ்யரிடம் அவன் ஜாதகத்தைக் கொண்டுபோய்க் காட்ட வேண்டும் என்று வெகு நாட்களாகவே—அவனுக்கு வியாதி நீடிக்குமுன்பே—எண் ணியிருந்தார்.

இப்போது அந்தக் காரியத்தை நிறை வேற்றுவதில் முற்பட்டிருந்தது அவர்மனம். கொஞ்சம் நாட்களாக அதிகமாகிக் கொண்டிருந்தது கோபாலன் உடம்பு. பஞ்சுவய்யரின் பரபரப்பும் சீதாவின் உள்ளக்கிளர்ச்சியும் எல்லாவற்றையும்விட கோபாலனின் இளம் மனைவியின் மன உணர்ச்சிகளும் அவர்களை இந்த உலகத்தி னின்றும் வேறு இடத்திற்கு இழுத்துச் செல்வன போன்றிருந்தன அவரவருக்கு.

அன்று கோபாலன் திடீரென்று "கமலம் இங்கே வாயேன், சில விஷயம் பேச வேண்டும்" என்றதும் எல்லோருக்கும் அதிசயம் உண்டாயிற்று, இதுவரை இவ் வளவு வார்த்தைச் சேர்க்கையுடன் சுதா வாகப் பேசியவனில்லை கோபாலன். எனவே, தெம்பையிழந்த பலஹீனக் குர லில் அந்த நிலையில் மனைவியைக் கூப்பிடவே திகைப்படைந்ததில் விசேஷமில்லை.

அவனுடைய குரல் பலருக்கும் பலவித உணர்ச்சிகளை உண்டு பண்ணின. நம்பிக் கையைத் தளர்த்திக்கொள்ளும் நிலையி லிருந்த சீதாவுக்கு இந்தக் குரல்—வார்த்தை கள்—அளவிலாத ஆனந்தத்தை உண்டு பண்ணியது. பெற்ற வயிறு ஆகையால் பால்வார்க்கப்பட்ட உணர்வு உண்டானது அவளுக்கு. பஞ்சுவய்யரின் மனதிலும் மகிழ்ச்சியைத்தான் உண்டு பண்ணியது அவன் குரல். ஜாதகத்தைப் பார்த்து விட்டுப் பரிகாரத்துக்காகக் காத்துக்கிடந்த அவர் நிலையிலே மாறுதல்.

கோபாலனைச் சுற்றி ஆர்வத்துடன் நின்றிருந்தனர் மூவரும். மிரள மிரள விழித்தான் அவன். கண்களை அகல விரித் துப் பார்க்கக்கூடத் தெம்பில்லை அவனுக்கு. அசைவிலேகூடச் சக்தி குறைந்து கிடந்தது.

மிகவும் சிரமப் பட்டுக்கொண்டு திணறிக் கொண்டே சொன்னுன் அவன்: "எனக்கு ஜாஸ்தி பேச முடியவில்லை; சிரமமாயிருக் கிறது. உடம்பில் பலம் குறைந்துகொண்டு வருவது எனக்குத் தெரிகிறது. இத்தனை நாளும் ஏதோ சிந்தனைதான் என் மனதில். இரண்டு தினங்களாகின்றன. என் மனதில் இருந்ததுகூட மறந்துவிட்டது. இப்போது பலஹீனமாயிருப்பதையும் வெகுநாள் உயி ரோடிருக்க முடியாதென்பதையும் உணர முடிகிறது" என்று சொன்னுன்.

சித்தப்பிரமை என்ற எண்ணம் எல்லோ ருக்கும் ஏற்பட்டதற்கு அவனே காரணம் கூறிவிட்டான். அவன் மனதில் இருந்த ஓயாத சிந்தனையை அது மறந்தபின் தான் அவனுல் உணர முடிந்தது. தெம்பிழந்த

பின்பே அதையும் அறிய முடிந்தது. அவனுடைய அந்தமோனநிலைக்கு நாம்எதை வேண்டுமானாலும்—அதிகப் படிப்பு காரணமாக என்றும், ஏவல் வைத்துவிட்ட காரணம் என்றும்—சொல்லலாம். ஆனால் உண்மையான காரணம் தெரியாது. மனோதத்துவ ஆராய்ச்சியாளரின் திறமையைப் பரிசோதிக்க அந்தச் சந்தர்ப்பம் பயன் பட்டிருக்கும்.

முதல் குரல் அவர்கள் எல்லோரையும் பரவசப்படுத்தியதே யொழிய பின்னால் அவன் சொன்ன விஷயம்-திக்குமுக்காடி உருவகப்படுத்திச் சொன்ன அந்த விஷயம்-அவர்களைத் துயரக்கடலின்கோடிக்கு இழுத்துச்சென்றது. இடிவிழுந்த மாதிரியிருந்தது அவனுடைய ஒவ்வொரு சொல்லும்.

''அப்படிச் சொல்லாதேடா' குழந்தை. உனக்கு ஒரு குறைவும் வராது. இத்தனை நாளைக்கப்புறம் கணகணன்னு இருந்த ஒன் பேச்சே எனக்குப் பாலைவார்த்தது. உனக்கு உடம்பு தேவலையாயிடும், மனசை அலட்டிக்காதே'' என்று தேற்றினாள் தாயார்.

ஒவ்வொருவரும் ஒவ்வொரு நிலைப்பட்டு விட்டனர். அதன்பிறகு அவர்களுக்கு அன்று டாக்டரின் எச்சரிக்கை இன்னும் கவலையைக் கொண்டு வந்து சேர்த்தது. டாக்டர் சொன்னார்: ''இரண்டு நாட்களாக நிலை மோசமாகிக் கொண்டிருக்கிறது. அதிக நாட்களுக்கு நம்பிக்கைவைக்க இயலாது'' என்று கூறினார் உணர்ச்சியில்லாமலே. அவருக்கு எங்கிருந்து வரும் உணர்ச்சி இந்தச்செய்தியைக்கூறும்போது? ஓயாத சிந்தனைகளுக்கும் மனோவேகங்களுக்கும் பிறகு—அவை மறந்த பிறகு—தெளிவடைந்த மனதுடன் கோபாலன் பேசினான்; ஆனால், அவனுக்கு அந்த இரண்டு நாளாகத்தான் அதிகமான உடம்பு என்கிறார் அவர்.

பஞ்சுவய்யரின் நிலை பரபரப்பையடைந்தது. அந்தப்பிரபல ஜோஸியரை வரவழைத்தார். ஜோஸியரின் கைகளிலே தம் பிள்ளையின் உயிர் இருக்கிறதாக ஒரு நம்பிக்கை தான் அவருக்கு. அவர் வந்தார். சாங்கோபாங்கமான விபரங்களைக் கேட்டுக் கொண்டபின்—அந்த ஜோஸியரின் நிலையிலே ஒரு அரைமணிநேரம் மௌனம் குடிகொண்டிருந்தது. வெகுநேரத்திற்குப் பின்—எத்தனையோ கணக்குகளுக்கும் சாஸ்திர ஆராய்ச்சிகளுக்கும் தியானத்திற்கும் பின், அவர் தம்முடிவைச் சொல்லிவிட்டார். ஜாதக ரிதியாக அவனுக்கு நீண்ட ஆயுசு கிடையாது; சில தினங்கள் தானாம்.

பஞ்சுவையருக்கு மீண்டும் பேரிடி? பஞ்சுவையருக்கு மட்டுமில்லை, அவர் மனைவிக்கும் இதைக் கவனித்துக்கொண்டிருந்த கோபாலன் மனைவிக்கும்கூடப்பேரிடிதான். என்ன செய்வதென்று தெரியவில்லை அவர்களுக்கு.

டாக்டரும் அன்று மாலை மீண்டும் சொல்லிவிட்டார், என்னை மன்னிக்கவேண்டும். இன்றிரவு தாண்ட வேண்டும்'' என்று சொல்லிவிட்டார்.

கோபாலனுடைய குரல் மீண்டும் கேட்டது. மூவரும் அவன் அருகே ஓடினர். மாலை ஏழுமணி யிருக்கும். டாக்டரும் ஜோஸியரும் குறிப்பிட்ட நேரம் நெருங்கிக் கொண்டிருந்தது.

''எனக்கு என்னவோ பயமாயிருக்கிறது. மூச்சுவிட முடியவில்லை: இருதயத்தில் பெலன் கிடையாது. நான் நம்பிக்கையை யிழந்து விட்டேன்'' என்றான் கோபாலன் அவன் மனைவியைப் பார்த்துக்கொண்டே.

அவன்மீது விழுந்து அழுதாள் அவள். பஞ்சுவய்யரும் சீதாவும் கோவென்று கதறினர். அவர்கள் உள்ளத்திலும் தெம்பு இல்லாது போய்விட்டதோ? நம்பிக்கை ஊசலாடிக் கொண்டிருந்தது அவர்களுக்கு.

''கோபாலா, பேசாமலிரு. நீ அலட்டிக் கொண்டால்தான் உடம்பு அதிகமாகும். டாக்டர் தேவலையாகிவிடும் என்று சொல்லிவிட்டார். இன்னிக்கு ஜோஸியம்கூடப் பார்த்தேன். இன்னும் மூன்று மாதங்களில் உனக்கு இன்ஜினீர் உத்தியோகம்

## சேலத்தில் காவேரி ஏஜண்ட்ஸ்

**மணி & கோ**
நியூஸ் ஏஜண்ட்ஸ்
தேரடி
செவ்வாய்பேட்டை

ஆகிவிடும் என்றார் ஜோஸியர். நீ மனதை கஷ்டப்படுத்திக் கொள்ளாதே' என்று சொல்லி வைத்தனர். சப்பைக் கட்டு வைத்துக் கட்டித்தான் ஆகவேண்டியிருந்தது ஜோஸியத்தின் மகிமைக்கு.

அவன் புத்துணர்ச்சி பெற்றவன்போல் சிறிது புரண்டுகொண்டே அவர்களைச் சிரமத்துடன் நிமிர்ந்து பார்த்தான்.

"அப்படியா? நிஜமாகவா? நான் உயிர் பெற்று விடுவேனா? ஜோஸியர் சொன்னாரா? டாக்டர் சொன்னாரா அப்படி?" என்று திகைப்புடன் கேட்டான். அவன் கண்கள் அகல விரிந்திருந்தன. அந்தக் கண்ணொளியில்கூட நம்பிக்கையின் வித்துப் புலப்பட்டது. அவனுக்கு ஒரு நம்பிக்கை முளைத்துவிட்டது. அப்போதே அவன் உடம்பில் ஒரு புதுப் பலம் புகுந்துவிட்டதென்றுகூடச் சொல்லலாம். டாக்டரின் தீர்மானமும் ஜோஸியரின் முடிவும் அல்ல அவன் உடம்பில் தெம்பு ஏற்பட்டதன் காரணம். அவன் குணமடைய ஆரம்பித்து இரண்டு நாட்களாகிவிட்டன முன்பே. ஏதோ அர்த்தமற்ற ஓயாத—வெளியுலகில் சம்பந்தபட்டு விவாதித்துத் தீர்த்துக் கொள்ளவேண்டிய—பிரச்னைகள் அவன் மனதில் தேங்கிக்கிடந்தன இத்தனை காலமும். அவன் தனிமையிலே அவன் கொண்டுவிட்ட ஒரு பயங்கர மன உணர்வு அவன் மனதிலே இத்தனை காலமாய் வளர்ந்தது. அவன் தெம்பை யிழந்து—பற்றற்று—மனிதனைப் வாழும் முறைகளை ஒருவாறு மறந்து, வியாதிப்போர்வைக்குள் ஒளிந்துகொண்டு கிடந்தான். அந்தச் சிந்தனைகள்—மனதை வாட்டிய பிரமைகள்—தீர்ந்துவிட்டன இப்போது. ஜோசியக்குறிப்பையும் டாக்டரின் திறமையையும் தாண்டி அவன் உயிர்வாழச் சாத்தியமான அறிகுறி தெரிந்துவிட்டது.

அன்று மணி பன்னிரண்டடித்தது. நிம்மதியாய்த் தூங்கிக் கொண்டிருந்தான் கோபாலன். அதற்குப் பிறகு துரிதமான வகையிலே குணமடைந்தது அவன் வியாதி. வெகு விரைவிலேயே அவன் வாழ்விலும் அவன் மனைவியின் வாழ்விலும் இன்னும் பஞ்சுவையர் சீதா இவர்களின் வாழ்விலும் கூடத் தெம்பு உண்டாகிவிட்டது.



# புத்தக விமர்சனம்

## வேலும் வில்லும்

(ஆசிரியர்: ரா. பி. சேதுப்பிள்ளை, பி.ஏ.,பி.எல், கிடைக்குமிடம்: அல்லயன்ஸ் கம்பெனி. மயிலாப்பூர், சென்னை; விலை 1—4—0)

இந்நூல் முருகன் பெருமை, கம்பரும் கச்சியப்பரும், கம்பராமாயணம், கந்தபுராணம், மூவர் தமிழும் முருகனும் என நான்கு பகுதிகளையுடையது.

முதற்பகுதியிலே யுள்ள முருகன் தோற்றம் முதலியவற்றை விளக்கும் செய்யுட்கள் மனப்பாடம் பண்ணிப் போற்றற்குரியவை.

இரண்டாம் பகுதியிலே கம்பர் கச்சியப்பர் ஆகிய இரு பெரும் புலவரும் தம் தம் காப்பியங்களைக் கதை யமைப்பிலே ஒற்றுமை தோன்றும் வண்ணம் சித்திரித்துள்ளனர் என்பது சுருங்கக்கூற லென்னும் அழகு தோன்ற எழுதப்பட்டிருக்கிறது.

மூன்றும் பகுதியிலே அவ்விரு பெருங் கவிஞர்களின் இருபெருங் காப்பியங்களிலே உள்ள செய்யுட்களிலே கதைப் போக்கும் செய்யுட் சிறப்பும் எவ்வாறு திகழ்கின்றன வென்பதை இந்நூலைக் கற்பவர் எளிதின் உணர்ந்து கொள்வர்.

நாலாம் பகுதியோ மெய்ப்பொருள் காண முயல வேண்டு மென்பதைத் தூண்டுவதா யுள்ளது.

இந்நூல், தமிழன்பர் காப்பியங்களைக் கற்று, சொற்சுவை பொருட்சுவைகளை நுகரவேண்டு மென்னும் சிறந்த நோக்கத்துடன் ஆசிரியரவர்களால் எழுதப்பட்டிருக்கிறது.

## வழிகாட்டி

[ஆசிரியர்: கி. வா. ஜகந்நாதன். கிடைக்குமிடம்: அல்லயன் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை. விலை 2—8—0]

பத்துப் பாட்டு, எட்டுத் தொகை, பதினென் கீழ்க்கணக்கு முதலாகிய சங்கத் தமிழ் நூல்களைப் படித்துப் பொருளுணர்வார் மிகச் சிலரே. அவற்றின் அமைப்பு அவை எழுதப்பட்ட காலத்திலே பலர்க்கும் பயன்பட்டிருக்கும் என்பதில் ஐயமில்லை. அவை, இக்காலத்துத் தமிழ்மக்கள் பலராலும் கடுந் தமிழ்நடை நூல்கள் என்று அஞ்சிக் கைவிடப்படுகின்றன. அந்நூல்களுள் சில வற்றிற்குப் பண்டைக்காலத்து அறிஞர்களால் எழுதப் பெற்றுள்ள அரிய உரைகளும் நூல் நடையைவிடக் கடுமையானவை என்று கருதப்படுவனவாயுள்ளன. இக்காலத்துத் தமிழர் நிலையை நோக்கினுல் இக்கூற்று ஓர் அளவு பொருத்தமானதே யாகும்.

இவ் இருபதாம் நூற்றுண்டிலே நம்மிடையே மாபெரும் புலவராய், தம்புகழுடம்புடன் விளங்கிக் கொண்டிருக்கும் மஹாமஹோபாத்யாய டாக்டர் உ. வே. சாமிநாத ஐயரவர்களுடைய அரும்பெறல் மாணவர், அன்பர் கி. வா. ஜகந்நாதன்; ஆராய்ச்சி வன்மையும் மிக்கவர்.

ஆசிரியர் நக்கீரர் வீடு பெற விரும்பிய பக்குவி யொருவனுக்கு வழிகாட்டியாக எழுதிய திரு முருகாற்றுப்படைக்கு, உச்சி மேற்புலவர்கொள் நச்சினர்க்கினியர் உரையெழுதி உதவியிருந்தும், அதனைப் பொருளுணர்ந்துகற்பார் அரியராதலைக்கண்ட அன்பர் கி. வா. ஜகந்நாதன் அவர்கள், அம்முருகாற்றுப்படையையும் அதன் அழகுமிக்க உரையையும் தமிழ்மக்கள் பலரும் விரும்பிக் கற்று, இம்மை மறுமைப்பேறுகளை எய்த வழிகாட்டியுள்ளார்.

இத் திருமுருகாற்றுப்படை தொகை நூல்களிலே முதலாவதாகும். முருகக் கடவுள் தமிழ்த்தெய்வமென்று போற்றப் படுபவர்; சாதிமத வேறுபாடில்லாது எல்லோராலும் வணங்கப்படுபவர்.

இலக்கணக்கொத்து என்னும் சிறந்த நூலை எழுதிய ஸ்ரீ சுவாமிநாததேசிகர், இந்நூல் சங்க இலக்கியங்களிலெ துங்கமுற்றதென்றுர்.

இந்நூலை மிகவும் ஊக்கத்துடன் எழுதிய அறிஞர் கி. வா. ஜகந்நாதன் அவர்களுக்கும் இதனை இக்காலத்திலே அழகுற அச்சிடுவித்து வெளிப்படுத்தியுள்ள அல்லயன்ஸ் கம்பெனியாருக்கும் தமிழர் நன்றி செலுத்துங்கடமையுள்ளவரென்பது எம் எண்ணம்.

தமிழ்மக்கள் இந்நூலை வாங்கிக்கற்று, இதன் வாயிலாகச் சங்கநூற்களை யெல்லாம் படித்து ஆராய்ந்து இன்பமெய்தவேண்டு மென்பதும் எமது பெருவிருப்பம்.

இதற்குப் பேரறிஞராகிய திரு. வி. க. அவர்கள் பொருள்சேர் சிறப்புரை வழங்கியுள்ளார்கள் என்றுல் இதன் சிறப்பைப் படித்துத்தான் பாருங்களேன்.

### ஸ்ரீ அரவிந்தர் அருளிய ரிக்வேதம் அக்கினி ஸூக்தங்கள்:-

மொழிபெயர்த்தோர், தி: வி. கபாலி சாஸ்திரிகள். சென்னை அரவிந்த லைப்ரரி ப்ரசுரம் விலை 4—0—0

இயற்கைத் தோற்றங்களைக் கண்டு பரவசப்பட்ட பண்டைய கவியின் வாக்கு வேதமாகப் புறப்பட்டு விட்டது என்று நமக்குப் பள்ளிப் புத்தகங்களாலும் மேல் நாட்டார் ஆராய்ச்சிகளாலும் புகட்டப்படும் கொள்கைக்கு ஆதாரமில்லை என்று அரவிந்தர் ஆணித்தரமாக விளக்கினர். வேதத்தில் கூறப்படும் 'தஸ்யு' 'பணி' என்பவர்கள் திராவிடர்கள் என்றும் அவர்களுடன் ஆரியர்கள் போர்புரிந்த வரலாறு தான் வேதத்தில் வர்ணிக்கப் படுகிறது என்றும் எண்ணிவருவது தவறு என்பதையும் விளக்கினர். பெரும்பாலும் இவைகள் 'சங்கேதச்' சொற்கள். ரிக்வேதம் முற்றிலுமே அந்தரங்கமாயும் ரகசியமாயும் ஆத்மார்த்தமாயும் உள்ள அனுஷ்டான ஸித்தாந்தங்களின் மரபுக் கோட்பாடு. இவ்விஷயத்தை நமக்கு விளங்கும்படி தமிழில் அக்னிஸூக்தங்களை ஆக்கிய கபாலிசாஸ்திரிகளுக்குத் தமிழ் உலகம் கடன்பட்டிருக்கிறது. நாகரலிபியில் ஸூக்தங்களும் தமிழில் விளக்க உரையும் குறிப்புக்களும் ஸ்ரீ அரவிந்தர் அருளிய முன்னுரை மொழிபெயர்ப்பும் 'கூட வாதிகளின் கோட்பாடு' என்றதொரு விமரிச உரையும் இப்புத்தகத்தில் அடங்கியிருக்கின்றன.

### வீரசிவாஜி

எம். எஸ். சுப்ரமணியஐயர் எழுதியது, சென்னை மங்களநூலகப் பதிப்பு. விலை 2—0—0

விஷயத்துக்குத்தக்க வீரநடை, ஆவேசத்துடன் ஆராய்ச்சி. சிவாஜியின் மேன்மையையும் சாம்ராஜியின் தாழ்மையையும், ஒவ்வொரு தமிழனும் படித்தறிய வேண்டிய புத்தகம்.

### இவர்கள்

(ஹாஸ்யசித்திரங்கள்) பி. ராமச்சந்திரன் எழுதி, சென்னை ஜோதிநிலயம் வெளியிட்டது. விலை 1—8—0

சமையற்காரன், பால்காரன், தோட்டக்காரன், தபால்காரன், வண்டிக்காரன், வேலைக்காரன், தையற்காரன், இவர்களை அறிவும் அனுதாபமும் கொண்டு ஆராய்கிறார் ஆசிரியர். ''நாம் வாழும் உலகத்தில் பிறருக்கும் இடமுண்டு' என்ற பரந்த நோக்கம் மட்டும் மனதில் தோன்றிவிட்டால், அப்புறம் சிரிப்பதற்கு ஹாஸ்யத்துணுக்குகளைத் தேடிக்கொண்டிருக்க வேண்டியதில்லை. தினசரி வாழ்க்கையே ''ஹாஸ்ய சித்திரம்'' என்கிறார் ஆசிரியர். முற்றிலும் உண்மை. இந் நோக்கம் உடையவர் எழுத்து ஹிம்ஸிக்காத ஹாஸ்யசித்திரம். படிக்கவும் படிக்கலாம், பொழுது போக்குக்குத் தமாஷாக நடிக்கவும் நடிக்கலாம்.

### மின்மினி

'சிரஞ்சீவி' எழுதியது, பேசும்படம் வெளியீடு. விலை 1—8—0

''காலம் செல்லும் வேகத்தோடு சத்யம் தர்மம் முதலியவைகள் பின்தொடரச் சக்தியற்று விட்டன போலும்'' என்று முடித்திருக்கிறார் கதையை ஆசிரியர். கல்பனை என்பதனால் கட்டுப்பாடுகளைக் காலால் உதைக்கலாம் என்பதே எழுதியவர் நோக்கமோ என்றுதான் தோன்றுகிறது படிப்பவருக்கு.

### குமுதம்

முதலிய கதைகள். சென்னை சந்திரிகா பதிப்பக வெளியீடு. விலை 1—0—0

வை. சுப்ரமண்யன், நா. ராமச்சந்திரன், சாமி, என்ற மூன்று இளைஞர்களின் உத்ஸாகத்தின் வெளியீடே இந்தப் புஸ்தகத்தில் காணும் 9 கதைகளும். வெவ்வேறு ரஸங்கள், வித விதமான கற்பனைகள். சலிக்காமல் படிக்கலாம், இருந்தாலும் ''அவனது சங்கம ஆஸ்தி ஒரேயொரு அழகிய வீடு தான்'' என்று எழுதக்கூடாது.

### தமிழ்ச்சுடர்

ஆசிரியர் மீ. சு. இளமுருகனர். பெரியகுளம் தமிழ்ச்சுடர் பதிப்பக வெளியீடு. விலை 0—6—0

வித்வான்கள் அல்லாதவர்களுக்காக வித்வத் விஷயத்தை வித்வான்கள் எழுதி விளக்குகிறார்கள். பண்டைத்தமிழ் இலக்கியத்தின் இன்பநுகர்ச்சிகள். மாதம் ஒன்று.

### பூர்ணசக்தி

அல்லது நோயற்ற இன்பவாழ்வு. எழுதியவர் கி. லக்ஷ்மணசர்மா B. A., B. L. சுவாமி சுத்தானந்தபாரதியாரின் முன்னுரையுடன்கூடியது.

புதுக்கோட்டை இயற்கை இல்லம் வெளியீடு. விலை 0—8—0

மருந்தில்லாமல் சுகமாக வாழ வழி காட்டப்படுகிறது.

### தக்ஷணதீபம்

மாதம் ஒரு புத்தகம்

திருநெல்வேலி சிந்துபூந்துறை காரியாலய வெளியீடு. விலை 0—3—0

# தாரா பாய்

### ராஜம் ராமமூர்த்தி

அன்று ஷோஹாபூர் நகரம் அமர்க்களப்பட்டது. தேர்த் திருவிழாபோல் ஆயிரக் கணக்கான ஜனங்கள், பக்கத்துக் கிராமங்களிலிருந்தெல்லாம் திரண்டு வந்து அந்நகரை மொய்த்துக் கொண்டனர். காரணம், வியாசதத்தரின் ஏக புதல்வியான தாராபாய் அடுத்தநாள் காலையில் ஸதி செய்து கொள்ளப் போகிறாள் என்பது தான்.

கணவனை இழந்த மங்கையர் கணவனோடு ஸதி செய்வதுதான் ராஜபுத்திரர் வழக்கம். ஆனால், கன்னிப்பெண்ணோ, ஸௌமங்கலியோ, விதவையோ, குமரியோ, கிழவியோ யாராயிருந்தாலும் வாழ்க்கையில் வெறுப்புற்றவர்கள், இவ்வுலகத் துன்பங்களிலிருந்து விடுபட ஸதி செய்து கொள்வது வீர மஹாராஷ்டிரரிடையே இருந்து வந்தது.

திறந்த சாளரமொன்றின் அருகில் உட்கார்ந்தபடியே ஏதோ சிந்தித்துக் கொண்டிருந்தாள் தாரா. அஸ்தமன சூரியன் சோபையை அவள் கண்கள் வெறித்து நோக்கியபடியே இருந்தன. சாளரத்தின் வழியாய்த் தவழ்ந்து வந்த மந்தமாருதம் மெல்ல அவள் நெற்றிக் குழலை முத்தமிட்டுச் சென்றது.

பத்தரை மாற்றுப் பசும்பொன்னை நிகர்க்கும் மேனி, அஞ்சனம் தீட்டப் படாமல் இயற்கையிலேயே கார்க்கடலை யொத்து விளங்கிய கரியவிழிகள். கோவைக் கனியைப் பழிக்கும் செவ்விதழ்கள், எவ்வளவு அடக்கியும் அடங்காமல் நெற்றியின் மீது வந்து புரளும் குழற்கற்றைகளை யுடைய நீண்ட அளகபாரம். சிந்தனை அலைகளினால் சற்றுச் சுருக்கம் விழுந்த தங்கத்தகடு போன்ற நெற்றி—இவைகளைப் பெற்று விளங்கினாள் தாரா. யௌவனத்தின் சோபை அவள் ஒவ்வொரு அங்கங்களிலும் பொங்கித் ததும்பி வழிந்து கொண்டிருந்தது. பூரண மதுக்குடம் போல் பார்ப்பவரை மயங்க வைக்கும் சௌந்தரிய தேவதையாய் விளங்கினாள் தாரா.

தன் எண்ணங்களிலேயே லயித்துப்போய் அசைவற்று உட்கார்ந்திருந்தாள். அவள் மனக்கண்முன் சென்றகால நிகழ்ச்சிகள் ஒன்றன்பின் ஒன்றாகத் தோன்றவாரம்பித்தன.

2

பூனாவுக்கு அருகிலுள்ள ஜௌமாரி விருந்த வியாசதத்தரின் ஏக புதல்வி தாரா. செல்வத்திற் குபேரனை யொத்த தத்தரது வீட்டிலே ஆசைக்கொரு பெண்ணாகப் பிறந்த அவள் வெகுஅருமையாக வளர்க்கப் பட்டாள்.

ஐந்தாம் வயதிலே அவளுக்குக் கல்யாணம். கணவன் கல்யாணம் என்ற வார்த்தைகளைச் சரியாக உச்சரிக்கக்கூட முடியாத அப் பருவத்திலேயே கைம்பெண்ணாகவும் ஆய்விட்டாள்.

வாசலில் விளையாடிக் கொண்டிருந்த பாவையை உள்ளே அழைத்து, "கண்ணே, பாபி உன் தலையில் கல்லைப் போட்டு விட்டானே" என்று கட்டிக்கொண்டு கதறினாள் பாட்டி. குழந்தை தாராவிற்கு ஒன்றுமே புரியவில்லை. "ஏன் பாட்டி அழறே? என் தலையில் யாரும் கல்லைப் போடல்லையே? நாங்க விளையாடிண்டுன்னா இருந்தோம்" என்று மழலை முற்றாத சொல்லில் கூறினாள் அவள். அவள் சொல்லும் செயலும் கூடவிருப்பவரின் துயரைப் பின்னும் அதிகப்படுத்தின.

காலச்சக்கரம் உருண்டு கொண்டே சென்றது. யௌவனத்தின் பூரிப்பில் அன்றலர்ந்த மலர் போல் விளங்கும் தன்மகளைக் கண்டு மனம் புழுங்கினாள் தாய். தாராவிற்கும் இப்பொழுது தன் நிலை விளங்கி விட்டது. தன் துக்கத்தை மறைத்துக் கொண்டு தன்னைப் பார்க்குந்தோறும் கண்ணீர் உகுக்கும் தன் பெற்றோரைத் தேற்றுவதே இப்போது அவள் வேலையாகி விட்டது.

காட்டில் காய்ந்த நிலவெனப் பாழாகும் தன் யௌவனத்தைப் பற்றிய தாபம், பெற்றோரின் சஞ்சலம், சமூகத்தாரின் ஈவிரக்கமற்ற சொற்கள், காமவேட்டையாளரின் கண்வீச்சு, எதிர்காலப் பயங்கரம் ஆகிய இப்புயல்களின் மத்தியில் அகப்பட்டுக் கொண்டு கொந்தளித்தது தாராவின் வாழ்க்கைப்படகு.

அதே சமயத்தில் நாடும் கொந்தளித்துக் கொண்டுதான் இருந்தது. வீர சிவாஜி வீறு கொண்டெழுந்த காலமது. இன்று ஒரு

கோட்டை, நாளை ஒரு கோட்டை என்று பீஜபூர் சுல்தான் ஆளுகையிலுள்ள கோட்டைகளை ஒவ்வொன்றாகக் கைப் பற்றிக் கொண்டிருந்தனர் சிவாஜியும் அவரது படைவீரரும்.

பீஜபூர் சுல்தானுக்குச் சிவாஜியின் தொல்லை பெருந் தொல்லையாக இருந்தது. அவரை எவ்வாறு ஒழிப்பதென யோசித்தான். சுல்தானின் சேனாதிபதியான அப்ஸல்கான் தலைமையில் ஒரு பெரியபடை சிவாஜியைத் தொலைக்கக் கிளம்பியது. எதிர்நின்று சண்டை செய்யாமல் மரங்களின் பின்னும் புதர்களின் பின்னும் மறைந்திருந்து திடீர், திடீர் என்று எதிர்பாராத சமயங்களிலெல்லாம் வந்து தாக்கும் சிவாஜியின் கொரில்லாப் படைகளின்முன் அப்ஸல்கானின் வீரர்களின் தைரியம் பயனற்றுப் போய் விட்டது.

முகலாய வீரர்கள் சிவாஜியின்மீது வந்த ஆத்திரத்தை அவர் தங்கியிருந்த மகாராஷ்டிர கிராமங்களின்மீது காட்டினர். கிராமம் கிராமமாக அக்கினி பகவானுக்கும், போர்வீரர்களின் அட்டூழியங்களுக்கும் இரையாயின.

3

தாராவின் ஊரான ஜுமாரும் இதே கதியை அடைந்தது. இந்த அமர்க்களத்தில் வியாசதத்தரின் மாளிகையும் கொள்ளையிடப்பட்டது. கொள்ளையோடில்லாமல் அவர், அவருடைய மனைவி, வேலையாட்கள் எல்லோரும் பயங்கரமாகக் கொல்லவும் பட்டனர். யதேச்சையாக அன்று அவ்வூர் காளிகோயிலுக்குச் சென்றிருந்தாள் தாரா; ஆகவே உயிர் பிழைத்தாள். ஆனால் போர் வீரர்களால் கைதியாகத் தூக்கிச் செல்லப் பட்டாள்.

பெற்றோரைத் திடீரென்று பிரிந்த ஏக்கத்தாலும் திகிலினாலும் மூர்ச்சையடைந்த தாராவைக் கொண்டுபோய், தங்கள் தலைவனான வஸீர்கானின் முன் நிறுத்தினர் போர்வீரர்.

சற்று நேரங் கழித்து மெதுவாகக் கண்ணைத் திறந்து பார்த்தாள் பாலிகை. ஆறடி உயரம். செக்கச் சிவந்திருந்த சுந்தரமேனி, விசாலமான நெற்றி, பருத்து அகன்ற புஜங்கள், உடலோடு பொருந்த அணியப்பட்டுள்ள போர் உடை, கண்ணைப் பறிக்கும் பளபளப்பு வாய்ந்த அரைக்கச்சை, தலையில் உயர்ந்த பட்டினால் ஆகிய குல்லாய் இவ்வித அலங்காரங்களுடன் விளங்கிய



கண்ணகியின் சாபம்

அன்று ஈசன் நெற்றிக் கண்ணைத் திறந்துதான் மன்மதனை எரித்தான்.

ஆனால் கண்ணகி தன் மைதீட்டிய கண்களால் மதுரைமா நகரையே எரித்தாள்.

''ஐடெக்ஸ்'' கண் மை தீட்டப்பட்டு அழகுடன் குளுமையடைந்திருந்த கண்களின் மை கண்ணீரினால் கரைந்ததும் தான் கண்ணகியின் கண்கள் கோபக் கனலை வீசி நகரையே கருக்கியது.

ஐடெக்ஸ் கண் மை ரசாயன முறைப்படி தயாரிக்கப்பட்டது; கண் எரிச்சலற்றது. நாகரீக நங்கையர்களுக்கும் குழந்தைகளுக்கும் இன்றியமையாதது

போலிகளை வாங்கி கண்களைக் கெடுத்துக்கொள்ளாமல் ''ஐடெக்ஸ்'' (Eyetex) என்ற மார்க்கை சரியாகப் பார்த்து வாங்கவும்.

எல்லா ஷாப்புகளிலும் இந்தியாவின் பிரதான நகரங்களிலும் கிடைக்கும்.




அரவிந்த் லேபரடரீஸ் தயாரிப்பு

விநியோகிப்பவர்கள்

**புஷ்பவனம் ஸ்டோர்ஸ்,**

**திருவல்லிக்கேணி - மதராஸ்**

தஞ்சாவூர் ஜில்லாவிற்கு ஏஜண்டுகள்:—

**நாஷனல்ஸ் (இந்தியா) லிமிடெட்**

கண்டோன்மெண்ட் — திருச்சினாப்பள்ளி

வஸீர்கான் தன்னைக் கூர்ந்து நோக்கிக் கொண்டிருப்பதைக் கண்டாள்.

தாராவின் உடல் சில்லிட்டது. தான் எங்கிருக்கிறோமென்று அறிந்து கொள்ள ஒரு கணம் பிடித்தது அவளுக்கு. மறு கணம் அலறியடித்துக்கொண்டு எழுந்தாள். வஸீர்கானின் பார்வையில் காணப்பட்ட குளிர்ச்சியும், கருணையும் அவளுக்குத் தைரிய மூட்டின.

கண்களில் வழிந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டு, இருகைகளையும் கூப்பிய படியே தாரா கெஞ்சும் குரலில், "ஐயா, நான் ஓர் அபாக்யவதி, என்னைத் தங்கள் போர் வீரர்கள் பலவந்தமாகத் தூக்கிக் கொண்டு வந்துவிட்டார்கள். தயவு செய்து என்னை என் பெற்றோரிடம் சேர்ப்பித்து விடும்படி உங்கள் காலில் விழுந்து கேட்டுக் கொள்கிறேன். ஐயா, கருணை கூர்ந்து இவ்வேழையின் மானத்தைக் காப்பாற்றி யருளுங்கள்" என்று கண்ணீர் பெருகக் கூறினாள்.

வஸீர்கானின் மனம் உருகியது. தன் போர்வீரர்களைக் கடிந்து கொண்டான். "சகோதரீ, நீ பயப்பட வேண்டாம். உனக்கு இங்கு ஒரு தீங்கும் நேராது. சீக்கிரமே உன் பெற்றோரைப்பற்றி விசாரித்து உன்னை அவர்களிடம் சேர்ப்பிக்கிறேன்" என்று தைரியம் சொல்லி, அவளை அந்தப்புரம் அனுப்பினான்.

வஸீர்கானின் தாய் குல்ஸமும், சகோதரி ஸெனினாவும் தாராவை வரவேற்று அவளுடைய பயத்தையும், துயரையும் நீக்க முயன்றனர். பார்த்தவுடனேயே பிராண சினேகிதிகளாய் விட்டனர், ஸெனினாவும், தாராவும்.

4

அந்தரங்க அறையில் இருந்தபடியே பேசிக்கொண்டிருந்தனர் அப்ஸல்கானும், வஸீர்கானும். தந்தை, தனயன் இருவர் முகங்களும் வாட்டமுற்று விளங்கின. அன்றுதான் தாராவின் பெற்றோரைப் பற்றிய செய்தி வந்திருந்தது. கோயிலுக்குச் செல்லும்போது "ஜாக்கிரதையாகப் போய் விட்டு வா அம்மா" என்று தன்னை அன்புடன் அனுப்பிய தாய், தந்தையர் இருவரையும் இனி தான் எக்காலத்தும் காண முடியாது என்று அறிந்தபோது, தாராவின் இருதயமே நின்று போய்விடும் போலாகி விட்டது.

தன் மனமே விண்டு உடைந்து விட்டது போல் அழுது தீர்த்தாள். அவள் அழுது அழுது கண்கள் வீங்கிச் சிவந்து போயின, தொண்டையும் காய்ந்து போயிற்று. அப்படியும் அவள் அழுகை நின்றபாடில்லை. "ஐயோ, அப்பா! ஐயோ, அம்மா! என்னைத் தனியாய் விட்டு ஏக காலத்தில் இருவரும் செல்ல உங்கள் மனம் துணிந்ததா?" என்றெல்லாம் உன் மத்தம் பிடித்தவள் போல் அலறிக்கொண்டிருந்தாள் அவள்.

குல்ஸமும், ஸெனினாவும் அருகில் நின்ற படியே கண்ணீர் பெருக்கிக் கொண்டிருந்தனர். அனாதையாய் விடப்பட்டோமே என்று அலறியழும் தாராவை என்ன சொல்லித் தேற்றுவதென்றே அவர்களுக்கு ஒன்றும் புரியவில்லை.

இந்தத் துக்கக் காட்சியைக் காணச்சகிக் காமலேயே அப்பால் சென்றனர், அப்ஸல் கானும், வஸீர்கானும். இத்துக்கத்தை மாற்றச் சற்றுநேரம் மகனுடன் வேறுவிஷயங்களைப்பற்றி வேடிக்கையாகப் பேச விரும்பினார் தந்தை.

"வஸீர், இம்முறை உன் தலைமையில் வீரர்கள் வெகு நன்றாகச் சண்டை செய்திருக்கிறார்கள். உன் வீரத்தைக்காண நான் மிகவும் பெருமையடைகிறேன். கிடைத்த கொள்ளைப் பொருள்களில் உனக்குப் பிடித்தமானவை எவையானாலும் நீ பெற்றுக் கொள்ளலாம். உனக்கு என்ன வேண்டுமோ அதைக் கேள் மகனே" என்று பெருமிதத்தோடு கூறினார் அப்ஸல்கான்.

வஸீர் திடுக்கிட்டான். தன் மனதிலுள்ளதைத் தெரிந்துகொண்டே அவர் அப்படிக் கேட்கிறாரோ என்றுகூட எண்ணினான். அவன் முகம் சிவந்தது. சற்றே சங்கோசத்துடனே தலையைக்குனிந்தபடியேபேசவாரம்பித்தான் "அப்பா எனக்கு அந்தக் கொள்ளைப் பொருள்களில் எதுவுமே வேண்டாம். ஆனால்.........கடைசியாகக் கிடைத்த அந்த ஒப்பற்ற மாணிக்கத்தை எனக்குத் தருவீரானால், நான் உண்மையிலேயே பெரிய அதிருஷ்டசாலி என்றெண்ணிக்கொள்ளுவேன்" என்ற வார்த்தைகள் தயங்கித் தயங்கி அவன் வாயிலிருந்தும் வெளியில் வந்தன.

அப்ஸல்கான் அவன்மனதில் இருப்பதைத் தெரிந்து கொண்டுவிட்டார். அவருக்கும் அது விருப்பமாகவே இருந்தது. ஆகவே அவர், அந்த ஒப்பற்ற மாணிக்கத்தை உனக்குத் தருவதில் எனக்கு யாதொரு ஆக்ஷேபனையுமில்லை. எல்லாம் அல்லாவின் செயல், அவர் அருள் உனக்கிருந்தால், அம் மாணிக்கம் எளிதில் உனக்குக் கிட்டும்"

என்று சொல்லிவிட்டு அப்பால் போய் விட்டார்.

வஸீரின் முகம் மலர்ந்தது. ஆனால் இப்படி இவர்களால் சிலேடையாகப் பேசிக் கொள்ளப்பட்ட அந்த "ஒப்பற்ற மாணிக்கமோ" அப்போது அனாதையாக விடப்பட்ட தன் கதியை நினைத்து அழுதுகொண்டிருந்தது.

5

பூர்ண சந்திரன் பால்போன்ற தன் கிரணங்களைப் பொழிந்து இவ்வுலகையே அமுத மயமாக்கிக் கொண்டிருந்தான். அந்தப்புரத்தை அடுத்த நந்தவனத்தில் ஒரு பளிங்குக் கல்லின்மேல் அமர்ந்திருந்தாள் தாரா. இயற்கையிலேயே அழகுபெற்ற அவளைப் பால்மதியின் கிரணங்கள் பின்னும் அழகு படுத்தின. கண்களை லேசாக மூடியவாறு மனோராஜ்யத்தில் மூழ்கியிருந்தாள் தாரா.

தாரா, அப்ஸல்கான் குடும்பத்தாரிடம் அடைக்கலம் புகுந்து ஐந்தாறுமாதங்களுக்கு மேலாகிவிட்டன. நாள் செல்லச் செல்லத் தாரா தன் துக்கத்தைச் சிறிது சிறிதாக மறக்கத் தொடங்கினாள். பெற்றோரைக் காட்டிலும் பிரியமாகத் தன்னிடம் நடந்து கொள்ளும் குல்ஸம் தம்பதிகளின் பரிவும், ஓயாமல் தன்னைக்கேலி செய்வதையே தொழிலாகக் கொண்ட குறும்புக்கார ஸெனினாவின் அன்பும், இவை எல்லாவற்றிற்கும் மேலாக, அழகும் ஆண்மையும் ஒருங்கே பெற்ற வீரனான வஸீர்கானின் காதலும், ஆகிய இவையாவும் ஒருங்குகூடி, தாராவை வசிகரித்து, அவள் வாழ்க்கையை இன்ப மயமாக மாற்றினதால், அவள் துயரை மறந்ததில் ஆச்சரியமொன்றுமில்லை.

வஸீர் தான் தாராவிடம் கொண்ட அன்பைத்தன்மனதிலேயே புதைத்துவைக்க விரும்பினான். ஆனால், அதை அப்ஸல்கான் எப்படியோ அறிந்துகொண்டு விட்டதோடு, குல்ஸத்தினிடமும் கூறிவிட்டான்.

கணவன், மனைவி இருவருக்கும் இது உடன்பாடாகவே இருந்தது. முகலாயர்கள் ராஜபுத்திரப் பெண்களைக் கொள்வது அக்காலத்தில் வழக்கத்திலிருந்தது. மஹாராஷ்டிரர், ராஜபுத்திரருக்கு எவ்விதத்தில் குறைந்து போய்விட்டனர்? ஆகவே, மகாராஷ்டிரப் பெண்ணான தாராவைத் தம் மகனுக்குக் கொள்வதில் அவர்கள் ஆவலும், உற்சாகமும் காட்டினர். அழகும், அடக்கமும், இனிய சொற்களும், நற்குணங்களும் பொருந்திய தாரா அவர்கள் எல்லோர் மனதையும் கொள்ளை கொண்டுவிட்டதே இதற்குக் காரணமாகும்.

சீக்கிரத்திலேயே தாராவுக்கும் விஷயம் விளங்கியது. அவளுக்கும் இது உவப்பையே அளித்தது. மெல்ல, மெல்ல அவள் இதயக் கோட்டையில் புகுந்துகொள்ள ஆரம்பித்தான் வஸீர்கான்.

"என்று நாம்தாராவைக் கடிமணம்புரியப் போகிறோம்? அந் நன்னாள் என்று வரும்?" என்று ஏங்கித் தவங்கிடந்தான் வஸீர். சிவாஜியைத் தலையெடுக்க வொட்டாமல் அடக்கிவிட்டு, அனைவரும் பீஜபூர் செல்ல வேண்டும், சென்றதும் மகனின் மணத்தை மங்களகரமாக நடத்தவேண்டும், என்றெல்லாம் திட்டம் போட்டுக்கொண்டிருந்தார் அப்ஸல்கான். ஆனால், பாழும் விதி தமக்கு எதிராகச் சதி செய்து வருவதை அவர் எவ்வாறு அறிய முடியும், பாபம்!

சிந்தனைக் கடலில் மூழ்கியபடி யிருந்த தாராவின் கண்களைப் பொத்தினாள் ஸெனினா. திடுக்கிட்டுப் போன தாரா, "யார் அது" என்று கேட்டவாறே ஸெனினாவின் கரங்களைத் தன் கண்களினின்றும் விலக்கினாள்.

கலகலவென்று சிரித்தாள் ஸெனினா. "யாரோ என்று பயந்துபோய் விட்டாயா பாபீ?" என்றாள். புருவங்களை வளைத்து ஒய்யாரமாகப் பார்த்தாள் தாரா. "என்ன. பாபியா, அப்படி என்றால் என்ன ஸெனினா?" என்று கேட்டாள்.

"ஐயைய, இது தெரியாதா உனக்கு இங்கே கிட்டவா சொல்லுகிறேன்" என்று கூறியபடியே தாராவின் கழுத்தை வளைத்துக் கட்டிக் கொண்டாள் ஸெனினா. அவள் முகத்தோடு தன் முகத்தை வைத்துக் கொண்டு ரகசியம் பேசும் குரலில் "பாபீ, என்றால் அண்ணி என்று அர்த்தம். இப்போது புரிந்ததா பாபீ?" என்றாள்.

தாராவின் முகம் அன்றலர்ந்த ரோஜாவெனக் குபீரென்று சிவந்தது. "சீ, போ, போக்கிரிப் பெண்ணே." என்று ஸெனினாவின் கன்னத்தில் செல்லமாகத் தட்டினாள்.

6

அப்ஸல்கான் தம் மனைவி மக்களிடம் விடைபெற்றுக் கொண்டிருந்தார். அன்று அவரும், சிவாஜியும் மட்டும் தனியான இடத்தில் சந்தித்து உடன்படிக்கை செய்து கொள்வதாகப் பேச்சு. அதற்காகக் கிளம்பிக்கொண்டிருந்தார்.

எத்தனையோ போர்களைக்கண்டவர் அவர். ஆனாலும், இன்று ஒரு தனி மனிதனைச் சந்திக்கப் போகுமுன் அவருக்கு ஏற்பட்டுள்ள படபடப்பும், கண்கலக்கமும் இது வரையில் என்றும் ஏற்பட்டதில்லை. போரில் வெள்ளமாக ஓடும் இரத்தத்தைக் கண்டுகூடக் கலங்காத அவர், இப்போது பச்சைக் குழந்தையைப்போல் தேம்பி அழுதபடியே எல்லோரையும் கட்டியணைத்து விடைபெற்றுக்கொண்டார்.

அறைமுழுவதும் நிசப்தமாயிருந்தது. ஒவ்வொருவரும் மூச்சுவிடக்கூட மறந்து விட்டவர்போல் சோகப் பதுமைகளாய் நின்று கொண்டிருந்தனர். ஸெனினாகூட, தன் குறும்புத்தனத்தை மூட்டைகட்டி வைத்து விட்டு, தன் சிறுகைகளால், தகப்பனார் இடுப்பைச்சுற்றி அணைத்துக் கொண்டு அவரைவிட்டு நகராமல், அவரருகிலேயே நின்று கொண்டிருந்தாள்.

அப்ஸல்கானின் பார்வை அறையின் ஒரு மூலையில் பொற்பதுமை போல் நின்று கொண்டிருந்த தாராவின் மேல் விழுந்தது. ஏற்கனவேயே அக்குடும்பத்தவரில் ஒருவராகக் கருதப்பட்டாள் அவள். ஆகவே அப்ஸல்கான் அவளையும் ஆசீர்வதித்து விட்டுப் புறப்பட்டார்.

அப்ஸல்கானும், சிவாஜியும் தனியிடத்தில் சந்தித்துப் பேசினர். அவர்கள் என்ன பேசினர் என்பதும், அவர்களுக்கிடையில் என்ன நிகழ்ந்தது என்பதையும் ஆண்டவனே அறிவார். பலர் பலவிதமாகப் பேசிக்கொண்டனர். அடுத்த நாளே, சிவாஜியின் கையால், புலிநகங்களால் குத்திக் கொல்லப்பட்டார் அப்ஸல்கான் என்ற துயரச்செய்தி நாடெங்கும் பரவியது.

தீயில் விழுந்த புழுப்போல் துடித்தனர் குல்ஸமும், ஸெனினாவும். ''தந்தையின் கொலைக்குப் பழிக்குப் பழி வாங்குவேன்'' என்று துள்ளிக் குதித்தான் வீரவஸீர். தாராவும் சோகத்திலாழ்ந்தாள்.

ஆனால், தந்தைக்காகவும், கணவனுக்காகவும் வருந்தியழக்கூட நேரமில்லை அவர்களுக்கு. தங்களைத் தேடிக்கொண்டிருந்த மகாராஷ்டிர வீரர்களின் கண்களில் மண்ணைத் தூவிவிட்டு, உயிர் தப்பித்துக் கொள்ள ஓடவேண்டியிருந்தது.

இப்பொழுது, தாராவின் தலைவிதி அவளை ஆட்ட ஆரம்பித்தது. தப்பிச் செல்லும் அமர்க்களத்திலும், எதிரிப் படைகளின் தொந்தரவிலும், அவள் சென்ற பல்லக்கு, குல்ஸம், ஸெனினா இவர்களின் பல்லக்குகளிலிருந்தும் பிரிக்கப்பட்டு, பின் தங்கிவிட்டது.

மறுபடியும் கைதியாகத் தூக்கிச் செல்லப்பட்டாள் அவள். ஆனால், இப்போது அவள் அழைத்துச் செல்லப்பட்டது ஒரு மஹாராஷ்டிரத் தலைவர் முன்.

தாராவின் அதிருஷ்டம் இப்போது மறுபடியும் குறுக்கிட்டது. அத்தலைவர் வியாசதத்தரின் தூரத்து உறவினர். ஆகவே, தாரா இன்னாள் என்று அறிந்து கொண்டதும், அவளைத் தம்வீட்டிற்கே அழைத்துக்கொண்டு போய் விட்டார்.

ரமேச தத்தர்—அதாவது அந்த மகாராஷ்டிரத் தலைவர் வீட்டில் தாரா சொல்லொணாத் துயரமனுபவித்தாள். அவருடைய மனைவி பத்மாபாய் தாராவிடம் மிகுந்த அன்புடனிருந்தாள். ஆனால், அவருடைய விதவைச் சகோதரி அகல்யா பாயோ தாராவை நிமிஷத்திற்கு நிமிஷம் பிடுங்கி எடுத்தாள்.

தானும் ஒரு விதவை, இவளும் ஒரு விதவை; அப்படியிருக்க இவளுக்கு மட்டும் இவ்வளவு அலங்காரமும், சொகுஸும் என்னத்திற்கு? தான் அழகி என்ற இறுமாப்பினால்தானே இவள் இப்படித்தளுக்கிக் குலுக்குகிறாள்? விதவைக்கு ஏன் வளையல்களும், சங்கிலிகளும்? குதிகால் வரையில் புரளும் இந்த நீண்ட கூந்தல் இவளுக்கு ஏற்றதுதானா? ஜாதியாசாரப்படி முன்னால் இவளுக்கு அலங்கோலம் செய்தால் தான் இவள் கொட்டம் அடங்கும்'' என்றிவ்வாறு அகல்யாபாய் அகாரணமாகத் தாராவின் மேல் பொறாமை கொண்டு அவளைக் கொடுமைப் படுத்தத் தொடங்கினாள்.

தாராவின் மனம் நொந்து புண்ணாகியது. ''ஆதியிலேயே நாதனை இழந்தோம். பிறகு ஆசையுடன் வளர்த்த பெற்றோரை அகாலத்தில் இழந்தோம்! அனாதையென்று ஆதரவு காட்டி வளர்த்தவர்களையும் இழந்தோம்! இப்படி எல்லாரையும் இழந்து, கடைசியில் இந்த அகல்யாபாயிடம் அவதிப்படவா நாம் இருக்கவேண்டும்?'' என்று ஓயாமல் கண்ணீர் பெருக்கி மனம் புழுங்கினாள் தாரா.

அவளுக்கு வாழ்க்கையே வெறுத்துப் போய்விட்டது. தன் வாழ்க்கையில் மறுமலர்ச்சி ஏற்படும், இனி தான் தன் பழைய துயரவாழ்க்கையை மறந்து, புதிய இன்ப வாழ்வு வாழலாம் என்று மனோராஜ்யம் செய்து வந்தபோது, எதிர்பாராமல் அது தடைப்பட்டதினால், ''கடவுளுக்கே நான்

உயிர்வாழ்வதில் இஷ்டமில்லை போலிருக்கிறது. ஆகவே, இந்த அகல்யாவிடம் பிடுங்கல் படுவதைவிட துன்பமிகுந்த இவ்வுலகை விட்டு நீங்குவதே மேல்என்று தீர்மானித்துக் கொண்டாள் தாரா.

தாராவின் தீர்மானம் ரமேசதத்தருக்கும், பத்மாவுக்கும் ஆச்சரியத்தை அளித்தது. இவ்வளவு இளவயதில் அவள் ஸதி செய்து கொள்ள வேண்டாம் என்று முடிந்த வரையில் தடுத்துப் பார்த்தனர், அகல்யாவுக்கும் தாரா தன் ஆட்சியிலிருந்தும் தப்பிச் செல்வது விருப்பமில்லை. இருப்பினும், ஒரே பிடிவாதமாக இருந்த தாரா இவர்கள் யார் கூறுவதையும் சட்டை செய்யாமல் ஒரே தீர்மானத்துடனிருந்தாள். ஆகவே, அவள் ஸதி செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்து ஊரெங்கும் இச்சமாசாரத்தைப் பரவவும் செய்தார் ரமேசதத்தர். புரோகிதர்களும், மற்றவர்களும் வந்து அவர்வீட்டை முற்றுகையிட்டனர்.

7

சிந்தனை கலைந்து திடுக்கிட்டெழுந்தாள் தாரா. இவ்வளவும் தன் வாழ்க்கையிலேயே நடந்தனவா என்று அவளாலேயே நம்ப முடியாமலிருந்தது.

மெதுவாக எழுந்து சாளரத்தண்டை சென்று பார்த்தாள். நன்றாய் இருட்டிவிட்டது. அருகிலிருந்த கோயிலிலிருந்து ஆலாட்சி மணி 'டிங், டிங், டிங்' என்று சப்தித்தது. மௌனமாகக் கையைக் கூப்பி மானஸீகமாகக் கடவுளை நமஸ்கரித்தாள் தாரா. பக்திப் பெருக்கினால் அவள் கண்களினின்றும் கர கர வென்று நீர் சுரந்தது, ''பகவானே, நான் நல்ல கதியை அடையும்படி அருள் செய்'' என்று வேண்டிக்கொண்டாள். அவள் மனம் பற்றற்ற பரம யோகியரது மனம்போல் நிர்மலமாக விளங்கியது.

அதேசமயம், நித்திரை வராமல் தன் கூடாரத்தில் இங்குமங்குமாக உலாவிக் கொண்டிருந்தான் வஸீர்கான். தந்தையை இழந்த துயரம் ஒரு பக்கம், காதலியை இழந்த ஏக்கம் ஒரு பக்கமாக வருந்திக்கொண்டிருந்தான் அவன். குல்ஸமும், ஸெனினாவும் பீஜபூரிலே இருந்தனர். வஸீருக்கு மட்டும் அங்கும் இருக்கப் பிடிக்கவில்லை. சிவாஜியைப் பிடிக்கிறேன் என்ற சாக்கை வைத்துக்கொண்டு பூனாவின் அருகிலேயே இன்று ஓரிடம், நாளை ஓரிடமாக அலைந்துகொண்டிருந்தான். அவனுடைய ஒற்றர்கள் பல விடங்களிலும் அலைந்து



திரிந்து அவனுக்காகத் தாராவை தேடிக் கொண்டிருந்தனர்.

தூக்கம் பிடிக்காமல் உலாவிக்கொண்டிருந்த வஸீரின் முன் தோன்றினான் மகம்மது ஆலி என்ற அவனது முக்கிய ஒற்றன். ஆலி கொண்டுவந்திருந்த செய்தியும் முக்கியமானதாகவே இருந்தது. தாராவின் ஸதியைப் பற்றிய செய்திதானது.

துள்ளி எழுந்தான் வஸீர். அவனுடைய ஏக்கம், துக்கம் யாவும் பறந்துபோயின. தாராவை அடைந்துவிட்டது போலவே மனமகிழ்ந்தான். சற்று நேரம், அவனுக்கும், அவனுடைய வீரர்களுக்கும் பேச்சு நடந்தது. பல விஷயங்கள் ஆலோசிக்கப்பட்டு, கடைசியில் ஒரு தீர்மானம் செய்யப்பட்டது. மறு நிமிஷம், வஸீரின் தலைமையில் நூற்றைம்பது குதிரை வீரர்கள் ஷோகாபூர் செல்லத் தலைப்பட்டனர். அவர்கள் யாவரும் பாதி முகத்தை மறைக்கும்படியான முண்டாசு கட்டியிருந்தனர். தரித்திருந்த ஆயுதங்களை மறைக்க ஒரு நீண்ட மேலங்கி அணிந்திருந்தனர். பார்ப்பதற்கு அவர்கள் மஹாராஷ்டிர யாத்திரிகர்கள்போல் காணப்பட்டனர்.

8

அடுத்தநாள் மாலை. ஷோஹாபூரின் ஆற்றங்கரையின் ஓரமாக ஜனங்கள் யாவரும் வந்து கூடினர். அங்கேதான் தாராவின் கடைசிக்காலப் பிரயாணத்திற்கான சாமக்ரியைகளெல்லாம் சேர்த்து வைக்கப்பட்டிருந்தன. வஸீர்கானின் வீரர்கள் மூலைக்கொருவராகப் பிரிந்துபோய் நின்றுகொண்டார்கள். எல்லோரும் தாராவின் வரவை ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டிருந்தனர்.

சீக்கிரத்திலேயே தாராவும் வந்துவிட்டாள். வேதியர்கள் முன்பக்கம் வேத கோஷம் செய்துகொண்டு செல்ல, பின்னால் வாத்தியக்காரர்கள் இனிய ஓசையை எழுப்ப, தாராவின் பல்லக்கு அவ்வூர் முழுவதும் ஊர்வலமாக வந்து ஆற்றங்கரையை அடைந்தது.

மணமகள் போல் அலங்கரிக்கப்பட்டிருந்த தாரா பல்லக்கை விட்டிறங்கி, சிதையின் அருகே நின்றாள். அவளணிந்திருந்த செந்நிறப் பட்டாடை சூரியனது ஒளியில் நெருப்பைப்போலப்பிரகாசித்தது. அவளது முகம் அசாதாரணமான ஒளியோடு பிரகாசித்தது. கைகளைக் கூப்பியபடியே, கண்மூடி, தன் இஷ்டத் தெய்வத்தைத் தியானிக்கலானாள் சற்று நேரம். அது ஆனதும் சிதையைச் சுற்றி மூன்று சுற்றுக்கள். பிறகு சிதையின்மேல் சயனம், அவ்வளவுதான்! பலரும் புகழும் ஸதியாகிவிடுவாளவள்.

கூடியிருந்தவர்கள் யாவரும் கண்கொட்டாமல் தாராவையே பார்த்தபடி நின்றனர். வஸீர்கானும், அவனுடைய வீரர்களும் மெல்ல மெல்லச் சிதையின் அருகே நெருங்கினர்.

தியானம் முடிந்து கண்களைத் திறந்தாள் தாரா. பொட்டென அவள்முன் குதித்தான் வஸீர்கான். திகைத்து நின்ற அவளை அப்படியே அலாக்காகத் தூக்கிப் பக்கத்திலிருந்த குதிரைமேல் வைத்தான். மறுகணம் சிட்டாகப் பறந்தது குதிரை. வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தவர்கள் தங்கள் திகைப்பிலிருந்து நீங்குவதற்குள் மாயமாய் மறைந்துவிட்டனர் வஸீர்கானும், அவனுடைய வீரர்களும்.

நடு மத்தியானம். பாய்ந்தோடிக் கொண்டிருந்த தன் பரிமாவைச் சற்று மெதுவாகச் செல்ல வைத்தான் வஸீர். பீஜபூர் சமீபத்திலேயே இருக்கிறது என்பதற் கடையாளமாக அதன் கோட்டை கொத்தளங்கள் வெகு தூரத்திலிருந்தே தெரிய வாரம்பித்தன.

மூர்ச்சையாகியிருந்த தாரா மெதுவாகக் கண்களைத் திறந்து பார்த்தாள். விசாலமான அவள் நயனங்கள் தன்னை மருட்சியோடு நோக்குவதைக் கண்ட வஸீர், தன் முகத்தை மறைத்துக்கொண்டிருந்த முண்டாசை அவிழ்த்தெறிந்தான், பிறகு, மெதுவாக அவள் முகத்தருகில் குனிந்து. "தாரா, உன் வஸீரைத் தெரியவில்லையா உனக்கு?" என்று பரிவாகச் சொன்னான்.

தாரா பதில் சொல்லவில்லை. தனக்கு இனி உரிய இடம் இதுதான் என்று சொல்வதுபோல், தன்னழகிய முகத்தை வஸீரின் அகன்ற மார்பில் புதைத்துக்கொண்டாள், இத்தனை நாட்களுக்குப் பிறகு பேதை தாராவின் மனம் சாந்தியையும், இன்பத்தையும் ஒருங்கே அடைந்தது!

# அனுதாபம் யாருக்கு?

மானஸீகன்

"சாரதா! பக்கத்து வீட்டு ரயில்வே போர்ட்டர் நம் வீட்டு நாய்க்குட்டியைக் கேட்கிறன். கொடுத்துவிடலாமா?" என்று கேட்டுக் கொண்டே உள்ளே வந்தார் சங்கரய்யர்.

கூடத்தில் தலை பின்னிக்கொண்டிருந்த சாரதா முகத்தில் ஒரு வெறுப்புத் தோன்றியது. "போ அப்பா! போயும் போயும் ரயில்வேபோர்ட்டர் வீட்டிற்கா நம் நாயைக் கொடுக்கிறது.? வேண்டாம் அப்பா, நம்மிடமே இருக்கட்டும்." சங்கரய்யருக்கு எரிச்சல் வந்தது. "ஏண்டீ? கொடுத்தால் என்ன குடிமுழுகிப்போய் விட்டதாம். நம் வீட்டில் எதற்கு அதிக நாய்கள் வேண்டும்?" என்று கேட்டார்.

"நம் வீட்டில் பாலும் சோறும் தின்றுவிட்டு, எச்சிலிலை பொறுக்கவா அப்பா அந்த நாய்க்குட்டியை அவன் வீட்டிற்கு அனுப்புகிறீர்கள்? இருந்தாலும் இவ்வளவு கொடூரம் உதவாது அப்பா, வாயில்லா ஜீவன்களிடம்" என்ருள்.

இதற்குள் மூலையில் உட்கார்ந்திருந்த அவள் பாட்டி, "ஏண்டி பெண்களைத்தான் குலம் கோத்திரம் பார்த்துக் கொடுக்கிரும்; நாய்களுக்குக் கூடவா இந்தவிதி; நன்ருயிருக்கிறது, நீ அடிக்கும் கூத்து" என்ருள்.

சாரதாவிற்குக் கோபம் கோபமாய் வந்தது. அவள் சிறு உள்ளத்திற்கு மனிதர்களுக்கும் நாய்க்குட்டிக்கும் அதிக வித்தியாசம் இருந்ததாகத் தெரியவில்லை.

"நான் கொடுக்கமாட்டேன் அப்பா. ரயில்வே போர்ட்டரிடம் கொடுக்கவேண்டாம். நம்மை நம்பி வந்த ஜீவன்களை ரக்ஷிப்பது நம்கடமை" என்ருள்.

"போதும் இந்த வேதாந்தம் இந்தச் சிறுவயதிலேயே. எங்களுக்கெல்லாம் அந்த வேதாந்தம் தெரியாதா என்ன? அவரவர்கள் போகிறவழியில் அவரவர்கள் போகிருர்கள். நீயும் நானும் என்ன செய்யமுடியும்" என்று அலுத்துக் கொண்டாள் அவள்தாய்.

சங்கரய்யர் ஒரு பெரிய கவர்மெண்ட் உத்யோகஸ்தர். வீட்டில் அவர் ஒரே பெண் சாரதாதான். சிறு குழந்தை. செல்வமாக வளர்க்கப்பட்டு வந்தாள். அவர்கள் வீட்டில்வளர்ந்து வந்த 'ஜில்லி' என்ற சீமை நாயிடம் அவளுக்கு அபாரமான பிரியம். தனக்கு எது கொடுத்தாலும் அதற்குப் போட்டு விட்டுத்தான் தானும் சாப்பிடுவாள். அவள் சின்னஞ்சிறு குழந்தை முதற்கொண்டு அதனிடம் குலவி விளையாடி வந்தபடியால், ஜில்லி மற்றவருக்குப் பயங்கரத் தோற்றம் அளிப்பினும், சாரதாவிற்கு அது ஒரு விளையாட்டுப் பொம்மை போலிருந்தது. அவள் நடத்தும் பொம்மைக் கல்யாணங்களுக்கும், சுவாமி ஊர்வலங்களுக்கும் ஜில்லிதான் வாகனம். ஜில்லி ஒருவருஷத்திற்கு முன்புதான் நான்கு குட்டிகள் போட்டது. யாவும் பார்ப்பதற்கு அழகாக இருந்தன. உயர்ந்த ரக ஜாதி நாயாதலால், சிறு குட்டியிலேயே சங்கரய்யர் நண்பர்கள் வாங்கிக்கொண்டு போய்விட்டனர். ஆனல் ஒரு நாய்குட்டியை மட்டும், சாரதா கொடுக்க மறுத்துவிட்டாள். அந்த நாய்க்குட்டியின், உடலெல்லாம் பால்போல் வெளுத்திருப்பினும், காதுகளும் வாலும் மட்டும் கறுப்பாய்ப் பார்ப்பதற்கு வெகு அழகாய் இருந்தது. கண்களிலே ஒரு 'வெட்டு' இருந்தது. இந்த நாய்க்குட்டியை விட மறுத்து விட்டாள்.

நாய்கள் பெரிதாக, வீட்டில் தொந்தரவாய்ப் பட்டது. சங்கரய்யர் ஒருநாள் "இரண்டு நாய்கள் வீட்டில் அதிகம்; ஆகையினல் நாய்க்குட்டியை யாருக்காவது கொடுத்துவிட வேண்டும்" என்ருர். சாரதா முதலில் பிடிவாதம் பிடித்தாள். பின்பு இணங்க வேண்டியதாயிற்று. நாயைக் கொடுப்பதில் தகராறு.

கொடுத்தால் பணக்கார இடமாகப் பார்த்துக் கொடுக்க வேண்டும், அல்லது வீட்டிலேயே வைத்திருக்க வேண்டும் என்று பிடிவாதம் பிடித்தாள் சாரதா. சங்கரய்யருக்குப் பெரிய தொல்லையாய்ப் போயிற்று. யாரையாவது அழைத்து வந்தால், ஏதாவது சொத்தை சொள்ளை சொல்லி மறுத்து விடுவாள். செல்லப் பெண்தானே! ஒன்றும் செய்ய முடியவில்லை.

"நாயைக் கொண்டுபோய் ரயில்வே போர்ட்டரிடம் கொடுப்பதைக் காட்டிலும்

கொன்றுவிடலாம் அப்பா! நம்ப வீட்டில் ரொட்டியும் பாலும் தின்று விட்டு, அங்கே போய் அரைவயிறும் கால்வயிறும் தின்று, சொரிபிடித்துத் தெருவிலே சுற்றுவதற்கா அதைக் கொண்டுபோய் அவன் கையில் கொடுக்கிறீர்கள்? நான் மாட்டவே மாட்டேன்'' என்று நாயைக் கெட்டியாய்ப் பிடித்துக் கொண்டு விட்டாள்.

கடைசியில் ஒரு கார்ப்பரேஷன் ஓவர்ஸியர் வீட்டிற்கு வந்தார். சங்கரய்யர் பேச்சு வாக்கில் நாயைப்பற்றிப் பிரஸ்தாபித்தார். ஓவர்ஸியர் மூர்த்திக்கும் ஒரு நாய் வேண்டியிருந்தபடியால் அதை எடுத்துக் கொண்டு போகச் சம்மதித்தார். ஆனால் சாரதா இணங்கினால்தானே?

''முடியவே முடியாது அப்பா. அந்த ஓவர்ஸியர் பெண்டாட்டி ஒரு சுத்த கர்நாகம். பழையதையும் மண்ணுங்கட்டியையும் போட்டு நாயைக் கெடுத்துவிடுவாள். ஆசாரம் மடின்னுட்டு வெளியிலேயே கட்டிப் போட்டுவிடுவாள் வேண்டாம்'' என்று தடுத்தாள்.

சங்கரய்யருக்குக் கோபம் தாங்கவில்லை. ''போடி பைத்தியம். உன் நாயைக் கவர்னர் வீட்டுக்கு அனுப்பிவிடலாம் என்ற எண்ணமோ? யாரை அழைத்து வந்தாலும் அது சொத்தை இது சொள்ளை யென்று குற்றம் கண்டு பிடித்துக் கொண்டிருந்தால் எப்போதுதான் முடிவு?'' என்று கூறி விட்டு நாயை எடுத்துக் கொடுத்துவிட்டார்.

சாரதா இரண்டு நாள் அழுது கொண்டிருந்தாள். சாப்பிடவே இல்லை. பெற்றோர்கள் எவ்வளவோ சமாதானம் செய்தும் தான் ஏதோ குறை செய்து விட்டது போலவே அவள் மனது உறுத்திக் கொண்டிருந்தது.

காலக் கிரமத்தில் சாரதாவிற்குக் கலியாணமாயிற்று. சங்கரய்யர் அந்தஸ்திற்குத் தகுந்தவாறே பெரிய இடத்தில் சம்பந்தமாயிற்று. சாரதாவின் கணவன் ராகவன் காலேஜில் படித்துக்கொண்டிருந்தான். காலப் போக்கினாலும், மணமான சந்தோஷத்தினாலும், சாரதா, தன் அன்பைப் பறிகொடுத்த நாய்க் குட்டியை மறந்தே போய்விட்டாள். காலச்சுழல் அவள் மனதிலிருந்து பழைய எண்ணங்களை அரித்துக்கொண்டு போய்விட்டது.

சாரதா புக்ககம் போனாள். கூடவே கஷ்டகாலமும் வந்து சேர்ந்தது. சங்கரய்யர் திடீரென்று மாரடைப்பினால் இறந்துவிட்டார். அது போதாதென்று, அவள் மாமனார், வியாபாரத்தில் பெருத்த நஷ்டத்தையடைந்து ஒடிந்துபோய்விட்டார். அந்தக் கஷ்டத்தைத் தாங்க முடியாமல், வெகு சீக்கிரத்தில் அவரும், இவ்வுலகிலிருந்து விடைபெற்றுக் கொண்டுவிட்டார். வீட்டைக் காக்கும் பொறுப்பு ராகவன் தலையில் விழுந்துவிட்டது. படிப்பை அரை குறையில் நிறுத்திவிட்டு, வேலை தேட ஆரம்பித்தான். அரை குறைப் படிப்புக்காரனுக்கு வேலை கிடைப்பதென்பது சுலபமா? மிகுந்த கஷ்டத்திற்குப் பிறகு, அவனது தகப்பனாருக்குத் தெரிந்தவர்கள் சிபார்சினால், ரயில்வேயில் உதவி ஸ்டேஷன் மாஸ்டர் வேலை கிடைத்தது. சொற்ப சம்பளத்தில், குடித்தனத்தை நடத்தத் தொடங்கினாள் சாரதா. சாமான்கள், அக விலையில் விற்ற காலத்தில், ராகவன் சொற்ப சம்பளத்தைக் கொண்டு குடும்பத்தை நிர்வாகிக்க முடியாமல் தவித்த சாரதாவிற்கு, பழைய ஞாபகங்கள் வந்தால் கண்களில் நீர் பெருக ஆரம்பித்துவிடும்.

ராகவனை ஒரு குக்கிராமத்திற்கு மாற்றி விட்டார்கள். சுற்றிலும் காடுகளும் மலைகளும் நிறைந்த காட்டுப் பிரதேசம் அது. அவ்விடத்தில் குடும்பத்தை நிர்வகிக்க இன்னும் கஷ்டமாகிவிட்டது. மேலும் சாரதா ஒரு குழந்தைக்குத் தாயாகிவிட்டதினால், அந்தப் பொட்டல் காட்டில் குழந்தையை வைத்துக்கொண்டு சமாளிக்க முடியவில்லை. குழந்தைக்கு வயிற்றுவலி என்றால் டாக்டர் (ரொம்ப மட்டமானவர்கூட) நான்கு மைல் தூரத்தில் இருந்தார். எல்லாவற்றையும் உத்தேசித்து, தன் ஊருக்கு அருகிலேயே மாற்றலாகிவிட்டால், நன்றாயிருக்குமென ராகவன் நினைத்து, அதற்காக மிக்க பிரயத்தனம் செய்துகொண்டிருந்தான்.

ராகவன் ஒருநாள் மாலை ரயில்வே குவாட்டர்ஸுக்குத் திரும்பி வரும்போது, இடீரென்று வானம் இருண்டு தடதடவென்று மழைபெய்ய ஆரம்பித்துவிட்டது. அகஸ்மாத்தாகப் பக்கத்துக் கிராமத்தில் 'காம்ப்' செய்திருந்த ரயில்வே D.T.S. உம் அவர் மனைவியும், அந்தப் பக்கமாய் உலாவப் போயிருந்தபடியினால் மழையில் அகப்பட்டுக்கொண்டுவிட்டனர். அவர்கள் அகப்பட்டுக்கொண்டதைக் கண்ட ராகவன் அவர்களைத் தன் குவாட்டர்ஸுக்கு அழைத்துக்கொண்டு சென்றான். சாரதா, அந்த அம்மாளை நன்கு உபசரித்து, அன்னியோன்யமாய்ப் பேசினாள்.

அந்த ரயில்வே D. T. S. பெயர் ராமலிங்கம். அவர் அந்த வட்டாரங்களை 'இன்ஸ்

பெக்ஷன்' செய்வதற்காக ராகவன் ஸ்டேஷனுக்கு அடுத்த ஸ்டேஷனில் 'காம்ப்' செய்திருந்தார். அதற்கும் இவர்கள் குவாட்டர்ஸுக்கும் மூன்றுமைல் இருக்கும்.

பேச்சு ஸ்வாரஸ்யத்தில் சாரதாவும், ஜானகியும் (ராமலிங்கத்தின் மனைவி), மிகவும் சிநேகமானார்கள். ஜானகி புறப்பட்டுப் போகும் போது, தன்னுடைய 'காம்ப்'புக்கு வந்துவிட்டுப் போகவேண்டுமென்று வற்புறுத்தவே, சாரதாவும் ஒப்புக்கொண்டு விட்டாள். ராகவனுக்கு இது பெரிய அதிர்ஷ்டம் என்றுதான் சொல்ல வேண்டும். கும்பிடப் போன தெய்வம் குறுக்கே வந்த மாதிரியாக, யாரிடம்போய், சிபார்சு வாங்கவேண்டுமோ. அவரே இவனுக்கு அறிமுகமாகி விட்டார்.

சாரதா, மாற்றல் செய்துகொள்ள இதுதான் சமயமென்று ராகவனைத் தொந்தரவு செய்யவே, ஒரு வாரம் கழித்து, ராமலிங்கத்தின் குவாட்டர்ஸுக்குப் போனார்கள். ஜானகி சுபாவத்திலேயே கலகலப்பான பேர்வழியாதலால், வெகு அன்பாய் உபசரித்து, வார்த்தையாடினாள்.

D. T. S. குவாட்டர்ஸ் ஒரு பெரிய பங்களா. தோப்பும் துரவுமாய், ஆட்கள் கைகட்டிக் காத்துக் கிடந்தனர். எல்லா வேலையையும். தானே செய்து கஷ்டப்பட்டுக் கொண்டிருந்த சாரதாவுக்கு, ஜானகி ஆட்களை மேய்த்து வேலை வாங்குவதைக் கண்டதும், மனதில் சுறுக்கென்றது. அவளும் ஒரு காலத்தில் செல்வத்தில் புரண்டவளானதினால், அவளுக்கு இது நன்றாய்ப் பட்டது.

தோட்டத்தில் சென்று உலாவப் போனதுமே, நாய் ஒன்று பயங்கரமாய்க்குலைத்தது. சாரதா பயந்து போய்விட்டாள். ஜானகி வேலைக்காரன் வேலுவைக் கூப்பிட்டு, "வேலு ரோஸிக்கு ஓவல்டின் வைச்சாச்சா?" என்று கேட்டாள்.

வேலு "அப்படியே வெச்சேனுங்கம்மா; ஆனா அந்த நாய், காலமே வெச்ச ரொட்டியும் பாலையுமே திங்கலையே. இதே எங்கம்மா குடிக்கப் போவுது" என்றான்.

ஜானகி திகிலடைந்து "ரோஸிக்கு என்னடா உடம்பு? கழுதை, அப்பவே ஏன் எங்கிட்டே சொல்லலே?" என்று கோபித்துக் கொண்டாள்.

சாரதாவிற்கு இது சிரிப்பாயிருந்தது. தானும் இந்தமாதிரி நாய்களிடம். உயிரை விட்டுக் கொண்டிருந்ததை ஞாபகப் படுத்திக்கொண்டாள். ஆனால் அதெல்லாம் அந்தக் காலம். இப்பொழுது தான் பெற்ற குழந்தையையே கவனிக்க முடியவில்லையே? நாய்களுக்கு முடியுமா?

ஜானகி பரபரப்புடன் நாய் இருந்த காரேஜுக்கு ஓடினாள். சாரதாவும் பின் தொடர்ந்தாள். ஒரு மெத்தையின்மேல் நாய் சுருண்டு படுத்துக்கொண்டிருந்தது. சுற்றிலும் ரொட்டித் துண்டுகளும் பாலும் இறைந்துகிடந்து, நாய் அவற்றைத் தொடாததை அறிமுகப் படுத்தின. ஜானகி அதை அன்புடன் தடவிக்கொடுத்து "ரோஸி ரோஸி, உனக்கு என்ன உடம்பு? சொல்லடி" என்று கொஞ்சினாள். பின்பு சாரதாவை நோக்கி "இந்த நாயிடம் என் உயிரையே வைத்திருக்கிறேன் மாமி" என்று சொன்னபோது சாரதாவிற்குத் தன் பழைய ஞாபகங்கள் குபீரென்று வந்தன.

சாரதா மறுபடியும் நாயை உற்று நோக்கியபோது, கொஞ்சம் எங்கேயோ பார்த்த மாதிரி இருந்தது. மறுபடியும் மறுபடியும்


## காவேரி ஏஜண்டுகள்:

**ஆற்காடு**
M. E. யூசப்ஷெரீப் சாகிப்
ஜவுளி வியாபாரம்

**பெங்களூர்**
K. V. வெங்கட்ரமணன்
7. N. No. 2nd. ரோடு
காவல்ரி ரோடு கிராஸ்

**மாயவரம்**
S. B. மணியன்
15. துபாஷ் தெரு

**நாக்பூர்**
V. நடேசன் C/o
B. S. Dixitar & Co
அப்யாங்கர் ரோடு
சித்தபால்டி

**உடுமலைப்பேட்டைக்கு ஏஜண்ட் தேவை**

மூளையைக் குழப்பிக் கொண்ட பிறகு சட்டென்று ஞாபகம் வந்தது. ஜில்விக்குப் பிறந்த குட்டியொன்று இதே மாதிரியிருந்தது. உடலெல்லாம் பால் வெள்ளை. வாலும் காதும் கறுப்பு. அந்தக் குட்டியாய்த்தானிருக்க வேண்டுமென்று அவளுக்குத் தோன்றியது. ஜானகியை நோக்கி "மாமி, இந்த நாய் எப்படி வந்தது உங்களிடம்?" என்று கேட்டாள்.

ஜானகி, "பட்டணத்தில் என் அக்கா கமலம் இருக்கிருள். அவள் புருஷன் கிருஷ்ணமூர்த்தி கார்ப்பரேஷன் ஓவர்ஸியர். அவர் ஒருநாள் இதை ஒருவர் வீட்டிலிருந்து எடுத்துக்கொண்டு வந்திருந்தார். அப்போதிலிருந்து நானே வளர்த்துக்கொண்டு வருகிறேன்" என்ருள். அதைக் கொண்டு வரும்போது "கழுத்தில் ஒரு பட்டு ரிப்பன் கட்டியிருந்ததா?" என்று கேட்டாள் சாரதா.

ஜானகி ஆச்சர்யத்துடன் "ஆமாம், அது எப்படி உங்களுக்குத் தெரியும்?" என்று கேட்க, சாரதா மழுப்பிவிட்டாள். அவள் சந்தேகம் நிவர்த்தியாயிற்று.

அந்த நாய்க்கு நடந்த உபசாரத்தைப் பார்த்தபோது சாரதாவிற்கு ஏனோ துக்கம் துக்கமாய் வந்தது. தலை தெறிக்கும்படி ஒரு வேலையாள் வெந்நீர் கொண்டுவர ஓடினன். இன்னொருவன், மருந்துடப்பாக்களை எடுக்க ஓடினன். ஜானகி மிகவும் சிரத்தையுடன் நாயைத் தூக்கி வெந்நீர் கொட்டி, குளிப்பாட்டித் துடைத்து விட்டாள்.

சாரதா வெறுப்புடன் முகத்தை வேறு பக்கம் திருப்பிக் கொண்டு விட்டாள். அவள் மனதில் ஒருவிதமான பொருமை எழுந்ததென்றே சொல்ல வேண்டும். தான் பெற்ற குழந்தை, அதற்குச் சரியானபடி சிசுருஷை செய்து போஷிக்க முடியவில்லை. இந்த நாயையும் அவள்தான் வளர்த்தாள். ஆனல் அதற்கு நடக்கும் சிசுருஷைதான் என்ன? அன்றைக்கு அவள் இந்த நாய்க்குட்டியை நல்ல இடம்பார்த்துக் கொடுக்கவில்லை என்று பிடிவாதம் செய்தது நினைவிற்கு வந்தது. கூடவே அவள் அம்மா சொன்ன வாக்கியங்களும் நினைவிற்கு வந்தன. "அவரவர்கள் போகிறவழியில் போகிருர்கள். நீயும் நானும் என்ன செய்யமுடியும்?"

அவள் சொன்ன வார்த்தைகளை ரத்தினத்தில் இழைக்கலாம். அவற்றில் அவ்வளவு உண்மை இருந்தது. கண்கூடாகப் பார்த்த பிறகு கூடவா அவளுக்குச் சந்தேகம் இருக்கப்போகிறது.? நாயைத் திரும்பி ஒரு முறை பார்த்தாள். அதன் கண்களில் ஏளனம் தொனித்த மாதிரி அவளுக்குப் பட்டது. பார்க்கப் பிடிக்கவில்லை. "நாழியாய்விட்டது, போய்ட்டுவாரேன் மாமி" என்று புறப்பட்டாள்.

ராகவன் அவளுக்காகத் தயாராகக் காத்துக் கொண்டிருந்தான். அவன் முகத்தில் சந்தோஷம் தாண்டவமாடியது. "அப்பப்பா, பெண்களென்ருல் பேச்சுக்குப் பிறந்தவர்கள் போலிருக்கிறது. கால் கடுக்க நானும் அரைமணியாய்க் காத்துக் கொண்டிருக்கிறேனே" என்று அன்புடன் கடுகடுத்தான். மற்றச் சமயங்களில் வீண் சண்டைக்கு இது சரியான காரணமாயிருந்திருக்கும். ஆனல் அச்சமயம் சாரதாவின் மனதில் சப்பென்று விழுந்தது. பெரிய 'ஹூம்'' ஒன்றைப் போட்டுவிட்டுக் கூடக் கிளம்பினுள்.

வழியில் ராகவன் "நம்முடைய நல்ல காலந்தான் சாரதா, ராமலிங்கம், என்னைப் பட்டணத்திற்கே பிரமோஷன் செய்து அனுப்பி விடுகிறேன் என்று சொன்னுர் எப்படி...?" என்று எக்களித்தான். சாரதாவின் மௌனம் அவனுக்கே வியப்பையளித்தது. அவன் மனதில் மோதிய அலைகளை அவன் எங்ஙனம் அறியக்கூடும்? உண்மையில் அவள் மனதில் தோன்றிய எண்ணத்தை, "பொருமை'' என்று சொல்வதா என்று அவளுக்கே புரியவில்லை. உலகத்தில் யாருக்காக யார் அனுதாபப் பட்டு என்ன பிரயோசனம். அந்த நாய்க்குட்டியை மண்ணுங்கட்டியும் எச்சிலும், தின்னும்படி விட்டுவிட்டோமே என்று அன்று அவள் பெற்ருேரிடம் சண்டைபிடித்தாள். ஆனல் அவள் கண்முன்னுலேயே அந்த நாய்க்கு வந்த அதிர்ஷ்டத்தையும் பார்த்து விட்டாள். இதில் யாருக்கு யார் அனுதாபப்படுவது?

198081

Edited & Published by N. R. Ramanujan & Printed by S. Rangaswami
at the Cauveri Colour Press, Besant Road, Kumbakonam.

# BMB மிஷீன் கலப்பைகளின் வெளிப்படையான உண்மைகள்

1. ஒரு நாளைக்கு சுமார் 2 ஏக்கரா பூமியை ஏர் உழும் 10 ஏக்கராவை பரம்படிக்கும்.
2. களைவெட்டுதல், பயிரிடுதல் விதை விதைத்தல், உரமிடுதல் முதலிய வேலைகளைச் செய்யவும்.
3. சுமை இழுக்கவும், பெல்டினால் ஓட்டப்படும் யந்திரங்களை உபயோகிக்கவும் உதவும்
4. மிகக் குறைந்தசெலவிலும், அதிக கவனிப்பில்லாமலும், எல்லாவித கால நிலைகளிலும் எவ்வித தொந்தரவும் கொடுக்காமல் உழைக்கும்



1. குதிரை ஓட்டம (H.P.)
3. குதிரை ஓட்டம் (H.P.)
6. குதிரை ஓட்டம் (H.P.)

முழு விவரங்களுக்கு கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும்

## ஸிம்ஸன் & கம்பெனி லிமிடெட்.

மவுண்ட்ரோட். மதராஸ்.

கிளைகள்: பங்களூர், உதகமண்டலம், திருச்சிராப்பள்ளி, ஹைதராபாத் (Dn).

Regd. No. M. 4405 CAUVERI



டி. எஸ். ஆர். கோகுல் தைலத்தை
தொடர்ந்து உபயோகித்த இம்மங்கை தனது கூந்தல்
அடர்ந்து கவர்ச்சியாக வளர்ந்திருப்பதைக் கண்டு
அகமகிழ்கிறாள்

இம் மகிழ்ச்சியை நீங்களும்
- எளிதில் அடையலாம் -

டி. எஸ். ஆர்.

# கோகுல் கூந்தல் தைலம்

## சந்தனாதித் தைலம், அரைக்கீரை விதைத் தைலம்

இவைகள் குற்றால ஸ்நானத்தின் குளிர்ச்சிக்கு நிகரானவை!

மதராஸ் ஸிடி ஏஜண்டு **புஷ்பவனம் ஸ்டோர்ஸ்** பைக்ராப்ஸ் ரோடு, திருவல்லிக்கேணி.

# T. S. R. & CO. PERFUMERS KUMBAKONAM

Cauveri Colour Press, Kumbakonam.